# நிமிர்வோம்

தடைகளைத் தகர்த்து...

மார்ச் 2017 | ரூ.20

## பெரியாரின் விடுதலைப்
# பெண்ணியம்



ஈஷா மையத்தில்
என்ன நடக்கிறது?




## சங்க இலக்கியங்களில் வைதீக எதிர்ப்பு

# புல்பூண்டுக்கு ‘ஆன்மா’ உண்டா?



**ஆத்மா என்பதில்....**

1. மனித ஆத்மா மாத்திரம்தான் மத சம்பந்தங்களுக்கு— அதாவது கடவுளுக்கும் ஆத்மாவுக்குமுள்ள சம்பந்தத்திற்காக ஏற்பட்ட மதங்களுக்குச் சேர்ந்ததா? அல்லது புல், பூண்டு, அணு, ஜந்து, ஊர்வன, பறப்பன, நகர்வன , நீர் வாழ்வன முதலிய ஜந்துக்களின் ஆத்மாக்கள் என்பவைகளும் அதில் சேர்ந்தவைகளா?
2. இந்தப்படி மனித ஆத்மாவுக்கும் மற்றைய ஆத்மாக்களுக்கும் வித்தியாசங்கள் உண்டா? அல்லது எல்லாம் ஒரே தன்மையானதுதானா?
3. மனித ஆத்மா, மனித சரீரத்தில் இருக்கும் போது அது செய்த வினைக்கு ஏற்ற பலனை, சரீரத்தை விட்டுப் பிரிந்தபிறகு அனுபவிக்கின்றது என்பது போலவே மற்ற புல், பூண்டு, ஊர்வன, பறப்பன , நகர்வன, நீர் வாழ்வன, அனு ஜந்துக்கள் முதலியவைகளின் ஆத்மாக்களும் சரீரத்தை விட்டு விலகிய பிறகு அவைகளின் வினைக்குத் தகுந்த பலனை அனுபவிக்கின்றனவா?
4. இந்த ஆத்மாக்களில், மேற்கண்ட ஜந்துக்கள் ஒவ் வொன்றுக்கும் சிறிது சிறிது வித்தியாசங்கள் குணங்கள் தன்மைகள் முதலியவைகள் — அதாவது புலன் வித்தி யாசங்கள் அறிவு வித்தியாசங்கள் உள்ளது போலவே, மனித ஜீவனும் மற்ற ஆத்மாக்கள் போலவே இருப்பதோடு புலன் அறிவு விஷயத்தில் சற்று கூடுதல் வித்தியாசம், மாறுதல் முதலியவைகள் உடைய ஜந்துவா?
5. உலகத்திலுள்ள மேற்கண்ட ஜந்துக்கள் எல்லாம் வேறு, மனித ஜந்து மாத்திரம் வேறு என்று சொல்லும்படியான வேறுபாட்டை உடைய ஜந்துவா மனிதன்?

எப்படியெனில் மேஜை, நாற்காலி, பெஞ்சு, ஊஞ்சல், என்று சொல்லப்படுவதான வஸ்துக்கள், மரம் என்னும் ஒரே மூலப் பொருளாலும், இரும்பு என்னும் ஒரே உப மூலப் பொருளாலும் செய்யப்பட்டிருந்தாலும், தனித்தனி வடிவத் தோற்றத்தினால் தனித்தனிப் பெயரை உடையதாகி இருப்பது போலவே, உலக வஸ்துக்கள் வடிவம், உருவம், சாயல், குணம் , நிலை முதலாகிய பேதத்தால், பலவிதப் பெயர்களை உடையதாயிருந்து, பலப்பல காரணங்களால் அதே வஸ்துக்கள் வேறு பல பெயர்களையும் அடைந்தாலும் , முடிவில் அவற்றின் மூலப் பொருள்களின் பெயர் எல்லாவற்றிற்கும் ஒரே (தாது) பெயருடைய வஸ்துவாகவேதான் இருக்கும்.

**– பெரியார்**

**(‘மோட்சம்-நரகம்-மோசடி’... நூலிலிருந்து)**

# நிமிர்வோம்

தடைகளைத் தகர்த்து...

**திராவிடர் விடுதலைக் கழக மாத இதழ்**

**மார்ச் 2017 | ரூ.20**

www.dvkperiyar.com

nimirvomdvk@gmail.com

**ஆசிரியர் குழு**

**கொளத்தூர் மணி**

**விடுதலை இராசேந்திரன்**

**அலுவலக நிர்வாகம்**

*இரா.உமாபதி*

*இரா.செந்தில்*

*ந.அய்யனார்*

**இதழ் வடிவமைப்பு**

*மெய்யருள்*

**அச்சாக்கம்**

*எம்.கே.சி.பிரிண்டர்ஸ்,*

*சென்னை14*

**அலுவலக முகவரி**

*95, டாக்டர் நடேசன் சாலை*

*அம்பேத்கர் பாலம்*

*மயிலாப்பூர், சென்னை 600 004*

*தொலைபேசி எண்:*

**044-24980745**

*அனைத்துத் தொடர்புகளுக்கும்*

**இரா.உமாபதி**

*72992 30363*


## தேசபக்தி எனும் ஆயுதம்

கருத்துரிமையை எதிர்ப்பவர்களின் பதுங்கு குழியாகிவிட்டது 'தேசபக்தி' 'தேசம்' சூறையாடப்படுவதை எதிர்த்தாலோ, தேசத்தின் மக்கள் தங்களுக்கான உரிமை அடையாளங்களை வலியுறுத்தினாலோ தேசத்துக்கு போர் வேண்டாம் என்று பேசினாலே) 'தேச விரோதிகள்' என்ற முத்திரை குத்தப்பட்டு விடுகிறது.

டெல்லி பல்கலைக்கழக வளாகங்களில் மதவெறியை எதிர்த்தாலே 'தேசவிரோதிகள்' என்று அகில பாரதிய வித்யார்ந்தி பரிஷத் மாணவர் அமைப்பு வன்முறைகளில் இறங்கி வருகிறது. டெல்லி ராம்ஜஸ் கல்லூரியில் கலாச்சார மாற்றம் என்ற கருத்தரங்கில் பேச அழைக்கப்பட்டிருந்தார் ஜவஹர்லால் பல்கலைக்கழக மாணவர் அமைப்பை சார்ந்த உமர்காபீத், அநீதியாக தூக்கிலிடப்பட்ட அப்சல் குருவுக்கு அவரது நினைவு நாளில் இரங்கல் தெரிவித்ததற்காக அதே பல்கலைக்கழக மாணவர் பேரவைத் தலைவர் கன்யாகுமாருடன் சேர்த்து தேசவிரோத சட்டத்தில் கைது செய்யப்பட்டவர், இப்போது பிணையில் வெளிவந்திருக்கிறார். இந்தியாவில் எத்தனையோ பேர் மீது தேசவிரோத சட்டம் பாய்ந்திருக்கிறது, அதற்காக அவர்கள் பேச்சுரிமையையே தடைப் படுத்த வேண்டும் என்பது தான் தேசப்பக்தியின் அடையாளமா? ஆர். எஸ். எஸ் மாணவர் அமைப்பான 'ஏபிவிபி' கருத்தரங்கை நடத்த அனுமதிக்க மறுத்து வன்முறையில் இறங்கியது. புது டில்லி ஸ்ரீராம் கல்லூரியின் மாணவி குர்மெகர் கவுர் கருத்துரிமைகளை மறுக்கும் பார்ப்பனிய பாசிசத்துக்கு எதிராக தனது முகநூலில் கருத்துக்களை வெளியிட்டார். 1999ம் ஆண்டு நடந்த கார்கில் போரில் உயிரிழந்த ராணுவத் தளதியின் மகள். இவர் தன்னுடைய சமூக வலைதளப் பக்கங்களில் 'ஏபிவிபி'யை கண்டித்து எழுதினார். அந்த




பெண்ணின் பூர்வீகத்தை ஆராயத் தொடங்கி 'ஏபிவிபி' கடந்த ஆண்டு 'யு டியூபில்' அவர் வெளியிட்ட ஒரு வீடியோ பதிவைக் கண்டுபிடித்தனர். அதில் போருக்கு எதிராக தன் கையில் எழுதிய வாசகங்கள் கொண்ட அட்டைகளை ஒவ்வொன்றாக தானே கைகளில் பிடித்து காட்சிப்படுத்தியிருந்தார்.

அதில் ஒரு வாசகம் "எனது தந்தையை கொன்றது யுத்தம், பாகிஸ்தான் அல்ல" என்பது, அவ்வளவுதான். பாஜக நாடாளுமன்ற உறுப்பினர் பிரதாப் சிம்ஹா, இந்தப் பெண்ணை தாவூத் இப்ராகிமோடு ஒப்பிட்டு பேசி மிரட்டினார். மத்திய உள்துறை இணை அமைச்சர் கிரண்ரிஜூ ஆவேசமாக எச்சரித்தார். கிரிக்கெட் விளையாட்டுக்காரர் வீரேந்திர ஷேவாக்கோ குத்துச்சண்டைக்காரர் அந்த பெண்ணை கேலி செய்தனர். பாலியல் வன்முறைக்கு உள்ளாக்குவோம், கொலை செய்வோம் என்று 'தேசபக்தர்கள்' சமூக தளங்களில் மிரட்டுகிறார்கள். தேசபக்திக்காக ஒரு பெண்ணை ' பாலியல் வன்புணர்வு' செய்யவும் தயங்கமாட்டோம் என்று கூறுவதன் அர்த்தமென்ன ? இதற்கு பெயர்தான் தேசபக்தியா ? இப்படியே போனால் இந்தியாவில் 'தேச விரோதிகள் ' எண்ணிக்கைத்தான் அதிகமாகும். சுயசிந்தனையுடன் குர்கமர்கவுர்கள் துணிந்து வெளியே வந்திருப்பதை பாராட்ட வேண்டும்.

# ஆன்மீகமா? வணிகமா? ஈஷா மய்யத்தில் என்ன நடக்கிறது?

ஜக்கி வாசுதேவ் போன்ற சாமியார்கள் இந்த சமூகத்திலிருந்து அழித்து ஒழிக்கப்பட வேண்டிய தீய சக்திகள் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இருக்க முடியாது. இவர்கள் ஏன் தீய சக்திகள் தெரியுமா ? பாஸ் வாங்கி, அதை கழுத்தில் மாட்டிக் கொண்டால்தான் உள்ளே செல்ல முடியும். உள்ளே சென்றால் இருபது அடிக்கு ஒரு முறை பாஸை பார்த்து செக் பண்ணுவார்கள். உள்ளே சென்றால், கண்ணை மூடிக்கொண்டு மொட்டை அடித்துக் கொண்டு, ஆழ்ந்த தியானத்தில் பல இடங்களில் அமர்ந்திருப்பார்கள். பாதாள அறை போல இருக்கும் ஒரு அறைக்குள் லிங்கம் ஒன்று அமைக்கப்பட்டிருக்கும். அந்த லிங்கத்தை தியானலிங்கம் என்று கூறுகிறார்கள். அந்த தியானலிங்கத்தை சுற்றி பலர் அமர்ந்து தியானம் செய்து கொண்டிருப்பார்கள்.

*அந்த தியானலிங்கத்தின் அருகில் சென்றாலே தியானம் செய்தது போல மன அமைதி கிடைக்கும் என்று கூறுகிறார் ஜக்கி வாசுதேவ். அதன் உள்ளே சென்று ஜக்கி சொன்னது போல 20 நிமிடம் அமர்ந்திருந்தும் எந்த மன அமைதியும் தோன்றவில்லை. அந்த லிங்கம் மெர்குரியால் செய்யப்பட்டது என்று சத்குருவே அறிவிக்கிறார்.*


*மெர்குரி என்பது ஒரு விஷப்பொருள். சுற்றுச்சூழலுக்கு பெரும் ஆபத்தானது. மெர் குரியை சுவாசித்தாலோ, வாய் மூலம் உட் கொண்டாலோ, மூளை பாதிக்கப்படும் என்கிறது, ஐக்கிய நாடுகளின் சுற்றுச் சூழல் அமைப்பு. அறையில் தட்பவெட்பத்தில் அறைக்குள் இருக்கும் மெர்குரி சிறிய அளவே வெப்பம் உயர்ந்தாலும் மெர்குரி ஆவியாகிவிடும். மிக எளிதாக மனித உடலில் நுழைந்து விடும். மெர்குரி எவ்விதமான மணமும் இல்லாத காரணத்தால், மெர்குரியை சுவாசிக்கிறோம் என்பதே ஒருவருக்கு தெரியாது. கனடாவைச் சேர்ந்த கால்கரி பல்கலைக்கழகம் மெர்குரி எந்த வகையில் மூளையை பாதிக்கும் என்பதை ஆராய்ந்து அறிக்கை வெளியிட்டுள்ளது.*



இந்தியாவில் மெர்குரி பயன்பாட்டை கட்டுப் படுத்துவதற்கு எவ்விதமான சட்ட திட்டங்களும் இல்லாத காரணத்தால், இத்தகைய கடுமையான சுற்றுச்சூழல் பாதிப்பை ஏற்படுத்தும் மெர்குரியால் நான் ஒரு சிலையை உருவாக்கியிருக்கிறேன் என்று வெளிப்படையாக அறிவிக்கிறார் ஜக்கி. இத்தகைய கடும் பாதிப்பை ஏற்படுத்தும் மெர்குரியால் செய்யப்பட்ட லிங்கம் அடங்கிய குளத்தில் குளித்தால், தீராத வினையெல்லாம் தீரும் என்று அறிவிக்கிறார் ஜக்கி.

ஈஷா மையத்தினர் வெளியிட்டுள்ள வீடியோவிலேயே மெர்குரியை அவர்கள் கையால் கையாள்வது வெளிப்படையாக தெரிகிறது. ஏற்கனவே இருக்கும் மெர்குரியால் அமைக்கப்பட்ட தீர்த்தகுண்டம் போதாது என்று, புதிதாக சூர்யகுண்டம் என்று மற்றொரு மெர்குரி சிலை அடங்கிய குளத்தை உருவாக்கியிருக்கிறார் ஜக்கி. மெர்குரி பயன்பாட்டில் உள்ள ஆபத்துகளையும், அதை தவிர்ப்பதற்கான வழிமுறைகளையும், பயன்படுத்துவதற்கான விதி முறைகளையும் மத்திய மாசு கட்டுப்பாட்டுத் துறை உருவாக்கியிருக்கிறது. மெர்குரியோடு நெருங்குவது ஆண்மைக் குறைவை ஏற்படுத்தும் என்று மத்திய அரசின் மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின் அறிக்கையே தெரிவிக்கிறது. ஆனால், இதையறியாத பல்வேறு பக்தர்கள் தாங்கள் கூவாத சேவலாகப் போகிறோம் என்பதையே அறியாமல், ஜக்கி வாசுதேவ் கூறியபடி மெர்குரி சிலை இருக்கும் குளத்தில் நீராடி மகிழ்கின்றனர். கோவையில் உள்ள ஈஷா மையத்தில் நீங்கள் நுழைந்தால், அங்கே ஜக்கியின் படங்கள், அவர் படம் பொறித்த பனியன்கள், வேட்டிகள், மாலைகள், நகைகள், லிங்கங்கள் உள்ளிட்ட ஏராளமானவை விற்பனை செய்யப்படும். இது ஒரு புறம் என்றால், மறுபுறம், பிஸ்கட், மூலிகை தேயிலை, ஊறுகாய் என்று உணவுப் பொருட்கள் ஒரு புறம் விற்பனை செய்யப்படும். பைரவி என்று வெறும் இரண்டு கண்கள் படம் மட்டுமே இருக்கும். அதன் விலையைக் கேட்டால் ஆயிரக்கணக்கில் சொல்வார்கள். இது போக உத்திராட்ச மாலை, ஸ்படிக லிங்கம் என்று பல்வேறு பொருட்கள் ஒரே நேரத்தில் விற்பனை செய்யப்படும். இவற்றில் நீங்கள் எதை வாங்கினாலும் ரசீது தரப்படாது. மீறி ரசீது கேட்டீர்கள் என்றால், நன்கொடைக்கான ஒரு ரசீது தரப்படும். அந்த ரசீதில், ஈஷா என்ற அறக்கட்டளைக்கு நீங்கள் நன்கொடை வழங்கியுள்ளீர்கள் என்றும், அந்த நன்கொடை, இந்திய வருமான வரித்துறை சட்டம் பிரிவு 80நின் படி, வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது என்றும் குறிப்பிடப்பட்டிருக்கும். அரசாங்கத்தின் வரிச்சலுகையில் நகை வியாபாரம் செய்யும் ஜக்கி 80G இந்திய வருமானவரிச் சட்டத்தின் கீழ் விதிவிலக்கு பெற வேண்டுமென்றால் முக்கியமான ஒரு நிபந்தனை, எந்த ஒரு குறிப்பிட்ட மதத்தின் நலனையும் பிரதிபலிக்கக்கூடிய வகையில் சலுகை பெறும் நிறுவனம் செயல்படக்கூடாது என்பதே. லிங்கமும், ருத்திராட்சமும் கிறித்துவர்களும், இஸ்லாமியர்களும் பயன்படுத்துகிறார்களா என்ன ? அப்பட்டமாக இந்து மதத்தின் நலனைப் பாதுகாத்து ஈஷா மையம் நடத்தி வரும் ஜக்கி என்ற அயோக்கியனுக்கு, இந்த நாள் வரை வருமானவரிச் சலுகை அளித்து வருகிறது வருமானவரித்துறை. சமீபத்தில் கோவை மாவட்டம் ஆலந்துறை காவல் நிலையத்தில், ஈஷா மையத்துக்கு எதிரான ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டது. அவர் தனது புகாரில் பின் வருமாறு தெரிவிக்கிறார்.

**மெர்குரியோடு நெருங்குவது ஆண்மைக் குறைவை ஏற்படுத்தும் என்று மத்திய அரசின் மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின் அறிக்கையே தெரிவிக்கிறது. ஆனால், இதை யறியாத பல்வேறு பக்தர்கள் தாங்கள் கூவாத சேவலாகப் போகிறோம் என்பதையே அறியாமல், ஜக்கி வாசுதேவ் கூறியபடி மெர்குரி சிலை இருக்கும் குளத்தில் நீராடி மகிழ்கின்றனர்.**



ஸ்வீடன் நாட்டைச் சேர்ந்த ஜெயபால் என்ற பெண்மணி தனது புகாரில், நான் 16 டிசம்பர் 2014ல் இந்தியா வந்தேன். நான் இந்தியா வந்தது, வெள்ளியங்கரி மலைப்பகுதியில் அமைந்துள்ள ஈஷா மையத்தின் யோகா மற்றும் யந்த்ரா நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக வந்தேன். அந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக ஈஷா மையம் என்னை நாலரை லட்சம் கட்டச் சொன்னார்கள். அதன்படியே நானும் நாலரை லட்சம் கட்டினேன். நான் கட்டிய நாலரை லட்சத்தை நன்கொடையாக பதிவு செய்வார்கள் என்பது எனக்குத் தெரியாது. நன்கொடை

என்பது விரும்பி, தாமாக முன்வந்து தரவேண்டும். யந்த்ரா என்ற அந்த நிகழ்ச்சி 21 டிசம்பர் 2014 அன்று நள்ளிரவில் நடைபெற்றது. அந்த நிகழ்ச்சி முடிவுற்ற பிறகு மேலும் 50 ஆயிரம் கேட்டார்கள். அந்த 50 ஆயிரம் அந்த யந்த்ராவை விமானம் மூலமாக ஸ்வீடன் அனுப்புவதற்காக என்று தெரிவித்தார்கள். எனக்கு அந்த யந்த்ராவே வேண்டாம் என்று நான் கூறியபோதும், 50 ஆயிரம் கட்டியே தீர வேண்டும் என்று வற்புறுத்தினார்கள். ஏற்கனவே நாலரை லட்சம் கட்டிய என்னை மேலும் 50 ஆயிரம் கட்ட வேண்டும் என்று அவர்கள் வற்புறுத்தியது என்னை கடும் அதிர்ச்சியடையச் செய்தது. அந்த யந்த்ராவை எடுத்துப் பார்த்தபோது, அது 165 கிலோ எடை இருந்தது என்பதும், அது உடைந்திருந்தது என்பதையும் கண்டு பிடித்தேன். மேலும் மேலும் என்னிடம் பணம் கேட்டு வற்புறுத்தியபோதுதான் நான் இவர்கள் ஏமாற்றுப் பேர்வழிகள் என்பதை உணர்ந்தேன். உணர்ந்ததும் வருத்தத்தோடு நான் கட்டிய நாலரை லட்சம் பணத்தை திருப்பித் தாருங்கள் என்று அவர்களிடம் கேட்டேன். பணம் திருப்பித் தர முடியாது என்று என்னோடு வாதத்தில் இறங்கியதோடு, மேலும் 50 ஆயிரம் தர வேண்டும் என்று தொடர்ந்து வற்புறுத்தினார்கள்.

என்னுடைய நாலரை லட்சத்தை பெற்றுத் தருவதோடு, ஈஷா மையத்தின் மேல் நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக் கொள்கிறேன் என்று அவர் தனது புகாரில் தெரிவித்துள்ளார்.

இந்தப் புகாரையடுத்து, குற்ற எண் 1/2015 என்ற எண்ணில், ஆலந்துறை காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டது. இதற்குப் பின் என்ன நடக்கும் ?

வழக்கம் போலவே, புகாரளித்தவருக்கு பணத்தை திருப்பி அளித்து, சமாதானம் செய்து கொண்டனர் ஈஷா மையத்தினர். இதில் கவனிக்க வேண்டிய விஷயம் என்னவென்றால், வெளிநாட்டில் வாழும் ஒருவரை வசியம் செய்து, அவரது சேமிப்புகளை வந்து ஈஷா மையத்தில் கொட்டும் அளவுக்கு மனமாற்றம் செய்யும் வலிமையை ஜக்கி பெற்றிருக்கிறார் என்பதே. கடந்த வருடம், சென்னை மாம்பலத்தில் ஈஷா மையத்தின் ஒரு வார யோகா வகுப்புக்கு சென்றிருந்தபோது, யோகா கற்றுக்கொடுத்த, ஒரு பெண் வகுப்பு நடக்கையில் தன்னைப் பற்றி அறிமுகப்படுத்திக் கொண்டார். "நான் இன்போசிஸ் நிறுவனத்தில் மிக உயர்ந்த சம்பளத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தேன். டீம் லீடர் அளவுக்கு வளர்ந்தேன். ஆனால், அப்போது இல்லாத நிம்மதியை ஈஷா மையத்தில் சேர்ந்ததும் அடைந்திருக்கிறேன்." என்று கூறினார்.

செக்ஸ் போன்ற இயல்பான உணர்ச்சிகளை கட்டுப்படுத்தி பிரம்மச்சர்யத்தை கடைபிடிப்பதே உண்மையான ஞானம் என்று என்று ஜக்கி கூறுவதன் அடிப்படையில் தங்கள் வேலை, குடும்பம், மனைவி என்று அனைத்தையும் துறந்து, ஜக்கியின் ஆசிரமத்தில் முழு நேர தொண்டர்களாக மாறுகிறார்கள். ஜக்கியின் ஆசிரமத்தில் சேர்ந்ததால் நாசமான குடும்பங்கள் ஏராளம். செக்ஸ் போன்ற உணர்வுகள், மிக மிக இயல்பானவை. அந்த உணர்ச்சிகளை கட்டுப்படுத்தி, இயற்கைக்கு முரணான பிரம்மச் சர்யத்தை கடைபிடித்தால், மனச் சிதைவுக்கு ஆளாகி, ஒரு சாடிஸ்டாக மட்டுமே மாற முடியும். மன நிம்மதி கிடைக்காது.

சென்னை வழக்கறிஞர் ராதாகிருஷ்ணனின் அலுவலகத்துக்கு ஒரு வயதான பெண்மணி வந்தார். அவருடைய மகளும், மருமகனும், வேலையை ராஜினாமா செய்து விட்டு, தங்கள் சேமிப்பு அனைத்தையும் ஜக்கி நிறுனத்தில் செலுத்தி விட்டு, தங்கள் குழந்தையை சன்னியாசிகளை உருவாக்கும் சம்ஸ்கிருதி பள்ளியில் சேர்த்திருப்பதாகவும் தெரிவித்தார். என் மகளிடம் எவ்வளவோ மன்றாடிப் பார்த்தேன். ஆனால் அவள் என்னிடம் கோபப்படுகிறாள். என்னை அடிக்கிறாள். ஜக்கியைப் பற்றி பேசாதே என்று சண்டை போடுகிறாள். ஒரு நாள் முழுக்க ஒரே ஒரு வாழைப்பழத்தை மட்டுமே உணவாக உண்ணுகிறாள். என்னால் என் மருமனையோ, மகளையோ கட்டுப்படுத்த முடியும் என்று தோன்றவில்லை. என் பேத்தியின் வாழ்வை நாசமாக்கி விடுவார்களோ என்று அச்சமாக இருக்கிறது. தயவு செய்து, அந்த சம்ஸ்கிருதி பள்ளியை மூடுவதற்கான வழக்கை துரிதமாக நடத்துங்கள் என்று கூறினார். இதற்காக எவ்வளவு கட்டணம் ஆனாலும் நான் தருகிறேன் என்று கூறினார். அவரிடம் பணம் எதுவும் வேண்டாம் என்று கூறி அனுப்பி விட்டு, வழக்கை நாங்கள் நடத்திக் கொள்கிறோம் என்று கூறி அனுப்பி வைத்தோம். பிறகு இவரைப்போலவே மற்றொரு வயதான பெண்மணி, தொலைபேசியில் இதே போன்ற ஒரு கதையை கூறினார். அந்தப் பெண்மணிகளின் கண்ணீர் வேதனையை வரவழைத்ததோடு உணர்த்திய மற்றொரு விஷயம், இந்தப் பெண்மணிகளைப் போல ஆயிரக்கணக்கான குடும்பங்கள், ஜக்கி என்ற பொறுக்கியால் சீரழிந்ததுள்ளன என்பதே. ஊருக்கெல்லாம் பிரம்மச்சர்யத்தை உபதேசம்

செய்யும், ஜக்கி வாசுதேவால், தன்னுடைய சொந்த மகளுக்கு பிரம்மச்சர்யத்தின் மாண்புகளை கடைபிடிக்கும்படி அவரை நம்பவைக்க முடியவில்லை என்பது குறிப்பிடத்தகுந்த விஷயம். மகனுக்கு ஆடம்பரமாக திருமணம் செய்தார். இதைத்தவிர்த்து, உரிய விசா பெறாமல், பல வெளிநாட்டு நபர்களும், ஈஷா மையத்துக்குள் தங்கி வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தகுந்த மற்றொரு விஷயம்.

ஒட்டுமொத்தமாக பார்த்தால், ஈஷா மையம் செய்து வரும் காரியங்கள் அனைத்தும் சட்டவிரோதமானவையே.. இவர்கள் சொல்லித் தரும் யோகா பயிற்சிகள், உண்மையிலேயே உடலுக்கு நன்மை பயப்பவை. ஆனால் வெறும் யோகப்பயிற்சிகளை மட்டும் சொல்லித்தந்தால், ஜக்கியின் சாம்ராஜ்யம் இப்படி விரிவடைந்திருக்காது. முதல் இரண்டு நாட்கள் பயிற்சியைச் சொல்லித் தந்து விட்டு, மூன்றாம் நாள் முக்கிய யோகப்பயிற்சி செய்வதற்கான பூஜை என்று தொடங்குவார்கள். அந்த பூஜையின் போது, ஜக்கி வாசுதேவின் பெரிய படத்தை வைத்து, அரை மணி நேரம் பூஜை செய்வார்கள். இந்த இடத்திலிருந்துதான் தொடங்குகிறது மூளைச்சலவை. இதற்குப் பிறகு, உருத்திராட்ச மாலை அணிவதால் ஏற்படும் பயன்கள் என்னென்ன என்று சொல்லி விட்டு, இந்த உருத்திராட்ச மாலைகள் வெளியில் கிடைக்காது என்று சொல்லுவார்கள். வகுப்பு முடிந்ததும் பார்த்தால் 1000 ரூபாய் முதல் 1500 ரூபாய் வரை விலையிருக்கும் உருத்திராட்ச மாலைகள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருக்கும். அதற்கு அடுத்தபடியாக வகுப்பு முடிந்ததும் சத்துமாவுக் கஞ்சி தயாரித்து அருந்துவதற்கு தருவார்கள். தரும்போதே, இந்த சத்துமாவு ஈஷா மையத்தால் தயாரிக்கப்பட்டு விற்பனைக்கு உள்ளது என்று கூறுவார்கள். நான்கு நாட்கள் வகுப்பு முடித்தவர்கள் உங்களின் அனுபவங்களைக் கூறுங்கள் என்று பேசச் சொல்லுவார்கள். ஏற்கனவே வீ கேன் நிறுவனத்தின் மல்டி லெவல் மார்க்கெடிங் நடந்தது அல்லவாஞ் அதே போல வகுப்பில் வந்தவர்களும் பேசுவார்கள். நான்கு நாட்கள் யோகா பயிற்சி செய்து முடித்ததும், எனக்கு உலகமே புதிதாக தெரிகிறதுஞ்.. அனைவர் மீதும் அன்பு செலுத்துகிறேன்.. சிகரெட் பிடிப்பதை குறைத்திருக்கிறேன், மனைவியோடு சண்டை போடுவதில்லை என்று கூறுவார்கள். அப்படியெல்லாம் எதுவும் நமக்குத் தோன்றாவிட்டாலும், இத்தனை பேர் சொல்லும்போது, நமக்கு எதுவும் தோன்றவில்லை என்று எப்படி சொல்லுவது என்று யோசித்துக் கொண்டு, நாமும் “எனக்கு நான்கு நாட்களாக உலகமே பளிச்சென்று நன்றாக தெரிகிறது..” என்று ஏதாவது உளறி விட்டு வருவோம்.

தற்போது இந்த பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டவர்கள், இதற்கான அடுத்த கட்ட பயிற்சியில் கலந்து கொள்ளுங்கள். அதற்காக பதிவு செய்பவர்கள் பெயரை கொடுக்கலாம் என்று கூறுவார்கள். ஈஷா மையம், பல்வேறு ஏழைகளுக்கு நலத்திட்ட உதவிகளைச் செய்கிறது என்று கூறுவார்கள். இலவச ஆம்புலன்ஸ் சேவைகள், இலவச மருத்துவமனைகள் போன்றவற்றை சத்குரு செய்து வருகிறார் என்பார்கள். இதற்கான நன்கொடைகளை நீங்கள் வழங்கினால், மேலும் பல்வேறு ஏழைகள் பயன்பெறுவார்கள், அவர்களுக்கு சத்குருவால் மேலும் பல சேவைகளைச் செய்ய முடியும் என்று கூறுவார்கள். யோகா வகுப்புக்கு வந்த அடிமைகளுக்குத்தான் உலகமே புதிதாகத் தெரிகிறதே முதலில் தங்களை வாலண்டியராகப் பதிவு செய்து விட்டு, ஒரு பராரிக் குழந்தையை சத்குரு கட்டிப்பிடிக்கும் வீடியோவை பார்த்து விட்டு அந்தக் குழந்தைக்கு சத்குரு மூலமாக உதவலாம் என்று உடனே செக் எழுதித் தருவார்கள். வகுப்பின் இறுதியில், நீங்கள் வாலண்டியராக சேர வேண்டும், இந்த யோகப் பயிற்சியின் பலன்களை உலகெங்கும் எடுத்துச் செல்ல சத்குருவுக்கு உதவுங்கள், என்று மூளைக்குள் அடிமைத்தனத்தையும், போதையையும் விதைப்பார்கள். இந்த போதைக்கு அடிமையானவர்களின் வாழ்வு அதோகதிதான்..

ஏழைக் குழந்தைகளுக்காக உங்களின் ஒரு நாள் உணவை தியாகம் செய்யுங்கள் என்று கூறுகிறார் சத்குரு. நீங்கள் ஒரு நாள் உணவைத் தியாகம் செய்வதால் வரும் தொகையை அப்படியே ஈஷா மையத்துக்கு நன்கொடையாக

**வெளிநாட்டில் வாழும் ஒருவரை வசியம் செய்து, அவரது சேமிப்புகளை வந்து ஈஷா மையத்தில் கொட்டும் அளவுக்கு மனமாற்றம் செய்யும் வலிமையை ஜக்கி பெற்றிருக்கிறார்.**



வழங்கினீர்கள் என்றால், அதனால் மேலும் பல ஏழைகளுக்கு சத்குரு உதவுவார் என்று அதே வகுப்பின் இறுதியில் உங்களுக்கு ஓதப்படும். உங்களை ஒரு நாள் உணவைத் தியாகம் செய்து நன்கொடை தாருங்கள் என்று வற்புறுத்தும் சத்குரு வைத்திருக்கும் ஹம்மர் வாகனத்தின் விலை என்ன தெரியுமா ? 40 லட்சம். சத்குரு சொந்தமாக வைத்திருக்கும் ஸி22 வகை ஹெலிகாப்டரின் விலை என்ன தெரியுமா ? 14 கோடி. இந்த ஹெலிகாப்டருக்கான தேவை என்ன என்பதை சத்குருவே விளக்குகிறார்.

“தென்னிந்தியாவில் ஈஷா யோகா பல மடங்கு வளர்ந்து விட்டது. கடந்த மூன்று ஆண்டு களில் மட்டும் 20 மடங்கு வளர்ந்துள்ளது. இதனால் ஏற்பட்டுள்ள மிகப் பெரிய சிக்கல் எனது நேரக்குறைபாடு. நேரக்குறைபாடு பெரிய சிக்கலாகி விட்டது. இதை நான் ஆராய்ந்தபோது நான் சாலை வழியாக பயணிப்பதில்தான் அதிக நேரத்தை செலவிடுகிறேன் என்பதை உணர்ந்தேன்.

இன்று ஈஷாவுக்கு கிடைத்திருக்கும் வரவேற்பில், இந்தியாவில் உள்ள அனைத்துக் கதவுகளையும் நமக்காக திறந்திருக்கிறது. ஒரு ஊருக்கு நான் வருகிறேன் என்றால் அதற்காக என்ன வேண்டுமானாலும் செய்யத் தயாராக இருக்கிறார்கள். ஆனந்த அலை நிகழ்ச்சியின் போது சென்னையில் மட்டும் ஒருலட்சம் பேர் கூடினார்கள். மற்ற ஊர்களில் தலா 30 ஆயிரம் பேர் கூடினார்கள். நான் அவ்வாறு கூடியவர்களுக்கு ஒரு சவால் விட்டேன். ஈஷாவின் இன்னர் இன்ஜினியரிங் நிகழ்ச்சிக்கு 10 ஆயிரம் பேரை எந்த ஊரில் பதிவு செய்கிறீர்களோ, அந்த ஊருக்கு நானே நேரில் வருவேன். சிறிய ஊர்களில் 5 ஆயிரம் பேரை பதிவு செய்யுங்கள் என்று கூறினேன். இவர்களுக்குள் போட்டி உருவானது. ஒருவர் நான் 5 ஆயிரம் பதிவு செய்தேன் என்றார். மற்றொருவர் நான் 8 ஆயிரம் பேரை பதிவு செய்துள்ளேன் அதனால் எனது ஊருக்குத்தான் வர வேண்டும் என்றார்.

இப்படி பல ஊர்களிலும் என்னை வரவைப் பதற்கு கடுமையான முயற்சி நடப்பதால் ஒரு முடிவுக்கு வந்தேன். அடுத்த ஆறு ஆண்டுகளுக்குள் ஈஷா பயிற்சி எடுக்காத நபரே தமிழ்நாட்டில் இருக்கக் கூடாது என்ற முடிவுக்கு வந்தேன்.

அதனால் ஹெலிகாப்டர் ஓட்டக் கற்றுக் கொள்வது என்று முடிவு செய்தேன்” என்று கூறுகிறார் ஜக்கி. இந்த ஹெலிகாப்டரை மெயின் டெயின் செய்ய ஆண்டுதோறும் தேவைப்படும் தொகை 15 லட்சம். சரி... சத்குரு எப்படிப்பட்ட நபர் என்பதை புரிந்திருப்பீர்கள். ஏமாந்தவனிடம் ஏமாற்றிப் பிழைப்பது உலகில் பலர் ஈடுபடும் மோசடிச் செயல்தான். சத்குருவும், தன்னிடம் ஏமாறுபவர்களிடம் வசூல் செய்து சம்பாதிக்கிறார். இது ஏமாற்றுபவனுக்கும், ஏமாறுபவனுக்குமான பிரச்சினை. இதைக் கூட மன்னித்து விடலாம். ஆனால், இயற்கையை அழிக்கும் சத்குருவை எப்படி மன்னிப்பது ?

சத்குரு எப்படி இயற்கையை அழிக்கிறார் என்பதைப் பார்க்கும் முன் சத்குரு நாட்டில் பசுமையை வளர்ப்பதற்கு என்னென்ன செய்திருக்கிறார் என்பதைப் பார்ப்போம்.

“இயற்கையைப் பாதுகாப்பதில் பொறுப் புணர்வோடு நடந்து கொள்ள வேண்டிய, அதைப் பற்றி குழந்தைகளுக்கு எடுத்துச் சொல்ல வேண்டிய பெரியவர்களுக்கே எடுத்துக் காட்டாக விளங்குகிறார்கள் இளவரசனைப் போன்ற பள்ளி செல்லும் பல சிறார்கள். இதைச் சாத்தியப்படுத்தியிருக்கிறது ஈஷா பசுமைக் கரங்கள் திட்டத்தின் செயல்திட்டமான பசுமைப் பள்ளி இயக்கம். சத்குரு அவர்களின் வழிகாட்டுதலோடு துவங்கப்பட்டிருக்கும் இந்த பசுமைப் பள்ளி இயக்கம், பள்ளிக் குழந்தைகளுக்கு சுற்றுச்சூழல் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி, அவர்களை மரக்கன்றுகளை உற்பத்தி செய்வது மற்றும் மரம் நடுவது போன்ற பணிகளில் ஈடுபடுத்தும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்டது.”

இதற்கு அடுத்த பகுதிதான் சிறப்பு.

மரம் வளர்ப்பதற்கு எனக்கு அதற்குப் போது மான நேரம் இல்லையே, அதற்கான சரியான சூழ்நிலை இல்லையே” என்று நினைப்பவர்கள் ஈஷா பசுமைக் கரங்கள் திட்டம் மூலமாக உங்கள் விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்ள முடியும். 50 ரூபாய் செலுத்தினீர்கள் என்றால், உங்கள் பெயரில் ஒரு மரக்கன்று நடப்படுமாம். அதன் மூலம் பசுமையை வளர்க்கிறார்களாம். இப்படி சத்குரு நடத்திய இந்த பசுமை இயக்கம் மூலமாக ஒரே நாளில் பல லட்சம் மரக்கன்றுகளை நட்டதற்காக, மத்திய அரசின் இந்திரா காந்தி விருது சத்குருவுக்கு வழங்கப்பட்டது. இப்படியெல்லாம் சத்குரு இயற்கை ஆர்வலாக இருக்கிறாரே என்று மனமகிழ்ச்சி அடைந்திருப்பீர்கள். அவசரப்படாதீர்கள். மீதம் உள்ள கட்டுரையைப் படித்தால், சத்குரு, கோட்டா சீனிவாசராவ் நடிக்கும் கேரக்டர்களில் உள்ளதைவிட மிக மோசமான வில்லன் என்பது புரியும். தொண்ணூறுகளின் தொடக்கத்தில், கோவை, தொண்டாமுத்தூர் பஞ்சாயத்தில் உள்ள இக்கரை பொலுவாம்பட்டி கிராமத்தில்

தனது ஆசிரமத்தை தொடங்குகிறார் ஜக்கி. அந்த கிராமம் ஒரு அடர்ந்த வனப்பகுதி. வனப்பகுதிக்கு மிக மிக அருகாமையில் அமைந்துள்ள அந்த கிராமத்தில் விவசாயம் சிறப்பாக நடைபெற்று வருகிறது. அந்த இடத்தில் தன் கடையை விரித்த ஜக்கி, மெல்ல மெல்ல, அவ்விடத்தில் இருந்த விவசாய நிலங்களை விலைக்கு வாங்குகிறார். இப்படி வாங்கிய நிலத்தில் 26.11.1999 அன்று தியான லிங்கம் என்ற ஒரு லிங்கத்தை நிறுவுகிறார்.தொடக்கத்தில் தான் ஒரு ஆன்மீக குருவாக உருவாகுவோம் என்பதை அறியாத ஜக்கி லிங்க சிலையை வைத்து, அதன் மூலம் வசூல் வேட்டையில் இறங்கலாம் என்ற அடிப் படையிலேயே தொடங்குகிறார். இந்த லிங்க விவ காரத்திலும் ஜக்கி தான் ஒரு மோசடிப் பேர்வழி என்பதை வெளிப்படுத்துகிறார். ஈஷா மையத்தின் இணையதளத்தில் இப்படி இருக்கிறது

The entire structure is a vision of Sadhguru Jaggi Vasudev. The entire design was conceived by Sadhguru

and executed by Bhramhachari engineers with the help of about 300 local unskilled labourers.

அதாவது, தியானலிங்கத்தின் மொத்த உருவாக்கமும் ஜக்கி வாசுதேவின் எண்ணத்தில் உதித்தவை. மொத்த வடிவத்தையும் சத்குரு உருவாக்கினார். பிரம்மச்சாரி பொறியாளர்களின் உதவியோடும், அப்பகுதி மக்களில் 300 வேலை யாட்களின் துணையோடும் அந்தத் திட்டத்தை செயல்படுத்தினார் ஜக்கி என்று கூறுகிறது ஈஷா. ஆனால் இந்த லிங்க கோயிலுக்கான வரைபடம், திட்டம், செயல்படுத்துதல், கட்டுமானம் என்று அனைத்தையும் செய்தது, பாண்டிச்சேரியில் உள்ள ஆரோவில் எர்த் இன்ஸ்ட்டிடியூட். இணைப்பு இப்படி ஒரு சாதாரண கட்டுமான வேலைகளில் கூட, பொய்யுரைக்கும் சத்குருவின் உண்மை முகத்தை புரிந்து கொள்ளுங்கள்.

ஜக்கி வாசுதேவ் பேசுகையில், தன்னை கடவுள் நம்பிக்கை இல்லாதவராகக் காட்டிக் கொள்வார். கடவுளைப் பற்றிக் குறிப்பிடுகையில், “உங்கள் கடவுள்” இப்படிச் சொல்லுகிறார் என்றுதான் குறிப்பிடுவார். ஆனால் அவர் கட்டியது லிங்கம். லிங்கம் என்றால் என்ன என்பது விபரமறிந்தவர்களுக்குப் புரியும். அது சிவபெருமானின் சின்னம். லிங்க சிலையைக் கட்டி விட்டு, அது மதம் சார்ந்ததல்ல என்று கூறுவது ஜக்கியின் மற்றொரு மோசடி. தற்போது தஞ்சை சிவன் கோயிலில் இருப்பது போலவே வாசலில் ஒரு நந்தி சிலையும் அமைக்கப்பட்டுள்ளது. மலைத்தளப் பாதுகாப்புக் குழு (Hill Area Conservation Authority) என்று ஒரு குழுவை தமிழக அரசு 1990ம் ஆண்டு உருவாக்குகிறது. இந்தக்



குழுவில் வனத்துறை அதிகாரிகள், பஞ்சாயத்து அதிகாரிகள், மாவட்ட ஆட்சியர்கள் என்று பல்வேறு துறைகளைச் சேர்ந்த அதிகாரிகள் உறுப்பினர்களாக இருப்பார்கள். மலை மற்றும் மலை சார்ந்த பகுதிகள் என்று அறிவிக்கப்பட்ட கிராமங்களில் எவ்விதமான கட்டுமானம் செய்வதாக இருந்தாலும், இந்தக் குழுவின் அனுமதி பெறாமல் செய்ய முடியாது. இந்தக் குழுவின் அனுமதி பெறுவதும் எளிதான காரியம் அல்ல. ஒரு சிறிய கட்டிடம் கட்டுவதாக இருந்தால் கூட, இந்தக் குழுவிடம் விண்ணப்பம் சமர்ப்பிக்க வேண்டும். அந்தக் குழுவின் உறுப்பினராக உள்ள, மாவட்ட ஆட்சியர், கட்டிடம் கட்டப்படும் பகுதியை நேரில் ஆய்வு செய்து அறிக்கை அளிக்க வேண்டும். வனத்துறை அதிகாரியும் இதே போல நேரில் ஆய்வு செய்து அறிக்கை அளிக்க வேண்டும். அந்த கிராமம் அமைந்துள்ள பஞ்சாயத்து அமைப்பின் கூட்டத்தில் இதற்கு அனுமதி அளிக்கும் தீர்மானம் இயற்றப்பட வேண்டும். இப்படி அதிகாரிகள் அளிக்கும் அறிக்கைகள், மலைத்தளப் பாதுகாப்புக் குழுவின் கூட்டத்தில் வைக்கப்பட்டு, ஒப்புதல் வழங்கப்படும். இதற்குப் பிறகே கட்டுமானப் பணிகளையே தொடங்க வேண்டும். 1994ல் தன் மோசடி வேலைகளைத் தொடங்கிய ஜக்கி வாசுதேவ், எந்த அனுமதியும் பெறாமல், தனது கட்டுமானப் பணிகளைத் தொடங்குகிறார். பணம் சேரச் சேர, அந்த லிங்கக் கோயிலைச் சுற்றி, பல்வேறு கட்டிடங்களை எழுப்புகிறார். அப்போது இருந்த வனத்துறை அதிகாரிகளோ, மற்ற அதிகாரிகளோ எவ்விதமான கேள்வியும் எழுப்பவில்லை.

உயர்நீதிமன்றத்தில் பூவுலகின் நண்பர்கள் சார்பில் வழக்கறிஞர் வெற்றிச் செல்வன் வழக்கு தொடந்திருக்கிறார். வழக்கு விசாரணையில் இருக்கும் போது தனது மேலிட செல்வாக்கை உணர்த்தவே “ஆதியோகி” சிலை திறப்புக்கு பிரதமர் மோடியை அழைத்திருக்கிறார். மோடியும் – பங்கேற்று சட்டமீறல்களுக்கு— மோசடிகளுக்கு தனது ஒப்புதலை வழங்கிருக்கிறார். இனி எந்த அதிகாரிகள் ஜக்கியின் மோசடிகளுக்காக நடவடிக்கை எடுக்க துணிவார்கள்?

**நன்றி : சவுக்கு இணையதளம்**

●



# சங்க இலக்கியங்களில் வைதீக எதிர்ப்பு

● மயிலை பாலு

அவைதிகம் என்பதற்கு வைதிகம் அல்லாதது என்று பொருள், வைதிகம் என்றால் வேதங்கள் மற்றும் அவற்றின் பக்கவிளைவுகளான உப நிடதங்கள்.

புராணங்கள், மந்திர தந்திரங்கள் உள்ளிட்ட மூடநம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள் உண்மை என சாதிப்பது. அவைதிகம் என்பது இவற்றையெல்லாம் நிராகரிப்பது. சுருங்கச் சொன்னால் நாத்திகம் என்பதே அவைதிகம் எனப்படும். இதற்கு சான்றாகச் சிலர் அளித்துள்ள விளக்கங்களைக் காணலாம். தத்துவ ஆய்வறிஞர் தேவிபிரசாத் சட்டோ பாத்யாயா "இந்திய நாத்திகம்" என்ற நூலில் இவ்வாறு விளக்கம் தருகிறார், "உலகாயதம்" துவேகம் ஆகியவற்றின் பொருண்மை நாத்திக வாதமே ஆகும். இவற்றோடு சாங்கியம், புத்தம். சமணம். மீமாம்சம். நியாய வைசேசிகம் ஆகியவையும் கீழ்காண்பவற்றை மையக் கருத்துக்களாக கொண்டிருந்தன.

1. வேத வேள்விகளையும் வருணா சிரமங்களையும் பல கடவுள் வழிபாட்டையும் மறுத்தன.
2. உபநிடதங்கள் உரைக்கும் ஒரு கடவுளுண்மை வாதத்தையும் உடன்படவில்லை.
3. வேதங்கள் விளம்பும் இயற்கைச் சக்திகளுக்கும் உபநிடதங்கள் உரைக்கும் பரம்பொருளுக்கும் பதிலாக அண்ட அமைப்பியல் நியதிகளை வரையறுத்தன.
4. இயற்கை இறந்த ஆற்றல்களைப் புறக்கணித்தன.
5. அண்டத்தில் இயற்கை விதியின் ஆட்சியை மதித்தன.

உடன்பாட்டு முறையில் நோக்கினால் அவைதிக அல்லது நாத்திக தத்துவங்கள் அமைப்பியல் நியதிகளை வ ரையறுத்தன; அண்டத்தின் இயற்கை விதியின் ஆட்சியை மதித்தன. செயற்கையாக முன் வைக்கப்பட்ட கடவுள், இயற்கை கடந்த ஆற்றல் இன்ன பிறவற்றை அவை ஏற்க மறுத்தன என்கிறார் சட்டோபத்யாயா.

நாத்திகம் குறித்த தந்தை பெரியாரின் கருத்தும் இங்கு ஒப்பு நோக்க தக்கது.

"இன்றைய தினம் நாத்திகன் என்ற பதத்திற்குக் கடவுளை இல்லை யென்பவன் என்றாக்கி விட்டார்கள்" தர்க்கரீதியில் புத்தியை உபயோகப்படுத்தி விஷயத்தை ஆராய்ச்சி செய்கிறவன் எவனாக இருந்தாலும் அவன் நாத்திகன் தான் என்கிறார் பெரியார்.

தனது கருத்துக்கு ஆதரவாக அவர் பவுத்தம் புத்தம் என்ற சொற்களுக்கான விளக்கத்தை முன்வைக்கிறார்.

"சொந்த புத்தியைக் கொண்டு வேத சாஸ் திரங்களைத் தர்க்கம் செய்பவன் நாத்திகன் அப்படிப்பட்ட புத்தியை உபயோகப்படுத்து கிறவன் புத்தன்.

"அபிதான சிந்தாமணி" என்சைக்கிலோபீடியா ஆகிய நூல்களில் பவுத்தம் என்பதற்குப் "புத்தியைக் கொண்டு — அறிவைக் கொண்டு பார்ப்பவர்கள் ;

கண்மூடித்தனமாக நம்பாதவர்கள் என்றே பொருள் சொல்லியிருக்கிறார்கள்"

(பெரியார் களஞ்சியம் – தொகுதி 4 பக்கம் : 236)

இந்திய தத்துவக் களஞ்சியம் என்ற நூலில் முனைவர் சோ.நா கந்தசாமி அவர்கள் நாத்திகம் என்பதற்கு அளித்துள்ள சில விளக்கங்களையும் காணல் தகும்.

"பாணினி இலக்கண விதிக்கு (வீஸ் – 460) பதஞ்சலி செய்த மாபாடியத்திற்கு விளக்கவுரை எழுதிய சாயாதித்தர் ஆத்திகர் – பரத்தை உடன் பட்டவர்;

நாத்திகர் – அதனை நம்பாதவர்" என்று விளக்கம் கூறினார்.

"மனு. நாத்திகரை விளக்கும் பொழுது வேதக் கொள்கைளை நிந்தனை புரிபவர் என்று குறித்துள்ளார்.

"சுக்கிர நீதியில் கற்பதற்குரிய கலைகளில் "நாத்திகமும் சாத்திரமும் ( அழுத்தம். மூல நூலில் உள்ளது ) ஒன்றாக எண்ணப்பட்டது.

இச்சாத்திரம் சுபாவ வாதத்தைக் கூறு வதுடன் தருக்க வாதங்களை வலிமையாகக் கொண்டது. வேதங்களையும் கடவுளையும் மறுத் துரைப்பது" (அழுத்தம் கட்டுரையாளருடையது )

இந்த விளக்கங்கள் வழி நாம் ஒரு முடிவுக்கு வரலாம் பொதுவாக நாத்திகம் என்பது கடவுள் மறுப்பு என்று சொல்லப்பட்டாலும் வேத மறுப்பு மேலுலக மறுப்பு. சடங்கு மறுப்பு போன்ற வற்றையும் உள்ளடக்கியதாகும். இந்தப் புரிதலை அடியொற்றி செவ்வியல் இலக்கியங்களில் நாத்திக அல்லது அவைதிக மரபுகள் பதிவாகியிருப்பதைக் கண்டுகாட்ட முற்படுவதே கட்டுரையின் நோக்கமாகும்.

நற்றிணை. குறுந்தொகை. ஐங்குறுநூறு. பதிற்றுப்பத்து. பரிபாடல். கலித்தொகை. அகநானூறு. புறநானூறு என எட்டுத் தொகை நூல்களும். திருமுருகாற்றுப்படை. முல்லைப் பாட்டு. நெடுநல்வாடை. குறிஞ்சிப்பாட்டு. பட்டினப் பாலை. மலைபடுகடாஅம் எனப் பத்துப்பாட்டு நூல்களும் செவ்வியல்

**ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் படைக்கப்பட்ட தொல்காப்பியம் உலகத்து உயிர்கள் கடவுளால் படைக்கப்பட்டவை என்கிற அடிப்படை வைதிக மரபை ஏற்கவில்லை.**

இலக்கியங்கள் எனப்படுபவை. காலப் பழமை கருதி இவற்றோடு சிலப்பதிகாரம். மணிமேகலை. சீவக சிந்தாமணி. வளையாபதி. குண்டலகேசி, எனும் ஐம்பெருங்காப்பியங்களையும் நீலகேசி. சூடாமணி. யசோதார காவியம். நாக குமார காவியம். உதயணகுமார காவியம் என்ற ஐஞ்சிறுங் காப்பியங்களையும் இணைத்துக் கொள்ளலாம் இவற்றுக்கெல்லாம் ஆதி நூலாக விளங்குவது தமிழுக்கான இலக்கணத்தை மொழியியல் வாழ்வியல் அடிப்படையில் கூறும் தொல் காப்பியம் ஆகும். ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் படைக்கப்பட்ட இவ்விலக்கண நூல் உலகத்து உயிர்கள் கடவுளால் படைக்கப்பட்டவை என்கிற அடிப்படை வைதிக மரபை ஏற்கவில்லை. மாறாக உயிர்களின் பரிணாம வளர்ச்சி என்கிற அறிவியலுக்கு முன்னுரை எழுதியுள்ளது. ஓரறிவு உயிரிலிருந்து ஆறறிவு உயிர் வரையிலான வகைப்பாட்டினைத் தொல்காப்பியம் எடுத் துரைக்கிறது.

"ஒன்றறிவதுவே உற்றறிவதுமே
இரண்டறிவதுவே அதனொடு நாவே
மூன்றறிவதுவே அவற்றொடு முக்கே
நான்கறிவதுவே அவற்றொடு கண்ணே
ஐந்தறிவதுவே அவற்றொடு செவியே

ஆறறிவதுவே அவற்றொடு மனனே

சேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத்தினனே (தொல், பொருள். மரபியல் நூற்பா 27) பொதுவான உயிர் வகைமைகளைக் கூறி நிறுத்தலாம்.

"புல்லும் மரனும் ஓரறிவினவே"

"நத்தும் முரளும் ஈரறிவினவே"

"சிதலும் எறும்பும் மூவறிவினவே"

"நண்டும் தும்பியும் நான்கறிவினவே"

"மாவும் மாக்களும் ஐயறிவினவே"

"மக்கள் தாமே ஆறறிவுயிரே"

(தொல். பொருள் மரபியல் நூற்பாக்கள் 28 — 33)

என்று விளக்கம் தருகிறது. ஒருசெல் தாவரங்களிலிருந்தே பரிணாம வளர்ச்சி துவங்குகிறது. இதன் இறுதி வடிவமே மனிதன் என்று அறிவியல் கூறுவதன் முன்னோட்டம் போலவே தொல்காப்பிய நூற்பாக்கள் அமைந்துள்ளன. உலகின் உயிர்கள் கடவுளால் படைக்கப்பட்டவை என்ற ஒற்றை வரியோடு நின்றிருந்தால் தொல்காப்பியம் வைதிகத்தின் வழிப்பட்டதாகி இருக்கும்" அதிலிருந்து விலகி நிற்பதால் தமிழர்களின் அவைதிக மரபுக்குத் தொல்காப்பியம் வழி திறந்திருக்கிறது எனலாம்"

அது மட்டுமல்ல. உலகத்தைப் படைத்து கடவுள் அல்ல என்பதான கருத்தையும் தொல்காப்பியம் முன்வைக்கிறது.

"நிலம். தீ. நீர், வளி விசும்பொடு ஐந்தும்

கலந்த மயக்கம் உலகம் ஆகலின்" (தொல். பொருள் மரபியல் நூற்பாக்கள் 635) தொல் காப்பியத்தைப் பின்பற்றுவது போன்ற கருத்துக்கள் புறநானூறு தொகை நூலிலும் காணப்படுகின்றன. மன்னனைப் புகழ்ந்து பாடுவதென்ற பெயரால் தங்களின் கோட்பாட்டு சார்பு நிலையைப் புலவர்கள் சொல்வார்கள். இவ் வகையில் உறையூர் முதுக்கண்ணன் சாத்தான் சோழன் நலங்கிள்ளியின் குணநலன்களைக் கூறுவதுபோல உலகின் ஐம்பூதத்தியற்கையைப் பதிவுசெய்கிறார்.

"மண்திணிந்த நிலனும்

நிலன் ஏந்திய விசும்பும்

ஒளித் தலைஇய தீயும்

தீ முரணிய நீரும் என்றாங்கு

ஐம்பெரும் பூதத்து இயற்கைபோல"

(புறநானூறு — 2)

மன்னனின் குணங்கள் இருந்ததாகக் கூறுகிறார் புலவர்.

ஆரம்பத்தில் உலகாயதர் என்றும் பின்னர் சாருவாகர் என்றும் அறியப்பட்ட ஆதிச் சிந்தனையாளர்களில் ஒருபிரிவினர் முன்வைத்த இயற்பண்பு (ஸ்வாபம்) வாதத்தை இந்தப் பாடலில் காணமுடிகிறது. இப்புலவரின் இன்னொரு பாடலும் வானியலை அளந்து கூறுவதாக இருக்கிறது.

"செஞ்ஞாயிற்றுச் செலவும்

அஞ்ஞாயிற்றுப் பரிப்பும்

பரிப்புச் சூழ்ந்த மண்டிலமும்

வளிதிரிதரு திசையும்

வறிது நிலைஇய காயமும் என்றிவை

சென்று அளந்து அறிந்தோர் போல என்றும்

இனைத்து உன்போரும் உளரே

(புறநானூறு — 30)

ஞாயிறு எனும் சூரியனின் பயணம், அதனைச் சூழ்ந்த மண்டலம், (பிறகோள்கள்) காற்றின் திசை,. காற்றே இல்லாத ஆகாயம் என இவற்றையெல்லாம் நேரில் சென்று அளந்தது போல கணித்துச் சொல்வோரும் உள்ளனர் என்பது இப்பாடலின் கருத்தாகும். ஞாயிற்றின் மண்டிலம் என்ற அறிவியல் முன்னோட்டத்தை மேம்படுத்த மறந்ததாலும் – வைதிகக் கருத்தாளர்கள் மறைத்ததாலும் நவக் கிரங்ககளைச் சுற்றிவந்து பூசனை செய்யும் கருத்து திணிக்கப்பட்டது. பூமியிலிருந்து மேற் செல்லச் செல்ல குறிப்பிட்ட தூரத்திற்குப்பின் சுவாசிக்கத் தேவையான காற்று கிடைப்பதில்லை புவியீர்ப்பு விசை இல்லையாகிறது என்ற இன்றைய ஆய்வுகளுக்குக் கட்டியம் கூறுவதுபோல இருக்கும் தொடர் "வறிது நிலை இய காயமும்" என்பதாகும். அனைத்துக்கும் மேலாக இவற்றையெல்லாம் நேரில் சென்று அளந்ததுபோல் கணித்துச் சொல்வோரும் உள்ளனர் என்று சொல்லியிருப்பது புலவரின் காலத்தோடு ஒப்பு நோக்கி மதிக்கத்தக்கதாகும்.

ஆகாயத்தில் பரலோகம் இருக்கிறது. சொர்க்கம் இருக்கிறது. முப்பத்து முக்கோடி தேவர்கள் இருக்கிறார்கள். தேவேந்திரனும் முப்பெருங் கடவுளரும் தேவியரும் இருக்கிறார்கள் என்றெல்லாம் இன்றும் சொல்லி நம்பவைத்துக் கொண்டிருக்கும் வைதிகப் புராண மரபை அன்றே உடைத்தெறிந்திருக்கிறார் முதுகண்ணன்

சாத்தனார். இவரது பெயரைக் கொண்டே இவர் புத்தமதச் சார்பாளர் என்று கொள்ள இடமுண்டு புத்தமதம் உள்ளிட்ட நாத்திக சமயங்கள் அண்ட அமைப்பியல் நியதிகளை வரையறுத்தன. அண்டத்தில் இயற்கையின் ஆட்சியை மதித்தன என்ற சட்டோபாத்யாயாவின் நிர்ணயிப்பையும் இதுபோன்ற கருத்துக்கள் மெய்ப்பிக்கின்றன.

மழைக்கு ஓர் கடவுளைக் படைத்தது வைதீகம். மழை என்பது இயற்கையின் கொடை அதனைப் பெறும்போது பாதுகாத்து வைத்துக்கொள்ள மனிதர்களான நாம் முயற்சிசெய்ய வேண்டும். திட்டமிட வேண்டும். ஆனால் வருண பகவானுக்கு மழைவேண்டி யாகம் வளர்க்கும் அவலத்தை இன்றும் நாம் காண்கிறோம்" ஆனால் சங்ககாலப் புலவரான குடபுலவியனார்.

"நீர் இன்று அமையா யாக்கைக்கு எல்லாம்

உண்டிகொடுத்தோர் உயிர் கொடுத்தோரே

உண்டி முதற்றே உணவின் பிண்டம்" (புறநானூறு – 18)

என்ற உணவின் இன்றியமையாமையை எடுத்துரைக்கிறார் மரம் வைத்தவன் தண்ணீர் ஊற்றுவான், அதாவது இயற்கையில் கிடைத்ததை உண்டு வாய்பப்பு கிடைத்தவரை வாழ்ந்த காலத்திலிருந்து மாறி, உணவு உற்பத்தி சேமிப்பு என்ற கால கட்டத்திற்கு வந்துசேர்ந்த காலம் சங்ககாலம் என்பதை அறியமுடிகிறது. உணவு உற்பத்திற்கு உயர் தேவையாக இருப்பது தண்ணீர். அந்தத் தண்ணீரைப் பாதுகாப்பது மன்னனின் கடமை என்று அறிவுறுத்துகிற நிலையில் இருக்கிறார் புலவர்.

இயங்கிக் கொண்டிருக்கிற உலகத்தில் செல்வவளம் வேண்டும் என்றாலும் இந்த உலகில் தனிப்பட்ட வல்லமை கொண்ட அரசாக (வல்லரசு என்கிறார்களே அது போல) விளங்க வேண்டும், என்றாலும் சிறந்த புகழை நிலைநிறுத்த வேண்டும் என்றாலும் என்ன செய்ய வேண்டும்., நான் சொல்வதைக் கேள் என்று பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியனுக்குப் புலவர் குடபுலவியனார் என்ன அறிவுரை கூறினார் தெரியுமா?

நிலம் நெளிந்தது கிடக்கின்ற இடத்துப் பள்ளமாக இருக்கும் இடத்தில் தண்ணீரைப் பாதுகாக்கும் பணியைச் செய், அது தான் உனக்கு செல்வத்தையும் ஆட்சி வல்லமையையும் நிலைத்த புகழையும் தரும் என்று அவர் கூறுகிறார். இன்றைய மனநிலையோடு இந்தப் பாடலையும் கருத்தையும் அணுகினால் மிகச் சாதாரணாமாகவே தெரியும். ஆனால் எல்லாம் இறைவன் செயல் என்ற வைதிகக் கருத்தை நிலைநாட்டி மன்னனைப் போற்றி பாடி கொடைபெற்று வாழ்ந்து விட்டதோடு போகாமல் இன்றுவரை சிக்கலாக இருக்கும் தண்ணீர்த் தேவையை நிறைவு செய்வது பற்றி ஆலோசனை கூறியிருப்பதை அறிவியலின் ஒரு

பகுதியாகவே காணவேண்டும், இந்த உலகத்தில் நல்லவை செய்தால் மேலுகத்தில் நன்மைகள் கிடைக்கும்,. சொர்க்கத்தில் இன்பங்களை அனுபவிக்கலாம். இல்லாவிட்டால் நரகம்தான் கிடைக்கும் என்றெல்லாம் இன்றும் சொல்லப்படுகிறது.; நம்பவும் படுகிறது.. இப்படிப்பட்ட எண்ணத்தை சங்ககாலப்

**வைதிகப் புராண மரபை அன்றே உடைத்தெறிந்திருக்கிறார் முதுகண்ணன் சாத்தனார்**

புலவர் ஒருவர் மறுதலிக்கிறார் என்றால் அது வியப்புக்குரியது மட்டுமல்ல பெருமதிப்பிற்கும் உரியது, கடையெழுவள்ளல்களில் ஒருவனாக வைத்தெண்ணப்படுபவன் ஆஅய் அண்டிரன். இவனது கொடைச் சிறப்பை எடுத்துரைக்கின்றார் உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் என்ற புலவர். ஆஅயின் வள்ளல் குணம் அவனது முன்னோர் வழிவந்ததாகும். அதுவன்றி இந்தப் பிறவியில் செய்யும் கொடை அடுத்த பிறவிக்கு உதவியாக இருக்கும் என்பதற்காகச் செய்கின்ற வணிக குணத்தால் அல்ல என்கிறார்.

"இம்மை செய்தது மறுமைக்கு ஆம் எனும்

அறவிலை வணிகன் ஆஅய் ஆலன் பிறரும்

சான்றோர் சென்ற நெறியென

ஆங்குப் பட்டன்று அவன்கை வண்மையே"

(புறநானூறு – 134)

இம்மை மறுமை என்ற கருத்து நிலையை மறுத்ததோடு, அறச் செயலை விலை பேசும் வணிக நிலைக்குத் தள்ளிவிடுகின்ற வைதிகத்திற்குப் பெரும் எதிர்ப்பை இதன் வழி காட்டியிருக்கிறார்.

இந்த உலகம் அழியாமல் பாதுகாக்கப் படுவதற்குக் காரணம் என்ன என்று ஒரு சனாதனியிடம் கேட்டால் ஆக்கல் காத்தல் அழித்தல் எனும் முச்செயலையும் முக்கடவுள்

முறையாகச் செய்து வருவதால்தான் என்று பதில் சொல்வார். அவைதிகரை அல்லது கடவுள் மறுப்பாளரைக் கேட்டால் அழிவுக்கு எதிராகத் தொடர்ந்து சமர் புரிகின்ற மனிதர்களால் என்றுதான் சொல்வார். தான் என்கிற அகம்பாவ எண்ணம் கொண்ட மனிதர்களுக்கும் அத்தகையோரின் அரசுகளாலுமே அழிவுகள் ஏற்படுகின்றன. சாதி, சமயம், இனம், மொழி என்பதோடு நிற்காமல் முதலாளித்துவத்தின் லாபவெறியும் மனிதகுல அழிவுக்குக் காரணமாக இருந்திருக்கிறது. இதையெல்லாம் கண்டிராத காலமாக இருந்தாலும் சங்கப் புலவர் ஒரு பொது விதியைக் கூறுகிறார்.

அமிழ்தம் இனிது என்றாலும் தனித்து உண்ணாமல் பகிர்ந்து கொள்வோரால் — கண்துஞ்சாது உழைப்போரால் — பிறர் அஞ்சுகின்ற தீயவற்றுக்கு அஞ்சுவோரால்— நல்லதுக்காக உயிரையும் ஈகம் செய்வோரால் — பழிவரும் என்று தெரிந்தால் உலகத்தையே தருகிறேன் என்றாலும் செயலைத் தவிர்ப்போரால் — இவற்றுக்கெல்லாம் மேலாக தன்னலம் கருதாதுப் பிறர் நலம் கருதுகின்ற பெரியோரால் இந்த உலகம் நிலைத்து இருக்கின்றது என்று சொல்கிறது ஒரு புறப்பாடல்.

“உண்டால் அம்ம இவ்வுலகம் இந்திரர்

அமிழ்தம் இயைவதாயினும் இனிதெனத்

தமியர் உண்டலும் இலரே முனிவிலர்

துஞ்சலும் இலர் பிறர் அஞ்சுவது அஞ்சிப்

புகழ் எனின் உயிரும் கொடுக்குவர் பழி எனின்

உலகுடன் பெறினும் கொள்ளலர் அயர்விலர்

அன்னமாட்சி அனையராகித்

தமக்கென இயலா நோன்றாள்

பிறர்க்கென முயலுநர் உண்மையானே”

(புறநானூறு – 182)

என்கிற பாடலைப் பாடியிருப்பவர் ஒரு புலவர் அல்ல. கடவுளுமாயிருந்த இளம் பெரும் வழுதி என்கின்ற மன்னன் ஆவான். மன்னனைக் கடவுளுககு நிகராக வைத்துப் போற்றிய பண்டைச் சமூகத்தில் ஒரு மன்னனே அந்த உலகம் நிலைத்திருப்பதற்குக் காரணம் சுயநலம் கருதாது பொதுநலன் நாடும் மனிதர்கள்தான் என்று கூறியிருப்பது கடவுள் மறுப்புக்கு சரியான எடுத்துக் காட்டேயாகும், சங்க இலக்கியங்களைத் தொகுத்து நோக்கும்போது புலவர்கள் கடவுள் வாழ்த்து என்ற நிலையைக் கைக் கொள்ளதது மிகமுக்கியமானது எட்டுத் தொகை நூல்கள் பல புலவர்கள் பாடிய அல்லது எழுதிய பாடல்களின் தொகுப்பு என்பதால் கடவுள் வழ்த்தினைத் தனியொரு புலவர் பாடாதிருந்திருக்கலாம். இருப்பினும் தொகுக்கப்பட்ட பின் வந்தவர்கள் இதனை ஒரு குறையாகக் கருதும்போக்கு உருவாகியிருக்கிறது எனவே பாரதம் பாடிய பெருந்தேவனார் என்ற புலவர் வலிந்து கடவுள் வாழ்த்து என்ற செய்யுளை எழுதி எட்டுத்தொகை நூல்களில் இணைத்திருக்கிறார்.

பத்துப் பாட்டு என்பது தனித்தனிப் புலவர்களால் நூல்போல் ஆக்கப்பட்டவை என்றாலும் எந்தப் புலவரும் கடவுள் வாழ்த்து என்ற காப்புச் செய்யுளைப் பாடவில்லை என்பது எண்ணத்தக்கது. இதனால் பத்துப் பாட்டு தொகை நூலில் முதலாவதாக திருமுருகாற்றுப்படையை வைத்து அதையே கடவுள் வாழ்த்தாகக் கருதிக்கொள்ளளுமாறு விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. எதை எழுதினாலும் செய்தாலும் ஏன் கல்வி பயிற்றும் காலத்தில்கூட கடவுள் வாழ்த்தொன்று தொடங்க வேண்டும் என்ற வைதிக மரபை நமது சங்ககால முன்னோர்கள் கடைப்பிடிக்கவில்லை என்பது குறிப்பிட்டுச் சொல்லத்தக்கது, கடவுளைக் கேலி செய்கிற — கடவுள் பெயரால் சடங்கு செய்வோரை நேரடியாகவே கிண்டல் பேசுகின்ற போக்கினையும் சங்க இலக்கியங்களில் காண்கிறோம்.

இளம்பெண்கள் காதல் வயப்பட்டு காதலனை சந்திக்க முடியாமல் தடை ஏற்படுத்தப் பட்டாலோ மனநிலை பாதிக்கப்படுவது இயல்பு. இதற்கு ஒன்றும் அறியாதவர் உண்மை உணராதவர்கள் பெண்ணுக்குப் பேய் பிடித்து விட்டதாகச் சொல்வார்கள். இதற்குத் தீர்வாக மாந்திரீகம் செய்வது, பூசாரியைக் கொண்டுபோய் பேயோட்டுவது போன்ற நிகழ்வுகள் இன்றும் காணப்படுகின்றன. இதனை எள்ளி நகையாடியத் தமிழ் மரபு ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் காணப்படுவது என்பது பெருமைக்குரியது அல்லவா?

முற்கால இளம்பெண்களுக்கு காதல் மயக்கத்தால் ஏற்படும் மனப் பிறழ்வைப் போக்க வெறியாட்டு நடத்தப்பட்டதாக இலக்கியங்கள் கூறுகின்றன. இதற்கு வேலன் என்ற பூசாரி வருவான் இவன் மீது முருகக் கடவுள் இறங்கிவந்து பெண்ணுக்கு பேய் ஓட்டுவதாகக் கருதப்பட்டது.

இதற்கு நெல்லினைப் பரப்பிவைத்து அதிலே ஒரு குட்டி ஆட்டினை நிறுத்தி வைத்திருப்பார்கள். பின்னர் வேலன் என்ற அந்த பூசாரி மீது முருகன் ஏற அவன் குட்டி ஆட்டினை அறுத்து அதிலிருந்த வெளிப்படும் இரத்தத்தை எடுத்துப் பெண்ணின் நெற்றியில் தடவுவான் இப்படிச் செய்வதால் பெண்ணிடமிருந்து பேய் அகன்று ஓடி விடும் என்பது மூட நம்பிக்கை. இதனை அப்படியே பதிவு செய்திருந்தால் நாம் பேச வேண்டிய தேவை இருக்காது, ஆனால் இளம் பெண்ணின் தோழி இந்த வெறியாடும் வேலனைப் பகடி செய்வதாக இலக்கியம் படைக்கப்பட்டிருப்பது மிகமுக்கியமானது.

"முருகு அயர்ந்து வாந்த இதுவாய் வேல சின்வல் ஓம்புமதி வினவுவது உடையேன் பல்வேறு உருவின் சில்அவிழ் மடையொடு சிறுமறி கொன்று இவள் நறுநுதல் நீவி வணங்கினை கொடுத்தி ஆயின் அணங்கிய விண்தோய் மாமலைச் சிலம்பன் ஒண்தார் அகலமும் உண்ணுமோ பலியே" (குறுந்தொகை – 362)

நான் கேட்கின்றேன் என்று கோபித்துக் கொள்ளாதே. முருகனுக்குப் பலி கொடுப்பதாகச் சொல்லி ஆட்டுக் குட்டியைக் கொன்று அந்த இரத்தத்தைத் தலைவியின் நெற்றியில் தடவுகிறீர்களே இந்த பலியிடுதலை குறிஞ்சி நிலத் தலைவனான சிலம்பனின் மார்பு உண்ணுமோ ? என்று தோழி கேட்கிறாள் எவ்வளவு நாசுக்கான நக்கலான மொழியில் தோழி பேசுகிறாள் பார்த்தீர்களா? தலைவிக்கு நோய் தந்தவன் குறிஞ்சி நிலத் தலைவன் அவனை அழைத்து மணமுடிப்பதை விடுத்து முருகனுக்குப் பலிகொடுத்துக் கொண்டிருக்கிறீர்களே என்று நேரடியாகப் பளிச்சென பேச வேண்டியதைத் தான் அடக்கமாக மாற்றிப் பேசுகிறாள், ஒரே ஒரு புலவர் மட்டுமல்ல வெறிபாடி காமக் கண்ணியார் பாடல் தரும் (அகநானூறு 22, 98) குறுந்தொகை 111, 263, 360 ஐங்குறுநூறு 138, 156, 232, 272 நற்றிணை 34 ஆகிய பாடல்களும் வெறியாட்டினை இகழ்ந்தே பாடப்பட்டுள்ளன.

குறிஞ்சி நிலத் தேய்வம் முருகன் என்று ஒரு பக்கம் கூறினாலும் மறு பக்கம் அந்த மருகனின் பெயரால் நடக்கும் மூடச் சடங்குகளைப் பெண்களே எதிர்த்ததாகப் புலவர்கள் பதிவு செய்திருப்பது அவைதிக மரபுகளை அவர்கள் உள்வாங்கியிருக்கிறார்கள் என்பதை காட்டுகிறது, சங்க இலக்கியங்களுக்குப் பிந்தைய காலகட்டத்தில் இயற்றப்பட்டதான காப்பியங்கள் பெரும்பான்மையும் சமண. பவுத்த சார்புடைய புலவர்களின் படைப்புகளாகும் இவற்றில் நமக்கு முழுமையாகக் கிடைத்திருப்பவை சிலப்பதிகாரம், மணிமேகலை சீவக சிந்தாமணி நீலகேசி ஆகியவையே மற்றவை பெரும் சிறும் காப்பியங்கள் என்ற பட்டியலில் இருந்த தாலும் முழுமையாகக் கிடைக்கவில்லை. கிடைத் திருப்பதிலும் மணிமேகலைக்காப்பியமே முழுக்க முழுக்க தத்துவ விளக்க நூலாக இருக்கிறது. சிலப்பதிகாரத்தின் கணிகைப் பாத்திரமான மாதவி கோவலனைப் பிரிந்தபின் புத்தமதத்தைத் தழுவுகிறாள். அவளது மகள் மணிமேகலையும்புத்த பிக்குணியாகிறாள்,. மணிமேகலையின் மூலமாக புத்த சமயக் கருத்துக்கள் நிலை நாட்டப்படுகின்றன. பலவகையான சமயவாதங்களை வாதத்ததால் நிராகரிக்கும் பகுதியாக "சமயக் கணக்கர்தம் திறம் கேட்ட காதை" விளங்குகிறது, மணிமேகலை காப்பியத்தின் மையநோக்கமாக விளங்குவது

**சங்க இலக்கியங்களைத் தொகுத்து நோக்கும்போது புலவர்கள் கடவுள் வாழ்த்து என்ற நிலையைக் கைக் கொள்ளதது மிகமுக்கியமானது**

மனித சமுதாயத்தின் பசிப்பிணி தீர்ப்பது. இந்தப் பிணிக்கு மருந்தாக அவளுக்குக் கிடைப்பது அட்சய பாத்திரமாகும். . இந்தப் பாத்திரத்தின் மூல நாயகனாக இருப்பவன் ஆபுத்திரன் அதாவது பசுவின் மைந்தன். இந்த ஆபுத்திரன் கதை வழியே வைதிக மரபுகளை அம்பலப்படுத்தி அவைதிக கருத்துக்களை நிலைநாட்டுகிறார். வேத சமயத்தின் மீதும் வேள்வி முறைகள் மீதும் கடுமையான நேரடித் தாக்குதலைத் தொடுக்கிறது ஆபுத்திரன் கதை.

வாரணாசியில் அபுஞ்சிகன் எனும் மறையோன் இருந்தான் இவனது பார்ப்பன மனைவி சாலி அவள் ஒழுக்கம் தவறியதால் குமரியில் நீராடப் புறப்படுகிறாள் (இக்காலத்தில் குமரியிலிருந்து வாரணாசிக்கு (காசிக்கு) செல்கிறார்கள் அக்காலத்தில் வாரணாசியிலிருந்து குமரிக்கு வந்தார்கள் என்பது எண்ணத்தக்கது) வருகிற வழியில் முறைகேடாக உற்ற கருவிலிருந்து குழந்தை பிறக்கிறது. அதனை சிசுக்கொலை செய்யாமல் மறைவான ஒரிடத்தில் போட்டுவிட்டுப் போகிறாள். பின்னர் குழந்தை பசியால் அழுகிறது அழுகிறவனுக்கு இரங்கிய பசு ஒன்று அங்கு வந்து குழந்தைக்குப் பால் கொடுத்துப் பாதுகாக்கிறது.

இப்படி வளர்ந்த குழந்தைக்குப் பெயர்தான் ஆபுத்திரன் எனப்படுகிறான், பின்னர் இளம்பூதி என்கிற மறையோனும் அவனது மனைவியும் ஆபுத்திரனை வளர்க்கிறார்கள். அவன் வாழ்த்த ஊரில் மறையவர்களால் வேள்விக்கு ஏற்பாடு செய்யப்படுகிறது அந்த யாகத்தீயிலே போடுவதற்கு பசு ஒன்று கட்டப்பட்டுள்ளது அந்த பசுவின் நிலையையும் ஆபுத்திரனின் தவிப்பையும் இப்படி சொல்லோவியம் ஆக்குகிறார் சீத்தலைச் சாத்தனார், “கொலை நவில் வேட்டுவர் கொடுமரம் அஞ்சி வலையிடைப் பட்ட மானே போன்று அங்கு அஞ்சி நின்று அழைக்கும் ஆ துயர் கண்டு நெஞ்சு நடுக் குற்று நெடுங்கணீர் உகுத்தான்”ஆபுத்திரன் மனம் பொறுக்காத அவன் அந்தப் பசுவை இரவோடு இரவாக அவிழ்த்துச் சென்று விடுகிறான். மறையவர்கள் அவனையும் பசுவையும் தேடிக் கண்டுபிடிக்கிறார்கள்.

தாய் தந்தையின் பெயர் அறியாததால் அவனைப் “புலைச் சிறுமகனே” என்று இழிவாக விளித்தார்கள் கொன்று விடுவோம் என்று கோல்கொண்டு அடிக்கிறார்கள்.

‘அருமறை நன்னூல் அறியாது இகழ்ந்தனை” என்று வேதங்கள் — அரியவை நன்னூல் என்றெல்லாம் புகழ்ந்து கூறி அஃதறியாமல் இகழ்ந்து விட்டாய் என்றும் கோபப்படுகிறார்கள். பசுமாட்டினை வேள்வியில் இடச்சொன்னதுதான் அருமறை நன்னூல் என்பதை இங்கே நினைவில் நிறுத்த வேண்டும். இதற்கிடையே அந்தப் பசு அங்கே இருந்த தலைமை மறையவனைக் கொம்பால் குத்தி தள்ளிவிட்டு காட்டுக்குள் ஓடி விடுகிறது. வேதங்களின் அருமை பெருமைகளை இவன் அறியாதற்குக் காரணத்தையும் கண்டறிந்து விட்டவர்கள்போல் “ஆமகன் ஆதற்கு ஒத்தனை அறியாய்” என்கிறார்கள், இதுவரை பொறுமை காத்த ஆபுத்திரன் ஆவேசம் அடைகிறான். வைதிகமரபில் செல்லப்பட்டுள்ள மறையவர்களின் பிறப்புத் தன்மைகளைப் பட்டியலிட்டு சொல்கிறான், இருடி (KS) கணங்கள் என்று உங்கள் குலத்தில் உயர்வாக செல்லப்படுகிற அசலன் என்பவன் பசுவின் மகன். சிருங்கி என்பவன் மானின் மகன். விரிஞ்சி என்பவன் புலியின் மகன். கேசகம்பளன் என்பவன் நரியின் மகன் என்ற பட்டியலைச் சொல்லி விட்டு பசு வளர்த்தால் நான் மட்டும் இழிந்த குலம் ஆகிவிடுவேனா? நான்கு வேதங்களை நல்ல நூல் என்றீர்களே அதில் அப்படித்தான் சொல்லப் பட்டிருக்கிறதா என்று சாடுகிறான்,அது மட்டுமல்ல வேதங்களில் நிறைந்தவர்கள் என்று சிலரைச் சொல்கிறீர்களே அவர்களின் நிலை என்ன? அகத்தியர் வசிஷ்டர் என்று கூறப்படும் இரண்டு அந்தணர்களும் யாருடைய பிள்ளைகள்?

(திலோத்தமை என்ற) கணிகைக்குப் பிறந்தவர்கள் சொல்லுங்கள் நான் சொல்வதில் ஏதாவது பொய்யிருக்க நிலைமை இப்படி இருக்கும்போது என்தாய் சாலி என்ன தவறு செய்து விட்டாள்? என்று கேள்விகளை அடுக்குகிறான்.

“ஆன்மகன் அசலன் மான்மகன் சிருங்கி புலிமகன் விரிஞ்சி புரையோர் போற்றும் நரிமகன் அல்லனோ கேச கம்பளன் ஈங்கு இவர் நும்குலத்து இருடி கணங்கள் என்று ஓங்குயர் பெருஞ்சிறப்பு உரைத்ததும் உண்டால் ஆவொடு வந்த அழிகுலம் உண்டோ நான்மறை மாக்காள் நன்னூல் அகத்து “ மாமறை மாக்கள் வருங்குலம் கேண்மோ

**கடவுளைக் கேலி செய்கிற கடவுள் பெயரால் சடங்கு செய்வோரை நேரடியாகவே கிண்டல் பேசுகின்ற போக்கினையும் சங்க இலக்கியங் களில் காண்கிறோம்.**

முதுமறை முதல்வன் முன்னர்த் தோன்றிய

கடவுட் கணிகை காதலஞ்சிறுவர்

அருமறை முதல்வர் அந்தணர் இருவரும்

புரிநூல் மார்பீர் பொய்யுரை யோமோ

சாலிக்கு உண்டோ தவறு மணிமேகரை ஆபுத்திரன் திறம் அறிவித்த காதை ; வரிகள் 63, 69, 93, 99 என்று கோபம் கொப்பளிக்கப் பேசும் ஆபுத்திரன் பாத்திரத்தின் வழியாக வேள்விகளை அம்பலப்படுத்தி ரிஷிகள் என்றும் வேத விற்பன்னர்கள் என்றும் போற்றப்படுவோரின் பிறப்புண்மைகளை வெளிப்படுத்தியும் சாடுகிறார் சீத்தலைச் சாத்தனார்.

பசுக்களைப் பாதுகாப்பதற்காகவே பிறந்திருப்பதுபோல் இப்போதும் காட்டிக் கொள்வோரின் முன்னோர்கள் வேள்விகளில் இளம் பசுக்களைக் கொல்வதற்கு என்னமாய்த் துடித்திருக்கிறார்கள்! பசுவைக் காப்பற்றிய ஆபுத் திரனை எப்படித் தாக்கியிருக்கிறார்கள் இழிவு படுத்தியிருக்கிறார்கள். என்பதை மணிமேகலைக் காப்பியம் எடுத்தியம்புகிறது..சென்ற நூற்றாண்டில் தந்தை பெரியார் அவர்கள் வேதமரபினரின்

பிறப்புகளை இழிவுபடுத்திப் பேசியதாகக் கூறுவோர் இத்தகைய எதிர்கருத்து நிலையை சொல்வது காலம் காலமான மரபு தான் என்பதை உணரச் செய்கிறது, பண்டையச் சமூக மரபில் கடவுள் மறுப்பு என்பதோடு கடவுளை நிலை நாட்டுவதற்கு பயன்படுத்தப்படும் கருவிகளான வேத மறுப்பு . சடங்கு மறுப்பு என்பதுதான் நாத்திகத்தின் வேராக பார்க்கப்படுகிறது.

வேதாந்தங்களான உபநிடதங்கள் பிறவும் கடவுளின் கிருபை அவற்றிற்குச் செய்யவேண்டிய சடங்குகளை விரித்துரைக்கின்றன. இவற்றையெல்லாம் வேதமறுப்பாளர்கள் பகடி செய்ததற்கான தரவுகள் இலக்கியங்களில் ஏராளமாக இருக்கின்றன

"கங்கையில் மூழ்கினால் பாவம் தீரும் என்றால் கங்கைக்குள்ளே கிடக்கும்

மீன்களுக்கு அது பொருந்தாது."

இறந்த பின் வானுலகம் சென்றதாக நம்புகின்ற உறவினர்கள் வீட்டில் சடங்கு செய்து உணவு படைக்கிறார்கள். மேலுலகத்தில் இருக்கும் உறவினர்கள் அதை ஏற்றுக் கொள்வார்கள் என்று நம்புகிறார்கள்.. அப்படியெல்லாம் வீட்டின் தரைத் தளத்தில் ஒருவன் உணவுண்டால் முதல் தளத்தில் இருப்பவனுக்கு பசி போய்விடுமா என்றும் பேசி வைதீகச் சடங்குகளையும் மூட நம்பிக்கைகளையும் கேள்விக்கு உட்படுத்தியிருக்கிறார்கள். இதனைச் சகித்துக்கொள்ள முடியாதவர்கள் வாதத்தால் வென்றதில்லை மாறாக வசை மாரி பொழிந் திருக்கிறார்கள்.

சூழ்ச்சி அதிகாரத்தால் இருப்போரின் துணையோடு வன்செயலில் ஈடுபட்டிருக்கிறாள். ஐஞ்சிறு காப்பியங்களில் ஒன்றான நீலகேசியில் கதைத் தலைவியான நீலகேசி பூதகனுடன் வாதிடுகிறாள். "சாத்திரமாவது வேதமன்றோ; அதுதான் சுயம்பு" என்பது பூதகனின் வாதம்.

ஆனால் வேதங்களும் அவற்றிற்கு விளக்கங்களாக வந்த பிற நூல்களும் முரண்பட்டுக் கிடக்கின்றன அவற்றால் பயனில்லை என்றாள் நீலகேசி. ஆத்திரமடைகிறான் பூதகன். வேத வேதாகமங்களை மறுத்துப் பேசிய நீலகேசி பற்றி பூதகன் எடுத்து சொல்லும் வார்த்தை மிகவும் கவனிக்கத்தக்கது, "சூத்திரி நீ அது வல்லை அலாமையின் சொல்லுகிறாய்" வாதிட்டு வெல்ல முடியாதவன் வர்ணாசிரமத்திற்குள் புகுந்து விடுகிறான்.

நீ சூத்திரி என்பதால் உனக்கு வேதத்தில் வல்லமை இல்லை அதனால்தான் அப்படிச் சொல்கிறாய் என்கிறான், இப்படித்தான் வாதிட்டு வெல்லமுடியாத வைதிக மரபினர் வசை மொழியை வன்முறையைக் கையிலெடுக்கிறார்கள். அவைதிகர்கள் காலந்தோறும் உண்மைகளை உரக்கப் பேசிக்கொண்டே இருக்கிறார்கள். அதனால் கோவிந்த் பன்சாரே போன்றோரை அண்மைக் காலத்தில் இழந்திருக்கிறோம் இடைப்பட்ட காலத்தில் எட்டாயிரம் சமணர்கள் கழுவேற்றப்பட்டு கொல்கிறார்கள். அதற்கும் முற்பட்ட காலத்தில் எதுவும் நடக்கவில்லை என்று எண்ணிவிடக் கூடாது.

**சங்க இலக்கியங்களைத் தொகுத்து நோக்கும்போது புலவர்கள் கடவுள் வாழ்த்து என்ற நிலையைக் கைக் கொள்ளளதது மிகமுக்கியமானது**

"ஒன்று புரிந்து ஈரிரண்டின்

ஆறுணர்ந்த ஒரு முது நூல்

இகல்கண்டோர் மிகல் சாய்மார்"

(புறநானூறு 166)

என்ற ஆவூர் மூலங்கிழாரின் புறநானூற்றுப் பாடல் வரிகளுக்கு விளக்கம் அளிக்க வந்த பழைய உரையாசிரியர் 'வேதத்திற்கு மாறுபட்ட நூல்களைக் கண்டோராகிய புத்தர் முதலான புறச் சமயத்தோரது மிகுதியைச் சாய்க்க வேண்டி என்கிறாள் (சாய்த்தல் / வீழ்த்துதல்) சாய்த்தல் என்பது கருத்துக்களை அல்லது கருத்துக் கொண்டிருந்தவர்களை கொள்கை பரப்பியவர் களை வீழ்த்துதல் என்பதை வரலாற்றின் வழி அறிந்து கொள்கிறோம்.

அவைதிக மரபுகளை முன்னெடுத்தல் என்பது எல்லாக்காலத்திலும் இருந்திருக்கிறது என்பதையும் அதற்கு என வசை பொழியப்பட்டிருக்கிறார்கள், களப் பலியாகியிருக்கிறார்கள் என்பதையும் தொல்காப்பிய காலம் தொடங்கி நீலகேசி காலம் வரை நெடுகக் காண்கிறோம் அதன் நீட்சியை வளரவொட்டாமல் வெட்டத் துடிப்பவர்கள் வைதிக மரபினர்.. வெட்ட வெட்ட மேலும் கிளர்ந்து துளிர்த்துக் கொண்டே இருப்பார்கள் அவைதிக மரபினர். ஏனெனில் அவைதிகம் என்பது அறிவின்பாற்பட்டது,

**(கட்டுரையாளர் – பத்திரிக்கையாளர் – மார்க்சிய சிந்தனையாளர்)**

தாராளப் பெண்ணியம் சமதர்மப் பெண்ணியம். தீவிரப் பெண்ணியம் என்னும் வகைகளையெல்லாம் மீறிப் பெரியாரியப் பெண்ணியம் அமைந்துள்ளது. மகளிர் பற்றிய பெரியாரின் கருத்ததுக்களும் இலட்சியங்களும் சீர்திருத்தக் கருத்துக்கள், கொள்கைகள் என்னும் அளவில் குறுக்கி நிறுத்திவிட முடியாதவை.

உரிமை கேட்டுப் போராடும் பெண்களே திகைக்கக் கூடிய சிந்தனைதான் பெரியாருடையது. அதாவது பெண்ணியத்திலும் பெரியார் அழிவு வேலைக்காரரே! பெண்ணைத் திருத்துவதன்று நீ- மாறாகப் பெண்ணை மாற்றவது பெண்களைப் புதுமையாக்குவதுதான் பெரியாரின் இலட்சியம். சம்பிரதாயப் பெண்ணை (அடிமைப் பெண்) அழித்து உரிமைப் பெண்ணை வளர்த்து புது உலக விடுதலைப் பெண்ணை உருவாக்குவதே பெரியாரின் முயற்சி.

பெண்ணே! உன்னை மூடி இருக்கும் திரையை நீக்கு! உன்னைத் தடுத்து நிறுத்தும் தடைச் சுவரினை உடைத்து எறி! உன்னைப் பூட்டியிருக்கும் விலங்கினை நொறுக்கித் தூள் தூளாக்கு! உன் மூளையில் படிந்திருக்கும் பாசியை வழித்தெறி! என் நெஞ்சத்தில் கால மெல்லாம் ஏற்றி வைக்கப்பட்டு உறைந்து போய் கிடக்கின்ற உணர்வுகளையெல்லாம் பொசுக்கு! உன்னைச் சுற்றி ஆயிரமாயிரம் ஆண்டுகளாக இருப்பன அனைத்தையும் சுக்கு நூறாக்கு! அழி! அனைத்தையும் அழி! முழுவிடுதலை பெற்ற பெண்ணாக நீ வருவாய்! இப்படித் தான் பெரியார் சிந்தனையில் தாக்கம் பெண்களுக்கு இருந்திருக்க வேண்டும்.

“பெண் ஏன் அடிமையானள்?” என்னும் நூல் 120 பக்கங்களைக் கொண்டது பெரியரின் சீரிய அப்பட்டமான கருத்துக்களையும் ஆய்வுகளையும் இந்நூலில் காணலாம் முகவுரை யிலேயே பெரியார் பெண்ணடிமைக்குக் காரணங் களாக உள்ளனவற்றைத் தெற்றென எடுத்து வைக்கிறார்.

“இதில் கண்ட விஷயங்கள் இதுவரை மக்களிடையே இருந்து வருகின்ற உணர்ச்சி களுக்கும் ஆதாரங்களுக்கும் மனித சமூகக் கட்டுப் பாட்டு. ஒழுக்கம், ஆசாரம், மதக்கொள்கை,

# பெரியாரின் விடுதலைப் பெண்ணியம்



சாஸ்திர விதி என்பவனவற்றிற்கும் பெரிதும் முரணாகவும். புரட்சித் தன்மைபோன்ற தலைகீழ் மாறுபாடான அபிப்பிராயங்கள் கொண்டதாகவும் சாதாரண மக்களுக்குக் காணப்படும்." ஒரு சொல்லாராய்ச்சிக்காரராக இருந்து பெரியார் "கற்பு" எனும் சொல்லை ஆய்கிறார் அச்சொல்லைப் பகுபதமாகவும் பகாப் பத மாகவும் வைத்துப் பார்த்து அதற்குத் தரப்பகின்ற பொருள், விளக்கம் முதலான வற்றையும் வைத்துப்பார்த்துப் பெரியர் எடுத்த முடிவு தான் இது. "கற்பு என்பது பெண்களுக்கு மாத்திரம் சம்பந்தப்பட்டது என்பதற்குத் தக்க ஆதாரம் கிடைக்காவிட்டாலும் அழிவில்லாதது, உறுதியுடையது என்கிற பொருள்களே காணக் கிடக்கின்றன."

அழிவில்லாதது அதாவது சுத்தம் கெடாதது மாசற்றது என்று கொண்டால் ஆங்கிலத்திலும் இக்கருத்து இவ்வாறே அமைந்திருக்கிறது என்பதை விளக்கும் முகத்தான் பெரியர் குறிப்பிடுவது:—

"சேஸ்ட்டிடி (Chastity) என்கிற ஆங்கில வார்த்தைப்படி பார்த்தால் வர்ஜினிட்டித் (virginity) என்பதே பொருள் ஆகும். அதை அந்தப் பொருளின்படிப் பார்த்தால் இது ஆணுக் கென்றோ பெண்ணுக்கு என்றோ சொல்லாமல் பொதுவாக மனித சமூகத்திற்கே, எவ்வித ஆண் பெண் புணர்ச்சி சம்பந்தமே சிறிதும் இல்லாத பரிசுத்தத் தன்மைகே உபபோகப்படுத்தி இருக்கின்றது என்பதைக் காணலாம்.

பெரியாரின் முடிவு இதுதான்:—

"கற்பு என்பது பெண்களுக்கு மாத்திரம் சம்பந்தப்பட்டதன்று என்பதும் அதுவும் ஆணோ பெண்ணோ ஒரு தடவை கலந்த பிறகு எவ்வளவு சுத்தமாயிருந்தாலும் கற்பு போய்விடுகிறது என்கிற கருத்துக் கொள்ளக் கூடியதாயுமிருக்கின்றது"

கற்பு என்பது பெண்ணுக்கோ ஆணுக்கோ சொல்லப்பட்டதன்று என்பதும் பொதுவாக மனித சமூகத்திற்கே சொல்லப்பட்டது என்பதும் – ஆண் – பெண் புணர்ச்சி சம்பந்தமே இல்லாத தூய நிலைக்கே சொல்லப்பட்டது என்பதுமே திரண்ட கருத்தாகும்.

ஆரியக்கலாச்சார ஊடுறுவலுக்குப் பின்னர்தான் தமிழகத்தில் கற்பு என்னும் சொல்லுக்குப் பதிவிரதைத் தன்மை என்கிற பொருள் கொள்ளப்படுகிறது. இதை எடுத்துக் காட்டிவிட்டுப் பெரியார் தெள்ளத்தெளியப் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

"இந்தஇடத்தில்தான் கற்புஎன்கிறவார்த்தைக்கு அடிமைக்கருத்து நுழைக்கப்படுகின்றது என்பது எனது அபிப்பிராயம்" "கற்பு என்பதற்கு பதி— விரதம் என்று எழுதிவிட்டதன் பலனாலும் பெண்களை விட ஆண்கள் செல்வம் வருவாய். உடல் வலிவு கொண்டவர்களாக ஆக்கப்பட்டு விட்டதனாலும் பெண்கள் அடிமையாவற்கும் புருஷர்கள் மூர்க்கர்களாகிக் கற்பு என்பது தங்களுக்கு இல்லை என்று நினைப்பதற்கும் அனுகூலம் ஏற்பபட்டதே தவிர வேறில்லை?" முடிவாக பின்வருமாறு எழுதுகிறார் பெரியார்.

**ஆரியக்கலாச்சார ஊடுறுவலுக்குப் பின்னர்தான் தமிழகத்தில் கற்பு என்னும் சொல்லுக்குப் பதிவிரதைத் தன்மை என்கிற பொருள் கொள்ளப்படுகிறது.**

"உண்மையாகப் பெண்கள் விடுதலை வேண்டுமானால் ஒரு பிறப்புக்கொரு நீதி வழங்கும் நிர்பந்தக் கற்புமுறை ஒழிந்தது. இருபிறப் பிற்கும் சமமான சுயேட்சைக் கற்புமுறை ஏற்பட வேண்டும்".

திருணம் எனபதே பெண்களை அடிமையாக்கி கொள்வதற்கு ஆண்கள் ஏற்படுத்திக் கொண்ட ஏற்பாடே என்று பெரியார் விவாதிக்கிறார். "நமது கல்யாணத் தத்துவம் எல்லாம் சுருக்கமாய் பார்த்தால் பெண்களை ஆண்கள் அடிமையாகக் கொள்வது என்பதைத் தவிர வேறு ஒன்றுமே அதிலில்லை. அவ்வடிமைத் தனத்தை மறைத்துப் பெண்களை ஏமாற்றுவதற்கே சடங்கு முதலியவைகள் செய்யப்படுவதோடு அவ்விதக் கல்யாணத்திற்குத் தெய்வீகக் கல்யாணம் என்பதாக ஒரு அர்த்தமற்ற போலிப் பெயரையும் கொடுத்துப் பெண்களை வஞ்சிகின்றோம்".

எப்படிக் கற்பு, கல்யாணமென்பனவெல்லாம் பெண்களை அடிமைப் படுத்த ஏற்பட்டனவோ, அப்படியே விபச்சாரம் என்பது பெண்ணை இழிவுபடுத்தவும், அடிமைப்படுத்தவும் ஏற்பட்ட அமைப்பே என்று பெரியார் சாடுகிறார்.

"விபச்சாரம் என்னும் வார்த்தையின் அனுபவத் தத்துவத்தை கூர்ந்து கவனித்துப் பார்த்தால் விபச்சாரம் என்பது பெண்கள் அடிமைகள் என்பதைக் காட்டும் குறிப்பு வார்த்தை என்றுதான்

சொல்ல வேண்டுமேயொழிய வேறன்று. ஏனெனில் விபச்சார தோஷம் என்பது விபச்சாரம் செய்வதால் ஏற்படும் ஒழுக்கக் குறைவு என்பதும் இப்பொழுது வழக்கத்தில் பெண்களுக்கேதான் உண்டேயொழிய ஆண்களுக்கு அந்த மாதிரி கிடையவே கிடையாது“.


“பெண்கள் சுதந்திரம். பெண்கள் விடுதலை என்பவைகளுக்காக நடைபெறும் காரியங் களில் “விபச்சாரம்“ என்னும் காரியம். வந்து முட்டுக் கட்டை போடுமானால் அதைத் தைரியமாய் எடுத்தெறிந்துவிட்டு முன்னோக்கிச் செல்ல வேண்டியது உண்மையான உழைப்பாளிகளின் கடமையாகும்”. சொத்துரிமைக் கிளர்ச்சிகளுக்குப் பெண்களைத் தூண்டும் வகையில் பெரியார் எழுதினார். “பெண் அடிமை என்பதற்கு உள்ள காரணங்கள் பலவற்றுள் சொத்துரிமை இல்லாதது என்பதே மிகவும் முக்கியமான காரணம் என்பது நமது அபிப்பிராயம். ஆனால் பெண்கள் தாராளமாகவும் துணிவுடனும் முன் வந்து சொத்துரிமைக் கிளர்ச்சி செய்ய வேண்டியது மிகவும் அவசியமும் அவசரமுமான காரியமாகும்.’’ எல்லாவற்றிற்கும் மேலாகப் பெரியாரால் கடுமையாக விமரிசிக்கப்படிருப்பது பெண்களுக்கே உரிய கர்ப்பமாதல் எனும் நிலைதான். கர்ப்ப விடுதலையே பெண் விடுதலை என்பது தான் பெரியாரின் எல்லை மீறு கருத்தாகும்.

“பொதுவாகப் பெண்களின் விடுதலைக்கும் சுயேச்சைக்குமே கர்ப்பம் விரோதியாயிருப்பதால் சாதாரணமாய்ப் பெண்கள் பிள்ளைகளைப் பெறுவது என்பதையே அடியோடு நிறுத்திவிட வேண்டும்.” பெண் விடுதலைக்கு அவளுடைய கர்ப்பம் தடையாக இருக்கிறது என்றால் அத்தடையை நீக்கு என்பதே பெரியாரின் அணுகுமுறை!

பெரியான் சுயமரியாதைக் கொள்கைகள் பெண்விடுதலைக்கான சூழ்நிலையை உருவாக்கித் தருகிறது. சுயமரியாதைக் கோடரியை ஏந்தி நின்று சுயமரியாதைப் பெண்ணாகி, பெண்ணின விடுதலைப் போராளியாகப் பெண்கள் அணிவகுத்துச் செல்ல வேண்டும். தாராளப் பெண்ணியம் சமதர்மப் பெண்ணியம். தீவிரப் பெண்ணியம் என்னும் வகைகளையெல்லாம் மீறிப் பெரியாரியப் பெண்ணியம் அமைந்துள்ளது. கற்பு . காதல். விபச்சாரம். கர்ப்பந்தரித்தல். திருமணம், . குடும்பம், சொத்து போன்றவை தொடர்பான கருத்துக்களின் எல்லை மீறு தீவிரம் தான் பெரியாரியப் பெண்ணியத்தை மற்ற பெண்ணிய வகைகளிலிருந்து வேறுபடுத்திக் காட்டுகிறது.. உலகப்பெண்ணிய சிந்தனையாளர்கள் வரிசையில் பெரியார் இடம்பெறுவதோடு இவருடைய தீவிர பெண்ணியக் கருத்துக்களுக்கு ஒட்டி வரக்கூடிய பெண்ணியச் சிந்தனையாளர்கள் மிகக் குறைவே. எல்லாப் பெண்ணியக் கோட்பாடுகளும் உரிமைப் பெண்களை உண்டாக்கிவிடும். ஆனால் விடுதலைப் பெண்ணை ஆக்குகின்ற சக்தி பெரியாரியப் பெண்ணியத்திற்கே உண்டு என்று அழுத்ததாகக் கூறலாம்.

**(பேரா.எம்.கே.சுப்ரமணியம் எழுதிய, பெரியார் திராவிடர் கழகம் வெளியிட்ட ‘பெரியாரின் விடுதலை பெண்’ நூலிலிருந்து)**

●

புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

படியுங்கள்!

ஆண்டுச் சந்தா ரூ.200

முகவரி : 29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர், சென்னை 600 041
www.dvkperiyar.com

# போராட்டம், மாநாடுகளில் பெண்களுக்கு முன்னுரிமை தந்த சுயமரியாதை இயக்கம்


**முனைவர் ச. ஆனந்தி**

சுயமரியாதை இயக்கத்தின் முக்கிய அம்சம் – அந்த இயக்கம் நடத்திய மாநாடுகளாகும். மாநில அளவிலும் – மாவட்ட அளவிலும் இத்தகைய மாநாடுகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வந்துள்ளன, கொள்கை முழக்கங்களோடு ஊர்வலம் – சுயமரியாதை இயக்கத்தின் கொள்கைளை விளக்கிடும் நீண்ட பேருரைகள் – பல்வேறு அரசியல் சமூக நிகழ்வுகள் குறித்த விரிவான தீர்மானங்கள் ஆகியவை இந்த மாநாடுகளின் தனிச்சிறப்புகள். பெண்களின் பிரச்சனைகளைத் தொடர்ந்து பிரச்சாரம் செய்யவும், பெண்களை பொதுவாழ்வில் பங்கெடுக்க ஊக்கப்படுத்தவும் இந்த மாநாடுளை சுயமரியாதை இயக்கம் தொடர்ந்து பயன்படுத்தி வந்திருக்கிறது.

*முதல் சுயமரியாதை இயக்க மாநில மாநாடு 1929 இல் சென்னை அருகே செங்கல்பட்டில் நடந்தது மாநாட்டில் சைமன் கமிஷன் சாதிய ஒடுக்குமுறை, மத நிறுவனங்களின் சுரண்டல் பற்றி பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதோடு திருமணம் மற்றும் மதச்சடங்குகள் பற்றி விசேட கவனம் செலுத்தி இந்த மாநாடு பரிசீலித்தது. அது தொடர்பாக பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன ஆணுக்கும் பெண்ணுக்கும் சொத்தில் சம உரிமை வேண்டும் என்பது தீர்மானங்களில் ஒன்று.*

*இரண்டாவது சுயமரியாதை மாநாடு 1930ல் ஈரோட்டில் நடந்தது அதே மாநாட்டில் அரங்கில் இளைஞர்கள் மாநாடும் பெண்கள் மாநாடும் தனித்தனியாக நடத்தப்பட்டன. பெண்கள் விடுதலைக்கு பெண்களே முன்வர வேண்டும் என்பது பெரியாரின் கொள்கை. அந்த அடிப்படையில்தான் பெண்களுக்கான தனி மாநாடு நடத்தப்பட்டது.*

*பெண்கள் உரிமைக்காக ஆண்கள் போராட வரமாட்டார்கள் என்பது பெரியாரின் உறுதியான கருத்து அந்த மாநாட்டைப் பெண்களே முழுமையாக முன்னின்று நடத்தினர் 16 வயது வரை பெண்களுக்கு கட்டாயக் கல்வி தர வேண்டும், பால்ய விவாகத் தடுப்புச் சட்டத்தைத் தீவிரமாகவும் உடனடியாகவும் அமல்படுத்த வேண்டும். பெண்களைக் கோயிலுக்குப் பொட்டுக் கட்டி விட்டு விபச்சாரிகளாக்கும் இழிவுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்ற தீர்மானங்கள் அதிலே நிறைவேற்றப்பட்டன. (குடி அரசு 1930 மே 18) பொதுமாநாட்டில் குறுக்கிடாமல் – இந்தப் பெண்கள் மாநாடு தனியாகவே நடத்தப்பட்டது. இளைஞர்கள் மாநாட்டிலும்*



**1938 -இல் சென்னையில் நடைபெற்ற பெண்கள் மாநாட்டில், தீர்மானம் நிறைவேற்றி அய்யாவுக்கு! அளிக்கப்பட்ட பட்டம் தான் "பெரியார்".**

> பெண்கள் உரிமைக்காக ஆண்கள் போராட வரமாட்டார்கள் என்பது பெரியாரின் உறுதியான கருத்து

பெண்ணுரிமைக்கான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இளைஞர்கள் – விதவைகளையும் தேவதாசிப் பெண்களையும் திருமணம் செய்ய முன்வர வேண்டும் என்று அந்த மாநாடு அறைகூவல் விடுத்தது சுயமரியாதை இயக்கத்தின் பெண் தொண்டர்களைக் கொண்டு தனியாகப் பெண்கள் மாநாடு நடத்தப்பட்டாலும் மாநாட்டிலும் பெண்களின் பங்களிப்பு கணிசமாகவே இருந்தது அதாவது பெண்கள் இயக்கத்தோடு மட்டும் பெண்களை முடக்கிவிட நினைக்கவில்லை. பல நேரங்களில் மாநாட்டின் முக்கிய கவுரவமாகக் கருதப்படும் மாநாட்டுத் துவக்க உரையை நிகழ்த்தும் பொறுப்புக்களே பெண்கள் மீது சுமத்தப்பட்டிருக்கின்றன.

உதாரணத்திற்குச் சிலவற்றைக் குறிப் பிடுவோம்.

1. 1931இல் விருதுநகரில் நடந்த மூன்றாவது சுயமரியாதை மாநாட்டைத் துவக்கிவைத்தவர் இந்திராணி பாலசுப்பிரமணியம் (குடி அரசு 1931 ஆகஸ்ட் 16)
2. 1932 இல் நடந்த தஞ்சை மாவட்ட சுயமரியாதை மாநாட்டைத் துவக்கி வைத்தவர் டி.எஸ் குஞ்சிதம் (குடிஅரசு 1932 ஜீன் 26)
3. 1933 இல் தஞ்சை மாவட்ட மூன்றாவது சுயமரியாதை மாநாட்டைத் துவக்கி வைத்தவர் எஸ். நீலாவதி.
4. 1934 இல் திருச்செங்கோடு தாலுகா ஆதி திராவிடர் மாநாட்டைத் துவக்கி வைத்தவர் ஆர். அன்னபூரணி.
5. 1937 இல் திருநெல்வேலி மாவட்ட மூன்றாவது ஆதிதிராவிடர் மாநாட்டிற்குத் தலைமை வகித்தவர் மீனம்பாள் சிவராஜ்,
6. 1938 இல் மதுரையில் நடந்த சுயமரியாதை மாநாட்டைத் துவக்கி வைத்தவர் இராஜம்மாள்.

இந்தப் பெண்கள் தங்களின் துவக்க உரை களில் பெண்ணுரிமை தொடர்பான பல்வேறு கருத்தோட்டங்களை முன்வைத்துப் பேசினர். பெண்களின் மவுனக் கலாச்சாரத்தைத் தகர்த்தெறிய பெரியார் மேற்கொண்ட முயற்சி இது. இந்த நடவடிக்கைகளால் சுயமரியாதை இயக்கத்தின் பெண் தொண்டர்கள் உற்சாகமடைந்து ஆர்வத்துடன் செயல்பட முன்வந்தனர். பேசவே தெரியாத பெண்ணாக இருந்தாலும் சில வார்த்தைகளாவது மாநாட்டு மேடையில் பேசவேண்டும் என்று பெரியார் வலியுறுத்தினார்.

பெண்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி பெண்களைப் பொதுவாழ்வில் இறக்கிவிடும் நோக்கத்தோடு சுயமரியாதை இயக்கம் நடத்திய மாநாடுகளின் வெற்றி பற்றி சிங்காரவேலர் இவ்வாறு எழுதினார்.

“சமையலறைக்குள்ளே மட்டும் முடக்கப்பட்ட பெண்கள் இன்று மேடையேறிப் பேசுகிறார்கள், பெதுமக்கள் பிரச்சனை பற்றி விவாதிக்கிறார்கள்,. ஆண்களோடு சரிநிகர் சமமாக நின்று சமூகத்தொண்டாற்றுகிறார்கள். இதற்கான பெருமைகள் எல்லாம் பெரியாருக்குத்தான் சேரும், இந்த இயக்கத்தில் இருப்பது போல் பேச்சாற்றல் மிக்க பெண்களை வேறு இயக்கங்களில் பார்ப்பது மிகவும் அபூர்வம். கடந்த 10 ஆண்டுகளில் இந்திய தேசியக் காங்கிரஸ் ஒரு சரோஜினி நாயுடுவைத் தான் உருவாக்க முடிந்தது.

சுயமரியாதை இயக்கத்தைச் சார்ந்த பெண்களுக்குத்தான் எத்தனை ஆற்றல். பெண்கள். மாநாட்டைத்தனியாகவும் உண்மையான சமத்துவ உணர்வுடனும் அவர்களே நடத்துகிறார்கள். வேறு இயக்கங்களிலே ஆண்களின் நடவடிக்கைகளுக்குப் பின்னால்தான் பெண்கள் இருக்கிறார்கள், ஆனால் நம்முடைய இயக்கத்திலோ பெண்கள் சுதந்திரமான குழுவாகச் செயல்படுகிறார்கள். ஆண்களுடன் சமத்துவத்தைக் காட்டி இயக்கப் பணிகளில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்கிறார்கள்..” கோலாலம்பூரில் ஸ்ரீ சிங்காரவேலரின் உரையை மேற்காள் காட்டிப் பி.வி. கே.அமிர்தலிங்கம் பேசியது (குடி அரசு 1940 அக்டோபர் 20), 1938இல் சென்னையில் நடந்த முற்போக்கு பெண்கள் சங்க மாநாட்டில் தான் பெரியாருக்கு “பெரியார்” என்ற பட்டத்தைப் பெண்கள் அளித்து கவுரவித்தனர். தென்னாட்டு மக்களின் சமூக சீர்திருத்தத்துக்கு உழைத்த ஈடு இணையற்ற தலைவர் பெரியார் என்று பாராட்டினார்கள். இந்த பட்டமே அவர் வாழ்நாள் முழுவதும் அவரது மறைவுக்குப் பிறகும் அவருக்கு நிலைத்துவிட்டது.

சுயமரியாதை இயக்கத்தின் மாநில மாநாடுகளுக்காக அமைக்கப்பட்ட பல்வேறு கமிட்டிகளில் உறுப்பினர்களாகப் பெண்கள் தேர்வு செய்யப்பட்டனர். உதாரணமாக 1931 இல் விருதுநகரில் நடந்த மூன்றாவது சுயமரியாதை

மாநாட்டுக் கமிட்டி உறுப்பினராக இந்திராணி பாலசுப்பிரமணியம் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1933 ஆம் ஆண்டு ஈரோட்டில் நடந்த சமதர்மக்கட்சி மாநாட்டு உறுப்பினராக எஸ்.நீலாவதி , கே. குஞ் சிதம் ஆகியோர் பிரச்சாரக் கமிட்டி உறுப்பினர் களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். கிராமங்களில் சுயமரியாதை லீக்குகளை அமைப்பது இவர்களின் பணி அ.அன்னபூரணி, இராமாமிர்தம் அம்மாள் போன்றவர்கள் சமதர்மக் கொள்கைப் பிரச்சாரகர் களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சுயமரியாதை இயக்கத்தைச் சார்ந்த பெண்கள் இப்படி மாநாடு பிரச்சாரப் பணிகளில் ஈடுபடு வதோடு இல்லாமல் போராட்டங்களிலும் தீவிரமாகப் பங்கெடுத்தனர். நாம் ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட காலகட்டத்தில் மிகவும் குறிப் பிடத்தகுந்தது இந்தி எதிர்ப்புப் போராட்டமாகும். 1937 ஆம் ஆண்டு இறுதியில் துவங்கி 1940 துவக்கம் வரை சுமார் இரண்டாண்டு காலம் இந்தப் போராட்டம் நடந்தது. இந்தியைத் தமிழ் நாட்டுப் பள்ளிகளில் கட்டாயப் பாடமாக்கி அன்றைய காங்கிரஸ் அமைச்சரவையின் முதல்வர் சி. இராஜ கோபாலாச்சாரி உத்தவு பிறப்பித்திருந்தார். இந்தப் போராட்டம் தான் சி.இராஜகோபாலாச்சாரியின் உத்தரவைப் பின் வாங்கச் செய்தது.

போராட்டத்தின் துவக்கக் கட்டத்தில் சுயமரியாதை இயக்கத்தின் பெண் தொண்டர்கள் ஊர்வலங்களிலும் கூட்டங்களிலும் பங்கெடுத்தார்கள். அந்தப் பெண்கள் தங்கள் சேலைகளில் தமிழ்க்கொடியின் படத்தை அச்சிட்டுக் கொண்டு இந்தி எதிர்ப்பு தமிழ் வாழ்த்து முழங்கங்களை எழுப்பிக் கொண்டு வந்தது ஊர்வலத்தின் தனிச்சிறப்பு (தமிழர் தலைவர் நூல்) இந்தி எதிர்ப்புக் கூட்டங்களிலும் பெண்கள் பேசினார்கள். உதாரணமாக சென்னை திருவல்லிக்கேணி 1938 செப்டம்பர் 11ஆம் தேதி நடந்த இந்தி எதிர்ப்புப் படை வரவேற்புக் கூட்டத்தில் இராமாமிர்தம் அம்மையார் நாராயணி அம்மையார் வா.பா.தாமரைக்கண்ணி அம்மையார் முந்நகர் அழகியார் உட்பட பல பெண்கள் பேசினார்கள். இந்தியை எதிர்த்து திருச்சியிலிருந்து புறப்பட்டு நடந்தே சென்னை வரைப் பிரச்சாரம் செய்து வந்த இந்தி எதிர்ப்புப் படையை வரவேற்க இந்த கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. போராட்டக் களம் நோக்கிச் சென்ற தங்கள் இயக்கத்தின் ஆண் தோழர்களுக்கு வழி அனுப்பு விழாக்களையும் பெண்களே ஏற்பாடு செய்து நடத்தினர்.

பின்னர் போராட்டம் தீவிரமானபோது பெண்களே நேரடியாகப் போராட்டக் களத்தில் குதித்துக் கைதானார்கள். பெண்களின் முதல் போராட்ட அணி 1938 நவம்பர் 14 ஆம் தேதி சென்னையில் கைதானது. அதில் டாக்டர் தர்மாம்பாள், இராமாமிர்தம் அம்மையார், பட்டம்மாள், சீதம்மாள் ஆகியோர் இடம் பெற்றிருந்தனர் ( குடி அரசு 1938 நவம்பர் 30)

தமிழ்க்கொடி பதிக்கப்பட்ட சேலையை அணிந்து பாரதிதாசனின் இந்தி எதிர்ப்பு போர்ப்படைப் பாடலைப் பாடிக் கொண்டு பெத்து நாயக்கன் பேட்டையில் உள்ள காசிவிசுவநாதன் கோயிலில் இருந்து இந்து தியாலாஜிக்கல் பள்ளி வரை இந்தப் பெண்கள் அணி ஊர்வலமாகச் சென்றது. வழியில் பல இடங்களில் இந்தி எதிர்ப்பாளர்கள் அவர்களை வரவேற்று மாலைகள் அணிவித்தனர். பள்ளி முன் மறியலுக்குச் சென்ற அவர்களை போலீசார்

**பேசவே தெரியாத பெண்ணாக இருந்தாலும் சில வார்த்தைகளாவது மாநாட்டு மேடையில் பேசவேண்டும் என்று பெரியார் வலியுறுத்தினார்.**

தடுத்து நிறுத்திக் கைது செய்தனர். அவர்களுக்கு நீதிபதி 6 வார சிறைத் தண்டனை விதித்தார். அபராதம் கட்டி விடுதலை ஆகிறீர்களா? அல்லது சிறைக்குப் போகிறீர்களா? என்று நீதிபதி கேட்டபோது அவர்கள் சிறைக்குப் போவதையே விரும்பி ஏற்றனர், அதுமுதல் அவ்வப்போது பெண்கள் போராட்ட அணிகள் களத்தில் வந்து கொண்டே இருந்தன. 1934 செப்டம்பர் 5இல் கடைசிப் பெண்கள் அணி கைதானது.. மொத்தம் 73 பெண்கள் இந்தியை எதிர்த்து மறியல் களத்தில் இறங்கி கைது செய்யப்பட்ட பிறகு சிறையில் அடைக்கப்பட்டார்கள்.

இதிலே மிகவும் குறிப்பிடப்பட வேண்டியது பல பெண்கள் தங்கள் கைக்குழந்தைகளுடன் சிறை புகுந்ததாகும். மொத்தம் 32 குழந்தைகள் தங்கள் தாய்மார்களுடன் சிறையிலிருந்தனர் (நூல்: தமிழன் தொடுத்த போர் மா.இளஞ்செழியன்) போராட்டத்தைக் கண்டு நிலைகுலைந்து விரக்தி அடைந்த ஒரு காங்கிரஸ் அமைச்சர் இப்படிக் குழந்தைகளுடன் பெண்கள் சிறை புகுவதைக்

கேலி பேசினார். தங்கள் குழந்தைகளுக்கு சிறையில் பால் கிடைக்கும் என்பதால்தான் இவர்கள் குழந்தைகளுடன் சிறைக்குப் போகிறார்கள் என்றார். சுயமரியாதை இயக்கப் பெண்கள் இந்தப் பேச்சை கேட்டுக் கொதிப்படைந்தனர் 1938 இல் வேலூரில் நடந்த சென்னை மாகாணப் பெண்கள் மாநாட்டில் அமைச்சர் தனது கூற்றைத் திருப்பப் பெறுவதோடு நிபந்தனையற்ற மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது (குடிஅரசு 1939 டிசம்பர் 28)

சுயமரியாதை இயக்கத்தின் பத்திரிக்கையான குடிஅரசு பெண்கள் போராட்டத்தில் பங்கெடுத்த செய்திகளை மிகவும் முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டது. நீதிமன்றத்தில் இந்தப் பெண்கள் வாதிட்ட விவரங்களை முழுமையாக வெளியிட்டதோடு அவர்களின் புகைப்படங்களையும் வெளியிட்டது. இந்தப் போராட்டத்தில் பெரியார் கைது செய்யப்பட்டதற்குக் கூட பெண்களைத் தூண்டிவிட்டு சிறைக்கு அனுப்பினார் என்றே குற்றம் சாட்டப்பட்டது. நீதி மன்றத்தில் அரசு வழக்கறிஞருக்கும் ஒரு பெண்ணுக்கும் நடந்த உரையாடலைக் கீழே தருகிறோம்.

**அரசு வழக்கறிஞர்:**

நீங்கள் கைகுழந்தைகளுடன் இருக்கிறீர்களே சிறையிலே இருப்பது மிகவும் அவதியானது உங்கள் கணவரும் இதனால் பாதிக்கப்படுவார் நன்றாக யோசியுங்கள் இனிமேல் இப்படி எதிர்காலத்தில் செய்யமாட்டேன் என்று கூறிவிட்டால் நாங்கள் மன்னித்து விடுகிறோம்.

**கைதான பெண்:**

எங்கள் மொழியின் வளர்ச்சிக்கும் நாட்டின் உயர்வுக்கும் எந்த சங்கடத்தையும் நாங்கள் தாங்கிக் கொள்ளத் தயாராக இருக்கிறோம்.. இதிலே தலையிடுவதற்கு எங்கள் கணவர்களுக்கு எந்த உரிமையும் கிடையாது; அதற்காக அவர்கள் கவலைப்படுபவர்களும் அல்ல. (குடிஅரசு நவம்பர் 25)

சுயமரியாமை இயக்கத்தின் செயல்பாடுகள் சுயமரியாதை இயக்கத்தின் புரட்சிகர செயல்பாடுகளில் ஒன்று சம்பிரதாய இந்துத் திருமணமுறைக்கு எதிராக சுயமரியாதைத் திருமணத்தை அறிமுகப்படுத்தியதாகும். 1926 ஆம் ஆண்டு முதல் பார்ப்பனர் அல்லாதாரிடையே சுயமரியாதைத் திருமணங்களை இந்த இயக்கம் நடத்தி வந்திருக்கிறது. குக்கிராமங்களிலே கூட இந்தத் திருமணம் நடத்தப்பட்டிருக்கிறது.

அது பற்றிய செய்திகள் விடாமல் குடிஅரசு பத்திரிக்கையில் வெளியிடப்பட்டு வந்துள்ளன.. சுயமரியாதைத் திருமணங்களைத் தவிர ஜாதி மறுப்புத் திருமணம்,விதவை மறுமணம், ஆண் பெண் சம்மதத்தோடு நடந்த மறுமணம் பற்றிய செய்திகளையும் தேடிக்கண்டு பிடித்து குடிஅரசு பத்திரிக்கை வெளியிட்டிருக்கிறது.

சுயமரியாதைத் திருமணத்தின் முக்கிய நோக்கம் இந்து திருமணச் சடங்குகளை எதிர்ப்பதாக இருந்திருக்கிறது. ஒருவனுக்கு ஒருத்தி என்ற இந்து மதச் சம்பிரதாயங்களையும் கற்பு எனும் பெண்ணடிமைக் கோட்பாடுகளையும் எதிர்ப்பதோடு பார்பபனப் புரோகிதர்களோ வேத மந்திரங்களோ இல்லாமல் இந்தத் திருமணங்கள் நடத்தப்பட்டன, இன்னும் குறிப்பாக சுட்டிக்காட்டப்பட வேண்டியது என்னவென்றால் தாலி இல்லாமல் இந்தத் திருமணங்கள் நடைபெற்றது தான். சுயமரியாதை இயக்கத்தின் பகுத்தறிவுக் கொள்கை அடிப்படையில் இராகு காலத்தில் பல திருமணங்கள் நடத்தப்பட்டுள்ளன. சில திருமணங்கள் நள்ளிரவில் நடத்தப்பட்டுள்ளன. அப்படி நடத்துவது அபசகுனம் என்று இந்துமத சம்பிரதாயத்தில் கூறப்படுகிறது. திருமணம் என்ற அமைப்பில் நிலைநிறுத்தப்பட்ட பிற்போக்குத் தனங்களுக்கு சவால் விடுவதே இந்தத் திருமணங்களின் நோக்கம்.

திருமணம் என்பது ஏதோ ஒரு தனிப்பட்ட சொந்த நிகழ்வு மட்டுமல்ல என்பதோடு அதற்கு அரசியல் சமுதாய முக்கியத்துவம் உண்டு என்ற கண்ணோட்டத்தோடு நடத்தப்பட்டிருக்கின்றன. இப்படி நடந்த மூன்று திருமண நிகழ்ச்சிகளை மட்டும் இங்கே சுட்டிக் காட்டுகிறோம். சம்பிரதாய ரீதியாக நிலை நிறுத்தப்பட்டிருந்த ஆணாதிக்கக் கோட்பாடுகளுக்கு எதிராக இவைகள் நடத்தப்பட்டவைகளாகும்.

தஞ்சை மாவட்டத்தில் வைதீகத்தில் ஊறிப்போன குடும்பத்தில் பிறந்து இளமையிலே விதவையாகிவிட்ட சிவகாமி அவர்களுக்கும், சுயமரியாதை இயக்கத்தில் தீவிரப் பங்கெடுத்துச் செயல்பட்டவரும் தமிழறிஞருமான சாமி சிதம்பரனாருக்கும் 1930 இல் திருமணம் நடந்நது. சிவகாமி அவர்கள் இந்தத் திருமணத்திற்கு முழு சம்மதம் தெரிவித்தாலும் இருதரப்புக் குடும்பத்தாரும் கடுமையாக எதிர்த்தனர். இதனால் கும்பகோணத்தில் நடக்க இருந்த இந்த திருமணத்தை பெரியார் தனது சொந்த ஊரான ஈரோட்டிலேயே நடத்த முடிவு

செய்தார் நாகம்மையார் தலைமையில் நடந்த இந்த திருமணத்தில் எந்த மதச் சடங்குகளும் இடம்பெறவில்லை. தாலியும் கட்டப்படவில்லை திருமணத்துக்குத் தலைமை ஏற்றுப் பேசிய நாகம்மையார் தாலியும் இந்து மதச் சடங்குகளும் எப்படி பெண்களை ஆண்களுக்கு அடிமைப்படுத்துவதாக இருக்கிறது என்பதை விளக்கினார்.

மணமக்கள் இருவரும் மோதிரம் மாற்றிக் கொண்டு வாழ்வில் இருவரும் உற்ற நண்பர்களாவும் சமஉரிமை படைத்தவர்களாகவும் வாழ்வோம் என்று உறுதி எடுத்தனர். மணமக்கள் தங்களை கணவன் மனைவி என்று வழக்கமாக சம்பிரதாயப்படி கூறாமல் தோழர் என்றும் நண்பர் என்றும் ஒருவரை ஒருவர் அழைத்தனர். இந்தத் திருமணத்தின் சமூக முக்கியத்துவத்தை உணர்த்துவதற்காக இரண்டாவது சுயமரியாதை மாநாட்டு மேடையிலேயே இது நடத்தப்பட்டது.

விதவைத் திருமணங்கள் சுயமரியாதைத் திருமணங்கள் மாநாட்டில் இதுபோல் ஏராளமாக நடக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி பிரச்சாரம் செய்யும் நோக்கத்தோடு அன்று மாலை சுயமரியாதை இயக்கச் செயல் வீரர்கள் இந்த மணமக்களை வைத்து ஈரோடு வீதிகளில் ஊர்வலம் நடத்தினர். சாலையின் இருபுறங்களிலும் ஏராளமான பொதுமக்கள் திரண்டு நின்று இந்தச் சம்பிராதய மறுப்பு பகுத்தறிவு மணமக்களைப் பார்த்தனர். (குடிஅரசு 11 மே 1930)

2 அதே ஆண்டில் கன்னியாகுமரிக்கு அருகே உள்ள நாகர்கோவிலில் கமலாம்பாள் நல்லசிவம் ஆகியோர் திருமணம் நடந்தது. இந்தத் திருமணம் நெசவாளர் சமூகமாகிய சாலியர் சமூகத்தில் கடுமையான பதட்டத்தை உருவாக்கியது.

இதில் மணமகள் விதவை. மணமகன் விதவன். இருவருக்குமே ஏற்கனவே நடந்த திருமணத்தின் மூலம் ஒரு குழந்தை உண்டு (குடிஅரசு 14 செப், 1930)

இந்தத் திருமணத்தை பெரியாரும் நாகை காளியப்பனும் ஒரு திரையரங்கில் நடத்திவைத்தனர். திருமண நிழ்ச்சியில் மணமகன் தன்னுடைய 5000 ரூபாய் மதிப்புள்ள சொத்துக்கள் மணமகள் பெயருக்கு மாற்றிக் கொடுத்தார். ஆண்களைப் போலவே பெண்களுக்கும் சமமான சொத்துரிமை வேண்டும் என்ற சுயமரியாதை இயக்கத்தின் கொள்கைப்படி இது நடந்தது. வழக்கத்துக்கு மாறான இந்தத் திருமணத்தைப் பார்க்க அரங்கில் 2500 பேர் கூடியிருந்தனர் பெரியார் இது போன்ற திருமணங்கள் ஏராளமாக நடக்க வேண்டும் என்று பேசினார். அ.பொன்னம்பலனார் மற்றும் எம்.மரகதவல்லி ஆகிய இருவரும் சுயமரியாதை இயக்கத்தைப் பற்றி பாடல்களைப் பாடினார் (அ.பொன்னம்பலனார் சிறந்த அறிஞர்.

குடிஅரசு பத்திரிக்கையில் தொடர்ந்து கட்டுரைகள் எழுதியவர் எம். மரகதவல்லி மாதர் மறுமணம் என்ற பத்திரிக்கையின் ஆசிரியர். இந்த பத்திரிக்கை 1930 இல் காரைக்குடியில் இருந்து வெளிவந்தது,

3.சுயமரியாதை இயக்கத்தின் செயல்வீரர்களாக இருந்த எஸ்.நீலாவதி — இராமசுப்பிரணியம் ஆகியோரது திருமணம் இராமநாதபுரம் மாவட்டம் பள்ளத்தூரில் 1930 இல் நடந்தது இந்தத் திருமணத்தில் சுயமரியாதை இயக்கத்தைச் சார்ந்த 2000 ஆண்களும் 500 பெண்களும் கலந்து கொண்டனர். இது தவிர உள்ளூர் மக்கள் சுமார் 100 பேரும் வந்திருந்தனர். (எஸ்.ஏ.கே.இராஜீ எழுதிய நீலாவதி இராமசுப்பிமணியம் வாழ்க்கை வரலாறு நூல் பக்கம் 14 – 15 வெளியான ஆண்டு 1983)

**திருமணம் என்பது ஏதோ ஒரு தனிப்பட்ட சொந்த நிகழ்வு மட்டுமல்ல என்பதோடு அதற்கு அரசியல் சமுதாய முக்கியத்துவம் உண்டு என்ற கண்ணோட்டத்தோடு நடத்தப்பட்டிருக்கின்றன.**

இந்தத் திருமணத்தின் போது ஆண் பெண் உறவு, திருமணம், பெண் விடுதலை போன்ற பிரச்சனைகள் பற்றி பார்வையாளர்கள் கேள்வி கேட்கலாம் என்று அறிவித்தனர் கேள்விகளைக் கேட்குமாறு பார்வையாளர்களை ஊக்கப்படுத்தினார்கள் பலரும் கேள்விகளைக் கேட்டனர். ஒருவர் சுயமரியாதை இயக்கம் இரண்டாவது திருமணங்களை எப்படி நடத்தலாம் என்று பெரியாரிடம் கேட்டார். அதற்குப் பெரியார் திருமணம் என்பது கணவன் மனைவிக்கு இடையே ஏற்படுகின்ற ஒரு ஒப்பந்தம்தான் இருவருக்கும் கருத்து வேறுபாடு வந்துவிட்டால் பிரிந்த செல்ல உரிமை உண்டு காலாகாலத்துக்கும் எந்த நிலையிலும் சேர்ந்துதான்

வாழவேண்டும் என்ற கட்டாயம் கூடாது என்று பதிலளித்தார். ஒரு ஆணும் பெண்ணும் தங்களது வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுக்க உரிமை பெற்றவர்கள் இருவருக்குமே இதில் சம உரிமை உண்டு; முதல் திருமணம் செய்து கொண்டாலும் கூட சேர்ந்து வாழ முடியவில்லை என்றால் விவாகரத்து செய்து கொள்ளவும் மறுமணம் செய்து கொள்ளவும் இருவருக்குமே உரிமை உண்டு என்றும் பெரியார் வலியுறுத்தினார். (குடிஅரசு 12 அக்டோபர் 1930)

சுயமரியாதை இயக்கம் இந்தத் திருமணங்களை சொந்தப் பிரச்சனை என்பதாக மட்டும் கருதாமல் இத்தகைய திருமணங்கள் பிரச்சாரம் செய்யப்பட்டு அதற்குள்ள சமூக அரசியல் பங்கை மக்களுக்கு உணர்த்த வேண்டும் என்ற நோக்கத்தோடு பொது நிகழ்ச்சிகளாகவே நடத்தப்படுகின்றன என்பதை இதிலிருந்து புரிந்துக் கொள்ள முடியும் இந்தத் திருமணங்களின் மூலம் சுயமரியாதை

**மணமக்கள் தங்களை கணவன் மனைவி என்று வழக்கமாக சம்பிரதாயப்படி கூறாமல் தோழர் என்றும் நண்பர் என்றும் ஒருவரை ஒருவர் அழைத்தனர்.**

இயக்கத்தின் பெண்ணுரிமைக் கருத்துக்களைப் பிரச்சாரம் செய்தார்கள். திருமண அரங்குகளில் சுயமரியாதை இயக்கத்தின் கொள்கை எழுதி மாட்டி வைத்திருந்தார்கள் உதாரணமாக 1928 இல் கடலூருக்கு அருகே ஒரு கிராமத்தில் நடந்த சுயமரியாதைத் திருமணத்தில் சுமயரியாதை இயக்கம் நீடுழி வாழ்க, வைக்கம் வீரர் நீடூழி வாழ்க என்ற வரவேற்பு வளைவுகளை அமைத்திருந்தனர். திருமணம் நடந்த மண்டபத்தில் சுவர்களில் சுமயரியாதை இயக்கத்தின் கொள்கைகள் செயல் திட்டங்களை விளக்கிடும் பெரிய சுவரொட்டிகளை ஒட்டியிருந்தனர்.

மிக மிகச் சாமானியர் வீட்டுத் திருமணம் ஆனாலும் சரி சமுதாயத்தில் மிகப் பெரிய நிலையிலுள்ளவர் வீட்டுத் திருமணம் ஆனாலும் சரி சுமயரியாதைத் திருமணம் எங்கே நடந்தாலும் வேறுபாடு வித்தியாசம் காட்டமல் சுயமரியாதை இயக்கத்தினர் அந்தத் திருமணங்களுக்குச் செல்வதை தங்களது கடமையாகவே கொண்டிருந்தனர். செருப்புத் தைக்கும் தொழிலாளியான மாரிமுத்து வீட்டில் நடந்த திருமணமானாலும் (மாரிமுத்து தாயம்மாள் சுயமரியதை திருமணம் கோவையில் 1930 ஏப்ரல் 20ஆம் தேதி நடந்தது குடிஅரசு 1920 ஏப்ரல் 27) அரசியலில் செல்வாக்கான தலைவராக இருந்த சவுந்திரபாண்டியன் வீட்டுத் திருமணமானாலும் சரி சுமயரியாதை இயக்கத்தினர் குறிப்பாக இந்த இயக்கத்தைச் சார்ந்த பெண்கள் இதில் கலந்து கொள்வதைத் தங்களது கொள்கைக் கடமையாகவே கருதினர். (1930 களில் சுயமரியாதை இயக்கத்தின் முன்னணித் தலைவர்களில் ஒருவர் சவுந்தரபாண்டியன் நாடார் சமூகத்தில் ஏராளமான சாதிமறுப்புத் திருமணங்களையும் விதவை மறுமணங்களையும் நடத்தியவர்) அந்தத் திருமணங்களில் பெண்ணுரிமை பற்றிப் பேசியதோடு பெண்ணுரிமைக்கான சட்டங்கள் கொண்டு வரப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினர் (குடிஅரசு 1932 டிசம்பர் 25) இந்தத் திருமணங்கள் வேகமாகப் பரவவேண்டும் என்ற முயற்சியில் சுயமரியாதை இயக்கத்தின் ஆரம்பக் காலங்களில் பெரியார் பெரும்பாலான திருமணங்களில் தனிப்பட்ட முறையிலேயே சென்று கலந்து கொண்டிருக்கிறார். குக்கிராமத்தில் நடந்தாலும் கூட அங்கேயும் பெரியார் போயிருக்கிறார் (சாமி சிதம்பரனார் எழுதிய தமிழர் தலைவர் நூல்) 30 ஆண்டுகால வரலாற்றில் சுமயரியாதை இயக்கம் பல்லாயிரக்கணக்கன சுயமரியாதைத் திருமணங்களை நடத்தியது. உதாரணமாக 1929 முதல் 1932 ரையில் சுமார் 5000 சுயமரியாதைத் திருமணங்களை இந்த இயக்கம்நடத்தியது (ஈ.சா. விசுவநாதன் எழுதிய The Political Career of EV Ramkaswamy Naicker 1983 வெளியீடு பக்கம் 991)

பெண்ணுரிமை இலட்சியத்தோடும், பார்ப்பன புரோகித மறுப்பு வடமொழி எதிர்ப்பு இலட்சியத்துடனும் இந்தத் திருமணங்கள் நடத்தப்பட்டன. 1931 ஆம் ஆண்டு திருமண நிகழ்ச்சி ஒன்றில் பேசிய பெரியார் ஒவ்வொரு புரோகித மறுப்பு சடங்கு மறுப்புத் திருமணங்களையும் சுயமரியாதை திருமணங்கள் என்று கூறாதீர்கள் காலப்போக்கில் திருமணத்தையே ஒழிக்க வேண்டும் என்பதே சுயமரியாதை இயக்கத்தின் கொள்கையாக இருக்கும் என்றார் (குடிஅரசு ஜீன் 21) ஆனால் மதச் சடங்குகள் இல்லாமல் திருமணம் நடத்துவது அந்தக் காலகட்டத்தில் ஒரு புரட்சி என்பதில் சத்தேகமில்லை.

**(கட்டுரையாளர் – பேராசிரியர் – சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனம்)**

தமிழ்நாட்டில் முதல்வர்கள், முதல்வராக வருவதற்கு துடிப்பவர்கள் ஊழல் வழக்குகளில் சிறைக்குப் போகிறார்கள். அதற்காக வெட்கப் படுவது இல்லை, இது ஒருபுறம் ஆனால் கொள்கைக்காக, அடக்குமுறைகளை எதிர்த்து சிறை சென்ற தலைவர்கள் தமிழகத்தில் உண்டு. அதிலும் பெரியார் சிறை சென்ற வரலாறுகள் கை கால் விலங்குகளோடு சிறையில் அடைக்கப்பட்டு உள்ளே கடும் வேலை வாங்கப்பட்ட வரலாறுகளும் உண்டு. ஏனைய தலைவர்களோடு பெரியார், இதிலும் தனித்துவமாக நிற்கிறார், கொள்கைக்காக சிறைக்கு போவது கூட தியாகம் அல்ல என்கிறார் பெரியார்.

*1932ம் ஆண்டு சோவியத் ரஷ்யாவுக்கு பயணம் சென்று திரும்பிய பெரியார் 'குடிஅரசு' ஏட்டில் 'இன்றைய ஆட்சி' ஏன் ஒழியவேண்டும் என்று எழுதிய கட்டுரைக்காக, அவர் மீது அடக்குமுறை சட்டம் பாய்ந்தது.*

*அந்தக் கட்டுரை ஏழை எளிய மக்களுக்கு கல்வி வாய்ப்புகளை வழங்காமல், பணக்காரர்களுக்கும், பார்ப்பன மேல் ஜாதிக்காரர்களுக்கு மட்டும், மக்களின் வரிப்பணத்தை விரயமாக்குகிறது என்ற கருத்தில் எழுதப்பட்ட கட்டுரை. பெரியாரும் குடிஅரசு பதிப்பாளர் என்ற முறையில் அவரது சகோதரி கண்ணம்மாளும் கைது செய்யப்பட்டனர். பிரிட்டிஷ் ஆட்சி மேற்கொண்ட அடக்குமுறைகள் பெரியார், அவரது சகோதரி கண்ணம்மாள் கைது செய்யப் பட்ட முறை, எப்படி இருந்தது என்பதை 'குடிஅரசு' வெளியிட்ட செய்திகளை இளைய தலைமுறைக்காக 'நிமிர்வோம்' வழங்குகிறது.*

*'இன்றைய ஆட்சி முறை ஏன் ஒழிய வேண்டும்' என்ற தலையங்கம் குடி அரசுவில் 29—10—1933 ல் வெளியானது. சரியாக 13ஆவது நாள் குடி அரசுக்கு அரசு சார்பில் உத்தரவு அனுப்பப்பட்டது.*

*அதில் அடங்கியுள்ள வார்த்தைகள் தெளிவான குற்றச்சாட்டை முன்வைத்தது.*

*கோயமுத்தூர் ஜில்லா ஈரோட்டிலிருந்து பிரசுரிக்கப்படுகின்றதும் 1931ஆம் வருஷத்திய இந்திய பத்திரிகைகள் (அவசர அதிகார) சட்டம் பிரிவுகளின்படி செக்யூரிட்டி வழங்கப் படாதது மான அக்டோபர் 29ஆம் தேதி இதழிலே 1932ஆம் வருஷத்திய கிரிமினல் சட்டத்திருத்தச் சட்டத்தில் (xx111 of 1932) திருத்தப் பெற்ற சட்டத்தின் 4ஆவது செக்ஷன் (1) சப் செக்ஷனின் (டி) பிரிவில் விவரிக்கப்பட்ட தன்மையுள்ள வார்த்தைகள் (அதன் இங்கிலீஷ் மொழிபெயர்ப்பு ஒன்று இத்துடன் அனுப்பப்பட்டிருக்கிறது)*

*பிரசுரிக்கப்பட்டிருப்பதாக லோக்கல் கவர்ன்மெண்டுக்கு தெரிய வருகிறபடியால் 1921ஆம் வருஷத்திய இந்தியப் பத்திரிக்கைகள் (அவசர அதிகார) சட்டம் (xx111 of 1932) 7ஆவது செக்ஷனில் (3) சப் செக்ஷன்படி பத்திரிகையின்*



**1932 கண்ணம்மாள், பெரியார் கைது செய்யப்பட்டபோது...**

# கைதாகும் தலைவர்கள் அன்றும் இன்றும்...

*பிரசுதாராகிய எஸ் ஆர் கண்ணம்மாள் 1932 நவம்பர் 20ம் தேதி அல்லது அதற்கு முந்தி ரூ1000 (ஆயிரம் ரூபாய்) ரொக்க பணமாக அல்லது இந்திய கவர்மெண்டு செக்யூரிட்டி பாண்டுகளாக*

கோயமுத்தூர் ஜில்லா மாஜிஸ்டிரேட்டிடம் செக்யூரிட்டி கட்ட வேண்டும் என்று லோக்கல் கவர்ன்மெண்டார் இதனால் அறிவிக்கின்றனர். (கவுன்சிலின் கவர்னர் உத்திரவுப்படி) ஆக்டிங் சீப் செக்கரட்டரி கையெழுத்திட்ட கடிதம் அனுப்பப்பட்டது.

குடி அரசு பத்திரிகை அச்சடிக்கப்படுகிற உண்மை விளக்க அச்சுக் கூட உரிமையாளர் என்ற முறையில் கண்ணம்மாளுக்கு ரூ.1000 ஜாமீன் கேட்டு மற்றொரு உத்தரவும் அனுப்பப்பட்டது. இந்த செய்தியை வெளியிட்ட பெரியார் 'குடி அரசுக்கு பாணம்' என்ற தலைப்பில் எழுதினார். இதுவரை விட்டு வைத்திருந்தார்களே என்று மகிழ்ச்சி தெரிவித்தார்.

*"குடி அரசு பத்திரிக்கை இந்திய அரசாங்கம் அவசர சட்டப்படி பாணம் போட்டாய் விட்டது அதாவது நவம்பர் மாதம் 20ஆம் தேதிக்குள் தோழர் எஸ்.ஆர். கண்ணம்மாள் உண்மை விளக்கம் அச்சுக்கூட சொந்தக்காரர் என்ற முறையில் 1000 ஆயிரம் ரூபாயும் குடி அரசு பத்திரிக்கையின் பிரசுரகர்த்தாகவும் வெளியிடுவோராகவும் இருக்கிறார் என்கின்ற முறையில் 1000 ஆயிரம் ரூபாயும் ஆக 2000 ரூபாய் கோயமுத்து ஜில்லா மாஜிஸ்டிரேட்டிடம் ஜாமீன் கட்ட வேண்டுமென்று நோட்டீஸ் சர்வு செய்யப்பட்டாய் விட்டது.*

*இதைப் பற்றி நாம் வருத்தமடையவில்லை கவர்ன்மெண்டார் மீதும் நிஷ்டூரப்படவுமில்லை இது வரையிலும் இப்படிச் செய்யாமல் விட்டு வைத்திருந்ததற்கு நன்றி செலுத்தவும் மகிழ்ச்சியடையவுமே கட்டுப்பட்டிருக்கிறோம்.*

*முதலாளி வர்க்க ஆட்சியாகிய இன்றைய அரசாங்கத்தின் சட்டப்படி குடி அரசு ஆரம்பித்த காலம் முதல் இந்த நிமிஷம் வரை குடி அரசின் ஒவ்வொரு இதழிலும் ஒவ்வொரு வாக்கியத்திலும் கண்ட விஷயங்கள் குடி அரசைக் கொல்லத்தக்க பாணம் விடக்கூடக் தகுதியுடையவைகளே என்பதில் நமக்குச் சிறதும் ஐயமில்லை ஆனால் இந்த அரசாங்கம் இது வரை விட்டு வைத்து அதிசயமேயாகும். குடி அரசு தேன்றி இந்த 8 லு வருஷ காலமாக நாளுக்கு நாள் முற்போக்கடைந்து பணக்கார ஆதிக்க ஆட்சியை ஒழித்து சரீரத்தால் கஷ்டப்படும் ஏழை மக்கள் ஆட்சியை உண்டாக்க வேண்டும் என்கின்ற கவலை கொண்டிருக்கிறது என்பதிலும் அக்காரியம் கைகூடுவதற்கு பார்ப்பனீய புரோகிதம் பாதிரிதன்மை முதலியவைகளோடு இவற்றிற்கு ஆதிக்கம் கொடுத்து வரும் எல்லா மதங்களும் ஒழிய வேண்டும் என்பதிலும் கவலையுடன் உழைத்து வந்துள்ளது என்பதில் சிறிதும் ஆட்சேபணையில்லை. இதற்காக இக்கூட்டங்களின் யோக்கியதை களை கண்ணாடிபோல் வெளிப்படுத்தும் தொண்டை பிரதானமாய்க் கருதி அதைச் செய்து வந்திருக்கிறது என்பதையும் நாம் மறைக்கவில்லை இனியும் அதைத்தான் முதலில் செய்யக் காத்திருக்கிறோம் என்பதையும் தைரியமாய் தெரிவித்துக் கொள்கிறோம். இந்தத் தொண்டுகள் செய்ய இடமில்லையானால் குடிஅரசு பத்திரிகை இருக்க வேண்டிய அவசியமில்லை.*

*சிறிது காலத்துக்கு முன் நாம் தெரிவித்துக் கொண்டபடி இனி நம்மால் நமது கடமையைச் செய்ய முடியாதென்று தெரிந்தால் நாம் இருப்பதைவிட இறப்பதுமேல் என்பது போல் குடிஅரசு தன் கடமையை ஆற்ற முடியவில்லை யானால் அது எதற்காக இருக்க வேண்டும்? ஆதலால் அது மறைந்துபோக நேரிட்டாலும் ஆசிரியன் என்கின்ற முறையில் நமக்குக் கவலை யில்லை.*

*ஆனால் பதிப்பாளர் என்கின்ற முறையிலும் பிரசுரகர்த்தா என்கின்ற முறையிலும் அதன் அத்தியந்த நண்பர்கள் என்கின்ற முறையிலும் சிலருக்கு 'குடிஅரசு' மறைவதில் அதிகக் கவலையிருந்து வருகின்றதாக அறிகிறோம், ஜாமீன் தொகை கட்டவும் முயற்சிக்கிறார்கள். விஷயம் எப்படி முடியும் என்று முடிவுகட்ட முடியவில்லை. நமது உடல்நிலை இந்த 5,6 மாதயாய் அதிகமாய் சீர் கெட்டுவிட்டது மயக்கமும், மார்வலியும் அதிகம். கால்களில் நீர் ஏறி வீக்கம் கண்டிருக்கிறது.*

*காதுகளும் சரியாய்க் கேட்பதில்லை ஆதலால் எப்படி ஓய்வெடுப்பது என்று எண்ணியதுடன் இனி உயிர் வாழ்வதும் உலகுக்குப் பாரம் என்றே எண்ணினோம் இந்த நிலையில் குடிஅரசு நின்றுபோக ஏற்பட்டால் தோழர் நாகம்மாள் மறைவு ஏற்பட்டது போலவே மற்றொரு விதத்தில் நமக்கு நன்மை என்றே கொள்ள வேண்டியதாகும். ஆனால் என்ன நடக்கின்றதோ பார்ப்போம். நிற்க இதன் பயனாய் குடிஅரசுவின் கொள்கைகள் மறைந்து*

விடுமோ என்றாவது. அது இவ்வளவு நாள் செய்துவந்த வேலைகள் கெட்டு போகுமோ என்றாவது யாரும் பயப்பட வேண்டியதில்லை, நமது கொள்கைகள் எங்கும் வேரூன்றிவிட்டன பிரசாரம் என்கின்ற கொடி எங்கும் பரவி விட்டது குடிஅரசோ சுயமரியாதைக்காரரோதான் இக்கொள்கைகளைப் பரப்ப இருக்கிறார்கள் என்பதாக இனி கருத வேண்டியதில்லை. குடி அரசும் சு.ம. காரரும் சொன்னதையே நாமும் திருப்பிச் சொல்ல வேண்டிய காலம் வந்துவிட்டதே என்று வெட்கப்பட்டுக் கொண்டு வேறு போர்வைக்குள் இருந்து வேறு பாஷையில் குடிஅரசுக் கொள்கையைச் சொல்லவும். பிரசுரம் செய்யவும் வெகு தொண்டர்களும் தலைவர்களும் இந்தியாவெங்கும் காத்துக் கொண்டிருக்கிறார்கள் ஆதலால் அவர்களுக்கும் இது சமயம் ஒரு சந்தர்ப்பம் கொடுத்தது போலவும் ஆகும்.

மற்றவை பல தோழர்களைக் கலந்த பிறகு வெளியாக்கப்படும். ஆதலால் கோவை ஜில்லா சுயமரியாதை (ஈரோடு) மகாநாட்டிற்கு குடிஅரசு அபிமானத் தோழர்கள் எல்லோரும் அவசியம் விஜயம் செய்து இது விஷயமாய் ஒரு முடிவு கட்டும் விஷயத்தில் கலந்து கொள்ள வேண்டுமாக பிரத்யேகமாய் வேண்டிக் கொள்கிறோம்." என்று பெரியார் எழுதினார்.

அதற்கு அடுத்த வாரம் வெளியான குடிஅரசில் அடுத்த வாரம் குடிஅரசு பத்திரிகை வரத்தவறும் பக்ஷத்தில் வேறு பத்திரிகை வெளிவரும் என்று மானேஜர் அறிவித்தார். டிசம்பர் 20ம் தேதி மதியம் இரண்டு மணிக்கு காவல்துறையினர் ஈரோடு 'புரட்சி' இதழ் அலுவலகத்துக்கு வந்தார்கள். மூன்று சர்க்கிள் இன்ஸ்பெக்டர்கள் நான்கு சப் இன்ஸ்பெக்டர்கள் ஆகியோருடன் பத்துக்கும் மேற்பட்ட காவலர்கள் வரும்போது அலுவலகத்தில் பெரியார் இருந்தார்.

அவரிடம் அரைமணி நேரம் விசாரணை நடத்திவிட்டு 'புரட்சி'க்காக வந்திருந்த கடிதங் களைப் புரட்டிப் பார்த்தார்கள் சந்தேகத்துக்கு இடமானதாக சந்தேகப்பட்ட 46 கடிதங்களையும் பிரஸ்—புக்கில் இருந்த மூன்று கடிதங்களையும் காவலர்கள் எடுத்துக் கொண்டார்கள். ஈ.வெ. ரா கிருஷ்ணசாமியின் (பெரியாரின் சகோதரர்) மாளிகையைப் பார்க்கவேண்டும் என்று கேட்டபோது அதற்கான அடையாளத்தையும் முகவரியையும் பெரியார் கொடுத்தார். ஆனால் அவரையும் தங்களுடன் வரச் சொன்னார்கள். காவலர்கள் அங்கு போய்விட்டு எஸ்.ஆர்.கண்ணம்மாள் வீட்டுக்கு செல்ல வேண்டும் என்று காவலர்கள் சொல்ல அங்கும் அழைத்துச் சென்றார். பெரியார் கண்ணம்மாளை காவல் நிலை யத்துக்கு வாருங்கள் என்று அழைத்துச் சென்றார்கள். அங்கு சென்ற பிறகு பெரியார் கண்ணம்மாள் ஆகிய இருவரிடமும் கம்யூனிஸ்ட் பிரசாரம் செய்ததாகவும் ராஜநிந்தனையில் ஈடுபட்டதாகவும் இபிகோ 124 பிரிவின்படி நீங்கள் கைது செய்யப்பட்டுள்ளீர்கள் எனறு அறிவிக்கப்பட்டது. மாலை 5,30 மணி இவர்கள் இருவரையும் ஏற்றிக் கொண்டு கோவை சென்றது புகை வண்டி.. மூன்று காவலர்கள் இவர்களுக்கு காவல். கோவை நகர காவல் நிலையத்தில் அன்று இரவு இவர்கள் வைக்கப்பட்டார்கள். மறுநாள் காலை கோவை

**காவல்துறையினர் ஈரோடு 'புரட்சி' இதழ் அலுவலகத்துக்கு வந்தார்கள். மூன்று சர்க்கிள் இன்ஸ்பெக்டர்கள் நான்கு சப் இன்ஸ்பெக்டர்கள் ஆகியோருடன் பத்துக்கும் மேற்பட்ட காவலர்கள் வரும்போது அலுவலகத்தில் பெரியார் இருந்தார்.**

மாவட்ட ஆட்சித் தலைவர் ஜி.டபிள்யூ. வெல்ஸ் ஐ,சி,எஸ். முன் இருவரும் நிறுத்தப்பட்டார்கள் ஜனவரி 4 (1934) வரை காவலில் வைக்க அவர் உத்தவிட்டார்.

4ஆம் தேதி விசாரணை தொடங்கியது. பெரியார் சார்பில் வாதாடிய வழக்கறிஞர் நஞ்சுண்டய்யா வழக்கு பதிவு பற்றிய ஆவணங் களைக் கேட்டு விண்ணப்பம் செய்தார். அரசு தரப்பு வழக்கை 12ஆம் தேதிக்கு ஒத்திவைக்க கேட்டுக்கொண்டது.

சிறையில் படிக்க பெரியாருக்கு வசதி ஏற்படுத்தித்தர வேண்டும் என்று வழக்கறிஞர் நஞ்சுண்டய்யா கேட்டபோது ஏற்பாடு செய்வதாக நீதிபதி உறுதியளித்தார். பழைய குடி அரசு இதழ்களைப் பார்க்கவும். அதுபற்றி விவாதிக்கவும் வசதி ஏற்படுத்தித் தரவேண்டும் என்று நஞ்சுண்டய்யா கேட்டார். இதுபற்றி சிறை அதிகாரியிடம் கேளுங்கள். அவர் அனுமதி தரவில்லையென்றால் என்னிடம் வாருங்கள்

என்று பதிலளித்தார் நீதிபதி. பெரியாரை சிறையில் இருந்து நீதிமன்றம் அழைத்து வரும்போது வண்டியில் அழைத்து வந்தார்கள் ஆனால் சிறைக்கு கொண்டு செல்லும் போது சுமார் ஒரு மைல் தூரம் நடத்தியே கூட்டிச் சென்றார்கள். 12ஆம் தேதி விசாரணை நடந்தது ப.ஜீவானந்தம், கைவல்யம், அ.பொன்னம்பலம்,. கோவை அய்யாமுத்து சி.நடராஜன், எஸ்.வி. லிங்கம், எஸ்.ராமநாதன். ஈ,வெ,கிருஷ்ணசாமி, எஸ்.ராமசாமி. ஏ.ஜி, ராமசாமி. வழக்கறிஞர் ஈ.வி.வேணுகோபால் ஆகியோர் நீதிமன்றத்துக்கு வந்திருந்தார்கள். பெரியார் கண்ணம்மாள் உட்கார நாற்காலி தரப்பட்டது அன்று பெரியார் தனது வாக்குமூலத்தை பதிவு செய்தார்.

பெரியார். கண்ணம்மாள் கைதை தொடர்ந்து வந்த ‘புரட்சி’யில் ஈ.வெ.கிருஷ்ணசாமி ஒரு தலையங்கம் எழுதினார்.பெரியாருக்கும் கண்ணம் மாளுக்கும் ஜே. போட்டது அத்தலையங்கம்.

“காரணம் ரொம்பவும் சப்பை”

எஸ். ஆர் கண்ணம்மாள் மேல்முறையீடு செய்த வழக்கு சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி கே.பி. லட்சுமணராவ் முன் விசாரணை செய்யப்பட்டது பெரியார் மேல் முறையீடும் செய்யவில்லை ஜாமீனும் கெட்டவில்லை.

இன்றைய ஆட்சி ஏன் ஒழிய வேண்டும் என்ற தலையங்கம் ராஜநிந்தனை கொண்டதுதான் என்றும் இதற்காக கோவை நீதிமன்றம் அளித்த தீர்ப்பு சரியானதுதான் என்றும் உறுதி செய்த நீதிபதி இதுவரை பெரியாரும் கண்ணம்மாளும் இருந்த சிறைக் தண்டனையே போதும் என்று கூறி விடுதலையும் செய்தார்.

மே15ஆம் நாள் ராஜமகேந்திரம் சிறையிலிருந்து விடுதலையாகி சென்னை வழியாக ஈரோடு வந்து சேர்ந்தார் பெரியார்.

அரக்கோணம் காட்பாடி ஜோலார்பேட்டை சேலம் புகைவண்டி நிலையங்களில் சுமயரியாதை இயக்கத்தவர் அவருக்கு வரவேற்பு கொடுத்தார்கள்.

இது பற்றி ’புரட்சி’ இதழில் ராஜமகேந்திரம் ஜெயிலில் வெயில் கொடுமையில் சிறிது கருத்தும் இளைத்தும் போயிருக்கிறார். ஆனால் உடல் ஆரோக்கியமாக இருப்பதாக நினைத்துக் கொண்டிருக்கிறார் சமீபத்தில் வெய்யில் கொடுமைக்காக எங்காவது குளிர்ச்சியான இடத்துக்கு போகக் கருதியிருக்கிறார் என்று குறிப்பு வந்துள்ளது. நீலகிரி மெயிலில் ஈரோடு வந்த பெரியாருக்கு அன்று மாலையே சுயமரியாதை வாலிபர் சங்கத்தில் பாராட்டுக் கூட்டம் நடந்தது. தோழர் அன்னபூரணி தலைமை தாங்கினார். டாக்டர் கிருஷ்ணசாமி, அ.ரத்தினசபாபதி, ஈஸ்வரர். ராஜம்மாள் முதலானவர்கள் பேசினார்கள் முஸ்லீம் இளைஞர்கள் சார்பாக டி.கே.பாப்ஜான் பாராட்டி வாழ்த்து மடல் வாசித்து கொடுத்தார். தொடர்ந்து பெரியார் பேசியதாவது:

”நான் சிறை வாசம் சென்று விட்டு வந்ததைப் பாராட்டுவதற்காக என்று இக்கூட்டம் கூட்டப்பட்டு என்னைப் பற்றி பலர் பலவிதமாகப் புகழ்ந்து பேசி இருக்கிறார்கள் இது ஒரு வித

**சிறைக்குக் கொண்டு செல்லும் போது சுமார் ஒரு மைல் தூரம் நடத்தியே கூட்டிச் சென்றார்கள்.**

பழக்கவழக்கத்தை அனுசரித்திருப்பதாக மாத்திரம் என நான் கருதுகிறேனே ஒழிய இதில் ஏதாவது நல்ல பொருள் இருப்பதாக நான் கருதவில்லை. முதலாவதாக இபபோது நான் மற்றவர்களைப் போல் சிறை செல்ல வேண்டுமென்று கருதி நானாக சிறைக்குப் போகவில்லை. ஆனால் சிறைக்குப் போகக் கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டால் அதற்காக பயந்து பின்வாங்காமல் அதையும் ஒரு நன்மையாகவே பயன்படுத்துக் கொள்ளலாமென்பதைக் காட்டுவதற்காகவே நான் செல்ல நேர்ந்தது.

அதாவது குடி அரசு பத்திரிகையில் என்னால் எழுதப்பட்ட ஒரு சாதாரணமானதும் சப்பை யானதுமான வியாசத்திற்ககாகத்தான் நான் சிறைக்குப் போக நேரிட்டதே தவிர மற்றபடி செய்யத் தக்க ஒரு சரியான காரியம் செய்துவிட்டு சிறைக்குப் போகவில்லை. சர்க்கார் இந்தக் குடி அரசு பத்திரிகையின் பழைய இதழ்களைப் புரட்டிப் பார்த்தால் என்னை வருடக்கணக்காய் தண்டிக்கக் கூடியதும் நாடு கடத்தக் கூடியதுமான வியாசங்கள் நூற்றுக்கணக்காகத் தென்படலாம் ஆனால் அவர்கள் அந்தக் காலத்திலெல்லாம் கவனித்தாக எனக்குத் தெரியவில்லை. அவர்கள் ஏன் கவனிக்கவில்லை என்பதை இப்போது நான்

கவனித்துப் பார்த்தால் காங்கிரஸுக்கு பாமர ஜனங்களிடத்தில் இருந்த செல்வாக்கின் பயனாய் நமது வியாசங்களை பொது ஜனங்கள் லட்சியம் செய்ய மாட்டர்கள் என்கிற தைரியத்தால் சர்க்கார் அப்போழுது சும்மா இருந்தார்கள் என்று தோன்றுகிறது.

ஆனால் இப்பொழுது இப்படிப்பட்ட சிறிய வியாசங்களையும் கண்டு இவ்வளவு வல்லமை பொருந்திய சர்க்கார் பயப்படும்படியான நிலைமை ஏற்பட்டு விட்டதென்பது நன்றாய்த் தெரிகிறது. இதிலிருந்து நாம் என்ன நினைக்க வேண்டும் இருக்கிறதென்றால் நமது அபிப்பிராயத்தை மக்கள் மதிக்க ஆரம்பித்து விட்டார்கள் என்றும் சுயமரியாதைக் கொள்கையை ஜனங்கள் ஆதரிக்கிறார்கள் என்றும் சர்க்கார் இப்போது உணர்வதாகத் தெரிகிறது மற்றும் பல புதிய புதிய தீவிரக் கொள்கைகளையும் ஜனங்கள் வரவேற்கிறார்கள் என்பதும் தெரிகிறது.

இப்பொழுதுள்ள நிலையில் ஜெயிலில் அதிக கஷ்டமில்லை முன்பு சிறிது கஷ்டம் இருந்தது உண்மைதான் 1921ம் வருடத்தில் நானும் இங்குள்ள தோழர்கள் ஈஸ்வரன். ஜெயா முதலியவர்கள் கைதியாக்கப்பட்ட போது கையில் சூட்டை போடுவதும் துன்பப்படுத்துவதுமான தொல்லைகள் மிகுந்திருந்தன அந்தக் காலத்தில் பட்ட கஷ்டங்கள் இப்பொழுதொன்றுமில்லை. அப்பொழுது இங்குள்ள தோழர் ஜெயாவை ஜெயிலில் இருந்து வண்டியில் போட்டு வெளியில் அழைத்து வரப்பட்டது. உயிர் பிழைப்பாரோ என்று கூட சந்தேகிக்கப்பட்டது. இப்பொழுது ஜெயிலில் கஷ்டமில்லை என்பதோடு என் போன்றவர்கள் அங்கு வெகுமரியாதையாக சாமி பாபுஜி என்று உள்ளிருப்பவர்களாலும் அழைக்கப்படுவதோடு கூட ஜெயில் அதிகாரிகள் பயந்து நடுங்கும் படியான நிலைமையிலேயும் இருக்கிறது. என்னைப் பொறுத்த வரையில் நான் பி.வகுப்பில் இருந்தாலும் எனக்கு வெண்ணையும் பாலும் பழமும் சில சமயங்களில் மாமிசமும் கிடைத்து வந்தது அது போல் இங்கு எனக்கு வீட்டில் கூடி திரேக நிலைமைக்கு ஏற்ற சாப்பாடு கிடைக்க மாட்டாது.

வெய்யிலில் கொடுமைதான் தாங்க முடிய வில்லை ராஜமகேந்திர ஜெயில் எவ்வளவு கேவலமான நிர்வாக முடையதாய் இருந்தாலும் கஷ்டமான ஜெயில் அல்ல. Habititual Prisoneers என்னும் கருப்புக் குல்லாய்க்கார திருடர்கள் ஜெயிலாய் இருந்த போதிலும் கைதிகள் எவ்வித கேள்வி கேட்பாடு இல்லாமல் இஷ்டப்படி உள்ளே திரியலாம். கைதிகளுக்கு வேலையும் கிடையாது. அங்கும் கஞ்சா குடியும் பீடி சிகரெட்டு குடிப்பழக்கம் வெற்றிலைபாக்கு புகையிலை போட்டு ஆனந்தப்படுவதும் சர்வ சாதாரணம். ஜெயிலுக்குள்ளேயே கைதிகள் கஞ்சா செடிகள் வளர்க்கிறார்கள். அந்தச் செடியில் ஏதாவது சில பூக்களை சொருகிவைத்து பூச்செடி மாதிரி செய்து விடுகிறார்கள் அதை ஜெயில் சூப்பிரண்டு கவனிப்பச்தில்லை. மற்ற சில்லரை அதிகாரிகள் வழக்கம் போல் அதனால் லாபமடைகின்றார்கள். நான் பல ஜெயிலில் பார்த்திருந்தாலும் ராஜமகேந்திரபுரம் ஜெயில் போல் பொருப்பற்றதும். அதிக குற்றங்கள் நடப்பதுமான ஜெயில் பார்த்ததில்லை.

**குடி அரசு பத்திரிகையில் என்னால் எழுதப்பட்ட ஒரு சாதாரணமானதும் சப்பையானதுமான வியாசத்திற்ககாகத்தான் நான் சிறைக்குப் போக நேரிட்டதே தவிர மற்றபடி செய்யத் தக்க ஒரு சரியான காரியம் செய்துவிட்டு சிறைக்குப் போகவில்லை.**

சூப்பிரண்டு நல்லவர் என்று சொல்லலாம் ஆனால் நிர்வாகத் திறமை போராது. சிப்பந்தி களுக்கு பணமே பிரதானம் அவர்கள் அடிக்கடி கைதிகளால் அவமானப்படுவதை லட்சியம் செய்வதில்லை.

அங்குள்ள டாக்டர்களும் அப்படியே, மற்றபடி நான் இப்போழுது வெளியில் வந்ததில் இந்த இரண்டு நாளிலேயே ஏன் வந்தோம் என்றே தோன்றுகிறது இப்போழுது என்ன சொல்வதேன்றே புரியவில்லை மற்றும் சிவில் விவகாரத்துக்காக அரஸ்ட் செய்யப்பட்டேன் ஆனால் காயலா நிமித்தம் இரண்டு மாதத்திற் குள்ளாகவே விடுதலை செய்யப்பட்டேன் என்றாலும் இவைகளால் எல்லாம் தேசபக்தன் என்ற பெயர் அடைய முடியவில்லை ஆனால் இப்பொழுது சர்க்கார் அந்தக் குறையை நிவர்த்தி செய்து விட்டடார்கள் இதன் பயனால் அறியாமை மிகுந்த பாமர ஜனங்களால் நான் பாராட்டடட்டக் கூடும். மற்றபடி அறிவாளிகள் நான் ஜெயில் சென்றதைப் பாராட்ட யாதொரு விஷயமுமில்லை". பெரியார் விடுலையாகி வெளியே வந்த பிறகும் காவல் துறை நெருக்கடிகள் தொடர்ந்தன.



● ஏ. சண்முகானந்தம்

# பறவைகள், விலங்குகள் மீது திணிக்கப்பட்ட ஜாதிய அடையாளங்கள்!

பார்ப்பனர்களின் இந்து மத, சாதிய, பார்ப் பனிய ஆதிக்கம் பெரும்பான்மை மக்கள் மீது மட்டுமின்றி, பறவைகள் உள்ளிட்ட உயிரினங்கள் மீது செயல்பட்டுள்ள 'பறவைகளின் மீதான பார்ப்பனியத்தின் நுண் அரசியல்' இக்கட்டுரையின் பேசு பொருளாக அமைந்துள்ளது. பறவைகள், விலங்குகள், புழுப் பூச்சிகள், தாவரங்கள், செடி, கொடிகள், நீர்வாழ் உயிரினங்கள் என தமிழக நிலப்பரப்பில் வாழ்ந்து வந்த உயிரினங்களுக்கு இம்மண்ணுக்குரிய, புறச் சூழலுக்கு பொருத்தமாகவும், அவற்றின் செயல் பாடுகளையும், நிறங்களையும் அடிப்படையாக கொண்டு பொருத்தமான பெயர்களை நம் முன்னோர்கள் சூட்டியுள்ளனர்.

*கால்நடைகளை பின்தொடர்ந்து, அவற்றின் காலடித் தடங்களில் இருந்து வெளிவரும் புழுப்பூச்சிகளை பிடித்துண்ணும் பறவையை கண்டவுடன், 'மாடு மேய்ச்சான்', மாடு விரட்டி', 'உண்ணி கொக்கு' என பொருத்தமான பெயர்களை தமிழர்கள் வட்டாரத்திற்கேற்ப சூட்டி மகிழ்ந்தனர். அதுபோலவே, இன்றைய தலைமுறை வியக்கும் விதமாக பெரும்பாலான உயிரினங்களுக்கு பொருத்தமான பெயர்களைச் சூட்டியிருந்தனர். அதில் பல பெயர்கள் சாதிய மேலாதிக்கத்திற்குள்ளாகியுள்ளது.*

*தமிழில் பெரும்பாலான உயிரினங்களுக்கு பொருத்தமான பெயர்கள் அமைந்திருக்க, தட்டான்கள்* (Dragonfly), *வண்ணத்துப்பூச்சிகள்/ பட்டாம்பூச்சிகள்* (Butterfly/Moth), *வெட்டுக்கிளிகள்* (Grosshopper), *தயிர்க்கடைப்பூச்சிகள்* (Praying Mantis), *பொன் வண்டுகள்* (Jewel Beetle) *என பூச்சிகளில் பெரும்பாலானவைகள் பொதுப் பெயர்களிலேயே சுட்டப்படுகிறது. ஆனால், ஒவ்வொரு இனத்திலும் பல நூறு வகைகள் நம் நிலப்பரப்பில் காணப்படுகிறது.*

*தமிழகத்தில் காணப்படும் சுமார் 450—க்கும் மேற்பட்ட பறவைகளில் பெரும் பாலானவைகளுக்கு பொருத்தமான பெயர் காணப்பட, வேட்டையாடிப் பறவைகளான செம்பருந்து, கரும் பருந்தின் அழகிய தமிழ்ப் பெயர்களுக்கு, இடைசெருகலாக நுழைக்கப்பட்ட*

பெயர்களில் உள்ள சாதிய மேலாதிக்கத்தின் நுண் அரசியலை பொதுவெளிக்கு கொண்டு வரும் முயற்சியே இச்சிறு கட்டுரையாக்கம். இச்சாதியம் தமிழ் மொழியோடு நில்லாமல், காலனிய ஆட்சியின் நீட்சியாக உள்ள ஆங்கில மொழியிலும் ஊடுருவியுள்ளதை வரலாற்றுப் பக்கங்கள் வேதனையோடு சுட்டிக்காட்டுகிறது. பறவைகளின் பெயர்களில் வினையாற்றியுள்ள பார்ப்பனியத்தின் நுண் அரசியலை பேசுவதற்கு முன், சங்க இலக்கியத்தில் உயிரினங்கள் குறித்த பதிவு பற்றிச் சுருக்கமாக காண்பது பொருத்தமாக இருக்கும்.

**சங்க இலக்கியத்தில் உயிரினங்கள்**

தொல்காப்பியம் தொடங்கி தமிழின் சங்க இலக்கிய நூல்களில் இயற்கை, உயிரினங்கள் குறித்த செய்திகள் அதிகளவு காணப் படுகின்றன. இன்றைய அறிவியல் கூறுவதை, பண்டைய தமிழர்கள், தங்களது நடைமுறை அறிவால் (Practical Knowledge), பல்லாண்டுகளுக்கு முன்பே பதிவு செய்துள்ளனர். மலை உச்சிகளில் வாழும், தமிழகத்தின் மாநில விலங்கான வரையாடு முதல் புலி, யானை, காட்டு மாடு என சுமார் 35—க்கும் மேற்பட்ட உயிரினங்கள் குறித்து சங்க நூல்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது. தேனீக்கள், வண்ணத்துப்பூச்சிகள் உள்ளிட்ட பல பூச்சியினங்கள் குறித்தும், சுமார் 58 பறவைகள் குறித்தும் சங்க இலக்கியங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது. சங்கம் மருவிய நூல்களில் சுமார் ஆறு பறவைகள் குறித்தும் பேசப்பட்டுள்ளன. நெய்தலில் மட்டும் காணக்கூடிய கடற்காக்கைகளை மருதத்திலோ, குறிஞ்சியிலோ, பாலையிலோ கூறப்படவில்லை. நீர்ப்பறவைகள் மருதத் திணையிலோ அல்லது நெய்தல் திணையிலோ கூறப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. குறிஞ்சி நிலத்தில் காணப்படும் பறவைகள் வேறு எந்த நிலத்திலும் கூறப்படாதது குறிப்பிடத்தக்கது.

பறவைகள் வாழும் சூழ்நிலையையும், இருப்பிடங்களையும் நன்கு கண்டுணர்ந்தே சங்கப் புலவர்கள் பாடல்களாக பதிவு செய்துள்ளனர். பூநாரையில் இருந்து உள்ளான் வரை ஏறக்குறைய 22 நீர்ப்பறவைகளை பற்றிய சுவைபட செய்திகளையும் பதிவு செய்துள்ளனர். வலசைப் பறவைகள், வாழிடப் பறவைகள் குறித்தும், பறவைகளின் காப்பிடங்கள் (Birds Sanctuary) குறித்தும் பதிவு செய்யப்பட்டுள்ளது. வலசை செல்வதற்கு முன்பு, ஆயிரக்கணக்கில் பறவைகள் ஒன்றுகூடி, சேர்ந்து செல்வதை, 'ஓசனித்தல்' என்ற வார்த்தையில் அழகுபட பாடியுள்ளனர். மூன்று வகையான வல்லூறுகள், இரு வகையான காக்கைகள், ஐந்து வகையான புறாக்கள், மூன்று வகையான பிணம் தின்னிக் கழுகுகள், இரு வகையான கழுகுகளை குறித்த செய்திகள் சங்க இலக்கியங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

'அறிவுடையவன்' என்ற பொருளில் 'ஆதன்' என்ற சொல் சங்க கால வழக்கத்தில் இருந்ததால், ஆதன்+அந்தை என்பதில் இருந்து ஆந்தை என்ற பெயர் உருவாகி இருக்கலாம் என தமிழறிஞர்கள் கருதுகின்றனர். ஆந்தையை பேரறிவுள்ள பறவையாக அக்கால தமிழர்கள் கருதியுள்ளனர். ஆந்தையை பற்றிய இத்தகைய உயர்வான கருத்தால், ‘சிறைக்குடி ஆந்தையார்’, ‘கொட்டியூர் நல்லாந்தையார்’, ‘பிசிராந்தையார்’, ‘மன்னெயில் ஆந்தை’, ‘ஒதல் ஆந்தையார்’ என அறிவில் சிறந்த புலவர்களின் பெயர்களில் ஆந்தையின் பெயரை இணைத்து, ஆந்தைகளுக்கு அழியாப் புகழை தந்துள்ளனர்.

**ஆந்தையை பேரறிவுள்ள பறவையாக அக்கால தமிழர்கள் கருதியுள்ளனர். ஆந்தையை பற்றிய இத்தகைய உயர்வான கருத்தால், ‘சிறைக்குடி ஆந்தையார்’, ‘கொட்டியூர் நல்லாந்தையார்’, ‘பிசிராந்தையார்’, ‘மன்னெயில் ஆந்தை’, ‘ஒதல் ஆந்தையார்’ என அறிவில் சிறந்த புலவர்களின் பெயர்களில் ஆந்தையின் பெயரை இணைத்து, ஆந்தைகளுக்கு அழியாப் புகழை தந்துள்ளனர்.**

‘கூகை’, ‘குரால்’, ‘குடிஞை’, ‘ஊமன்’, ‘ஆண்டலை’, ‘பகண்டை’, ‘சிறுகூகை’, ‘சாக் குருவி’ என பல்வேறு பெயர்களில் பதிவு செய்துள்ளதுடன், ஆறு வகையான ஆந்தைகளை பாடியுள்ளனர். பேராந்தையான கொம்பன் ஆந்தையை ‘பெரும் புள்’ என அதன் உருவத்தைக் கொண்டு பதிவு செய்துள்ளனர். ஆந்தையின் பொதுவான நிறமான பிங்கல நிறத்தைக் (பழுப்பு நிறம் — Brown) கொண்டு ‘பிங்கலை’, ‘ஊன்’, ‘இருடி’ (முக்காலம் உணர்ந்த ஞானி), ‘கின்னரம்’ என்று நிகண்டுகள் சுட்டுகின்றன. ஆந்தைகளின் வாழ்விடமான மரப்பொந்துகளில் முட்டை யிடுவதை புறநானூறு (364), நற்றிணை (83) பாடல்கள் சுட்டிக்காட்டுகின்றன. ஆந்தையின் உருண்டு திரண்ட அழகிய கண்களை ‘தெண்கண்’, ‘கழல்கண்’ என்றும் சங்க இலக்கியங்கள் வர்ணிக்கின்றன. காலை, மாலை மற்றும் அந்திச் சாயும் நேரங்களில் மரங்களின் அடியில் உதிர்ந்த இலைகளுக்கிடையில் சிறு சிறு பூச்சிகளைத் தேடி உண்ணும் இயல்பு கொண்டதால், வலசை பறவையான, 'Indian Pitta' (Pitta brachyuran)—விற்கு, 'ஆறு மணிக்குருவி', தோட்டக்கள்ளன்' என

பொருத்தமான பெயர்களை சூட்டினர். ஆறு மணிக் குருவிக்கு தமிழகத்தின் நிலப்பரப்பிற்கும், வட்டாரத் தன்மைக்கேற்ப, காசிக்கட்டிக் குருவி, பொன்னுத் தொட்டான், மொட்டைவால் குருவி (இப்பறவை வாலற்று இருக்கும்), பச்சைக் காடை என சுமார் எட்டு பெயர்கள் வழக்கத்தில் இருக்கின்றன.

இன்றைய தமிழகத்தில், 'மைனா' (மைனா — வடமொழிச் சொல்) என பொதுவாக குறிப்பிடப்படும் பறவையை, 'நாகணவாய்'ப் புள் என சங்க இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன. 'புள்' என்பது பறவைகளை குறிக்கும் சொல்லாக வழக்கத்தில் இருந்துள்ளது. திருவாரூர் கீழத் தஞ்சையில் நார்த்தம் சுளையின் நிறத்தை, நாகணவாய்ப் பறவையின் கண்களின் மேலும் கீழுள்ள மஞ்சள் திட்டோடு தொடர்புப் படுத்தி, 'நார்த்தாங்குருவி' என்று இயற்கையின் ஒத்திசைவோடு அழைக்கின்றார்கள்.

தமிழில் உயிரினங்களுக்கான பெரும்பாலான பெயர்கள் நடைமுறை அறிவால் உருவானது. முறையான பொதுக்கல்வி என்பது, பிரிட்டிஷ் ஆட்சிக்குப் பிறகே அறிமுகமாகியது.

1900—களுக்குப் முன்பு அரும்பிய பறவையியல், சுற்றுச்சூழல், பறவை நோக்கல் என்ற துறைகள் பிரிட்டிஷ் ஆட்சியில் மேலதிகாரிகளின் பொழுதுப்போக்காகவும், பெருமைக்காகவும் இருந்த நிலையில், ஆங்கில வழிக்கல்வியை முதலில் கைக்கொண்ட பார்ப்பனர்கள் மற்றும் மேட்டுக்குடியினர் மட்டுமே ஆர்வம் கொண்ட துறைகளாக மேற்கண்டவைகள் விளங்கின. அந்த பின்புலத்தில் இருந்தும் பறவைகளின் பெயர் மாற்றங்களை ஆராய வேண்டியுள்ளது. ஆண்டாண்டு காலமாக பெரும்பான்மை மக்களை ஒடுக்கி வந்த சாதிய, தீண்டாமை கருத்தியலை பறவைகளின் மீது (நல்ல தமிழ்ப் பெயர்களை மாற்றி) ஏற்றியதையும், இடைச்செருகலாக செய்து வந்ததையும் வரலாற்றின் பக்கங்களில் இருந்து அறியமுடிகிறது. சாதியத்தின் பேரால் மக்களை மேல்—கீழ் அடுக்காக பார்ப்பனியம் பிரித்ததோடு நில்லாமல், நகரங்கள், ஊர், நீர்நிலைகளுக்கு மட்டுமின்றி உயிரினங்களுக்கு இருந்த நல்ல தமிழ்ப் பெயர்களை வடமொழி, சமஸ்கிருதப் பெயர்களாக மாற்றியதற்கான காரணங்களை ஆராய்வது இன்றைய தேவையாகிறது.

தமிழகத்தில் சுமார் 450—க்கும் மேற்பட்ட பறவைகள் தமிழக நிலப்பரப்பில் வாழ்ந்து வருகின்றன. அதில் கொன்றுண்ணிப் பறவைகள் எனச்சுட்டப்படும், 'வேட்டையாடிப் பறவைகளும்' அடங்கும். இரையை வேட்டையாடி வீழ்த்துவதில் திறன் படைத்தவைகளாக வேட்டையாடிப் பறவைகள் விளங்குகின்றன. அதற்கேற்ப, அவற்றின் அலகும், உடலமைப்பும், கால்களும் திறன் பெற்றவைகளாக தகவமைந்துள்ளன. வேட்டையாடிப் பறவைகளான செம்பருந்து, கரும்பருந்து என்ற இரு பறவைகளின் மீது வழக்கத்தில் இருந்து மறைந்த பெயர்களும், சாதிய மேலாதிக்கத்தை வெளிப்படுத்தி வருகின்றன. ஆங்கிலப் பெயரும், இப்பறவைகளின் நிறங்களையும், அழகையும் கொண்டு கட்டமைக்கப்பட்டதாக அமைந்துள்ளது.

**செம்பருந்து** (Brahminy Kite - Haliastur Indus)

தலை முதல் கழுத்து வரை பளிச்சிடும் வெள்ளை நிறமும், அலகு வெளிர் நீலமாக முனை மட்டும் வெளுத்து, கீழ் வளைந்து உறுதியாக காணப்படும். விழிப்படலம் பழுப்புக் கலந்த மஞ்சள் நிறத்தில் தென்படும். உடலின் மேற்பகுதி முழுதும், வயிறும், வாலும் செந்நிறமாக தோற்றமளிக்கும். கால்கள் வெள்ளை கலந்த மஞ் சள் நிறத்தில் உறுதியாக காணப்படும். வளராத பறவைகள் பழுப்புக் கலந்த செந்நிறமாக இருக்கும். நீர்நிலைகள், மீன்பிடி கரையோரங்களில் மீனவர்களின் வலைகளிலுள்ள மீனை எடுத்துக் கொண்டு செம்பருந்துகள் பறப்பதை காணலாம். மீன் முக்கிய உணவாக இருந்தாலும், நண்டு, நத்தை, பாம்பு போன்றவற்றையும் உணவாகக் கொள்ளும் இயல்புடையது. கடற்கரையோரங்களில் அமைந்துள்ள பனை மரங்களில் இரவுத் தங்குவதாக சங்க இலக்கியப் பாடல் வரிகள் செம்பருந்தை குறிப்பிடுகின்றன.

**கரும் பருந்து அல்லது கள்ளப் பருந்து** (Black Kite - Milvus migrans)

கரும்பழுப்பு நிற உடலில் மெல்லிய, வெளிறிய பழுப்பு நிறக்கோடுகளுடன் காணப்படும். கீழ் நோக்கி வளைந்த உறுதியான அலகின் முனைப் பகுதி கருப்பு நிறத்திலும், மேற்பகுதியில் மஞ்சள் திட்டும் தென்படும். விழிப்படலம் பழுப்பு நிறத்திலும், இரையை பிடிப்பதற்கேற்ற வலுவான கால்கள் வெளிறிய மஞ்சள் நிறம், சற்று நீண்ட பிளவான வால் என கரும்பருந்து தோற்றமளிக்கும். நகரங்கள், கிராமங்கள், நகரின் புறநகர்ப்பகுதிகள் என மனிதர் வாழ்விடங்களை சார்ந்து இருக்கும். மனிதர்கள் நடமாட்டம் இருந்தாலும் அச்சப்படாமல் கோழிக்குஞ் சுகளை கவர்ந்து செல்வதால், தமிழகத்தின் தென் மாவட்டங்களில், 'கள்ளப் பருந்து' என்ற பெயரில் சுட்டப்படுகிறது. குப்பை மேடுகள் நிறைந்த இடங்களில் பறந்து திரிந்து எலிகள், ஓணான் போன்றவற்றை பிடித்துண்ணும்



**உயர்வு/தாழ்வு, உயர்பிறப்பு/தாழ்பிறப்பு, இழி பிறவினன், தூய்மை/தீட்டு என தாழ்த்தப்பட்ட மக்கள் மீது தீண்டாமையை திணித்த பார்ப்பனியம், பறவைகளின் மீது, ‘அழகு/அழகின்மை’ என்ற பாகுபாட்டை ஏற்றி, தனது மேலாதிக்கத்தை எவ்வடிவிலும் கோலோச்ச துடிக்கிறது. அதன் வெளிப்பாடாகவே, செம்பருந்து என்ற அழகிய தமிழ்ப் பெயர், ‘பார்ப்பனப் பருந்தாகி’யது. கரும்பருந்து என்ற பெயர், ‘பறைப் பருந்தாக’ மாறியது.**

*இயல்பு கொண்டது. கிராமப்புறங்களிலுள்ள இறைச்சிக் கடைகளை சுற்றியும் பறந்து திரிவதைக் காணலாம். பரபரப்பான சென்னை மாநகரின் மத்திய பகுதியான சென்ட்ரல் மின் ஊர்தி நிலையத்திற்கு எதிர்ப்புறமுள்ள கூவம் ஆற்றங்கரையை ஒட்டியுள்ள பகுதியில் பல கரும் பருந்துகள் சுற்றித் திரிவதை பார்த்து மகிழலாம்.*

*உயர்வு/தாழ்வு, உயர்பிறப்பு/தாழ்பிறப்பு, இழி—பிறவினன், தூய்மை/தீட்டு என தாழ்த்தப்பட்ட மக்கள் மீது தீண்டாமையை திணித்த பார்ப்பனியம், பறவைகளின் மீது, 'அழகு/அழகின்மை' என்ற பாகுபாட்டை ஏற்றி, தனது மேலாதிக்கத்தை எவ்வடிவிலும் கோலோச்ச துடிக்கிறது. அதன் வெளிப்பாடாகவே, செம்பருந்து என்ற அழகிய தமிழ்ப் பெயர், 'பார்ப்பனப் பருந்தாகி'யது. கரும்பருந்து என்ற பெயர், 'பறைப் பருந்தாக' மாறியது. அமெரிக்க அரசின் இலட்சினையாக உள்ள* 'Bold Eagle'-*இன் அழகையும், அதிகாரத்தையும் பெற்ற சாயலாக, 'செம்பருந்தை' கண்ட பார்ப்பன 'பறவையியல் அறிவாளி' எவரோ திட்டமிட்டு, 'பார்ப்பனப் பருந்து' என்ற பெயரைச் சூட்ட, பல பத்தாண்டுகளுக்கு அதுவே நிலைநிறுத்தப்பட்டது. இதற்கு எதிர்மறையாக, செம்பழுப்பு நிறத்தில், சற்று வெளிறிய மெல்லிய வெள்ளைக் கோடுகளோடு தோற்றமளிக்கும், 'கரும் பருந்தை' தீண்டத்தகாத மனிதனுக்கு ஒப்பீடு செய்து, 'பறைப் பருந்து' என்ற பெயரை பார்ப்பனிய அறிவாளி எவரோ சூட்ட நீண்ட நாட்களுக்கு அதுவே வழக்கத்திலும், நூல்களிலும் இருந்தது வேதனைக்குரிய செய்தியாக உள்ளது.*

*தமிழகத்தில் பறவைகள் உள்ளிட்ட உயிரினங்களுக்கு வட்டாரத்திற்கேற்ப பலப் பெயர்கள் வழங்கப் பெறுகின்றன. 'பறைப் பருந்து', 'பார்ப்பனப் பருந்து' போன்ற பெயர்கள் வட மொழி ஆதிக்கத்தால் விளைந்தவை என்றும்,இவை இடைக்காலத்தில் நுழைக்கப்பட்டிருக்கலாம் என்றும் தமிழிலக்கியத்தில் பாடப்பெற்றுள்ள உயிரினங்கள் குறித்து பல நூல்களை எழுதியுள்ள தமிழறிஞர் பி.எல்.சாமி கூறுகிறார்.*

*பறவைகளின் பெயர்களில் சாதிய குறியீட்டிற்கான அடிப்படைக் காரணத்தை ஆதாரப்பூர்வமாக அறியமுடியவில்லை. இருப்பினும்,தாம் முதன்முதலாகநுழைந்த ஆங்கில வழிக் கல்வியின் மூலமும் பெருந்திரளான மக்கள் சமூகத்தை அடக்கியாள முடியும் என்ற நம்பிக்கை கொண்ட பார்ப்பனச் சமூகம், இவ்விரண்டு பறவைகளின் ஆங்கிலப் பெயர்களை,* 'Pariah Kite' *(கரும்பருந்து),* 'Brahminy Kite' *(செம்பருந்து) என மாற்றியதில் இருந்து அறியமுடிகிறது. சாதிய படிநிலையில் மனிதன் அல்லது பறவைகள் (உயிரினங்கள்) என்ற வேறுபாடில்லாமல் கருத்தியலை திணிப்பதிலேயே தங்களது வெற்றி அடங்கியுள்ளதாக பார்ப்பனர்கள் கருதி, தமிழில் மட்டுமின்றி ஆங்கிலத்திலும் பெயர் மாற்றம் செய்திருப்பார்கள் என்று கருத்தும் தவிர்க்க இயலாதபடி உள்ளது. அதற்கு உதவும் எந்த வழியையும் நிராகரிக்கவில்லை. உயிரினங்களின் மீதான சாதிய குறியீடாக விளங்கும் பெயர்கள் குறித்து அயோத்திதாசப் பண்டிதரின் கீழ்கண்ட மேற்கோள் முக்கியத்துவம் பெற்றது. 'நம்முடைய பிராமண வேசங்களும் நிலைத்து சுகமடையலாம்*

என்று எண்ணி மிலைச்ச வேசப் பிராமணர்களும், இத்தேச சிற்றரசர்களுக்கும், கருப்பாக இருக்கும் பருந்தைப், 'பறைப் பருந்தென்றும்' (கரும்பருந்து — Black Kite) வெண்மெயாயிருக்கும் பருந்தைப், 'பாப்பாரப் பருந்தென்றும்' (செம்பருந்து — Brahmini Kite) கருப்பாக இருக்கும் மைனாவைப், 'பறை மயினாவென்றும்', கருப்பாக இருக்கும் பாம்பைப், 'பறைப் பாம்பு' என்றும், வெண்மெயாய் இருக்கும் பாம்பைப், 'பாப்பாரப் பாம்பு' என்றும் சொல்லி வரும்படியானக் கற்பனையில் விழுந்து பார்ப்பானென்னும் மொழியையும், பறையன் என்னும் மொழியையும் பரவச் செய்து வந்தார்கள்' என்று கூறுவதோடு, அவர்கள் கற்பித்துள்ளவாறு கறுப்பாயிருக்கும் நாயைப் பறை நாயென்றும், வெண்மெயாயிருக்கும் நாயைப் பாப்பார நாயென்று வழங்கினால் அம்மொழி தங்களை இழிவுபடுத்தும் என்று கருதி பறை நாயென்னும் மொழியை மட்டிலும் பரவச் செய்து திராவிட பௌத்தர்களை இழிவுபடுத்தி வந்தார்கள்' என்ற அழகு/அழகின்மையை தங்களுக்கு சாதகமாக பார்ப்பனர்கள் பயன்படுத்தியதை அயோத்திதாசர் குறிப்பிடுகிறார். (அடைப்புக் குறிக்குள் இருப்பது கட்டுரை ஆசிரியரால் இடப் பட்டது)

மேலும், 'மிலைச்சர்களை அடுத்தோர்கள் யாவரும் அக்காலத்தில் கல்வியற்றோர்களாதலின் பறைப் பருந்து யாது, பாப்பாரப் பருந்து யாது, பறை மயினா யாது, பாப்பார மயினா யாது, பறைப் பாம்பு யாது, பாப்பாரப் பாம்பு யாது என்றும் பெயர் வேதங்களும் பொருள் வேதங்களும் அறியாது அவர்கள் போதனை மேறை சொல்லி வந்தார்கள் என்பதுடன், சீவசெந்துக்களின் மூலமாகவும், புராணங்களின் மூலமாகவும் கீர்த்தனைகளின் மூலமாகவும் பறையன் என்னும் பெயரைப் பரவச் செய்தது மட்டுமன்றி ரெவரெண்டு ஜெ.பி.ராட்ளரென்னுந்துரை அகராதி ஒன்று எழுதிய காலத்தில் அவருக்கு எடுத்துதவியோராயிருந்தவர்கள் 1. வள்ளுவப் பறை, 2. தாதப் பறை, 3. தங்கலான் பறை, 4. நூற்சாலிப் பறை, 5. குழிப்பறை, 6. தீப்பறை, 7. முரசப்பறை, 8. அம்புப் பறை, 9. வடுகப்பறை, 10. ஆவியப் பறை, 11. வழிப்பறை, 12. வெட்டியாரப் பறை, 13. கோலியப் பறை என்று இன்னுஞ்சில நூதனப் பெயர்களை வகுத்து அப்புத்தகத்தில் பதிய வைத்து அதினாலும் பறையன் என்னும் பெயரைப் பரவச் செய்தனர் என அயோத்திதாசர் பறையன் என்ற பெயர் பரவிய தன்மையை விவரிக்கிறர்.

அயோத்திதாசப் பண்டிதர் கூறுகின்ற பின்புலத்தில் இருந்தே, பறவைகளின் பெயர் மாற்றத்தை அவதானிக்க வேண்டியுள்ளது. அழகிய பறவைக்கு சாதிய மேலடுக்கிலுள்ள பார்ப்பனப் பெயரும், சற்று நிறம் மங்கியுள்ள பறவைக்கு தாழ்ந்த, தீண்டத்தகாத சாதியின் பெயரும் சூட்டும், 'பார்ப்பனியத்தின் நுண் அரசியலை' புரிந்துக் கொண்டு, இந்தியச் சமூகத்தில் சாதியத்தின் வேர்களான இந்து மதத்தை மட்டுமின்றி அது தாங்கியுள்ள அரசதிகாரத்தையும், சமூக உற்பத்தி முறையையும், பண்பாட்டு மேலாதிக்கத்தையும் முற்றாக வேரறுக்க வேண்டியுள்ளது.

அக்காலக்கட்டத்தில் தமிழில் 'பசுமை படைப்பிலக்கியம்' மெல்ல வளர்ந்து வந்தது. சாதிய உயர்வாக்கமாக கருதப்படும் பறவைகளின் பெயர் மாற்றம் குறித்து, தமிழ் பசுமைப் படைப்பிலக்கிய வரலாற்றில் எந்தவொரு எழுத்தாளரும் பேசாதது மட்டுமின்றி சிறிய அளவிலான எதிர்ப்போ, கட்டுரையோ எழுதாதது வியப்பளிக்கும் செய்தியாகவே உள்ளது. திருச்சியில் நம்பிராஜன் என்ற சமூக ஆர்வலர் மட்டுமே தொடர்ச்சியாக பல கூட்டங்களில் பறவைகளின் சாதிய பெயருக்கு எதிர்ப்பு தெரிவித்து வந்தார் என்பதை நண்பர்களின் மூலம் வாய்மொழியாக கேட்க முடிந்தது. தமிழின் மூத்த சூழலியல் எழுத்தாளர் ச.முகமது அலி, தனது 'இயற்கை; செய்திகள் சிந்தனைகள்' நூலில் செம்பருந்து குறித்த பதிவை செய்துள்ளார்.

'பறைப் பருந்து' என்ற இழிபெயர் 1990—களின் இறுதிப்பகுதியில் இருந்து தமிழில் வெளிவந்த பறவையியல் நூல்களில் பெயர் மாற்றம் செய்யப்பட்டு, 'கரும்பருந்து' அல்லது 'கள்ளப் பருந்து' என்ற வழக்கத்திற்கு வந்தது. இப்பெயருக்கான எதிர்ப்பையோ, மாற்றத்திற்கான பின்புலத்தையோ, கண்டறிய போதுமான ஆதாரங்கள் இல்லை என்பதே வருத்தத்திற்குரியதாக உள்ளது.

'Pariah Kite' என்ற தாழ்ந்த சாதியின் பெயரை முன்னொட்டாக கொண்டுள்ள ஆங்கிலப் பெயரை, சர்வதேச பறவைகள் அமைப்பு (அமைப்பின் பெயரையும் நாளது வரை கண்டறிய முடியவில்லை) 1990—களுக்கு பிற்பாடு பறவைகளின் நடத்தையியல், செயல்பாடு, கூடமைக்கும் முறை பற்றி நுட்பமாக அவதானித்து பொருத்தமான பெயர்களை மாற்றினர். அப்போது, 'Pariah Kite' என்ற சாதிய இழிச்சொல் விலகி, 'Black Kite' என்ற பொருத்தமான பெயர் வழக்கத்திற்கு வந்தது. அயோத்திதாசப் பண்டிதர் குறிப்பிட்டபடி, நாய் என்பது 'இழிவான உயிரினம்' என்ற மேட்டுக்குடிப் பார்வையில்,

*'பார்ப்பன நாய்'* என்ற சொல்லாடலை நுட்பமாக தவிர்த்து, *'பறை நாய்'* என்பதை மட்டும் தமிழகம் முழுக்க பரவச் செய்ததன் நுண் அரசியலை உணர்ந்துக் கொண்டால் மட்டுமே, துவக்கக் காலத்திலிருந்து மேட்டுக்குடியினருக்கான துறையாக அறியப்படுகிற பறவையியலில், 'Pariah Kite' என்ற இழிபெயர் நீக்கினாலும், 'Brahminy Kite'-யை தொடர்ச்சியாக வழக்கத்தில் வைத்திருப்பதன் பின்புலத்திலுள்ள அரசியலை புரிந்துக் கொள்ள முடியும்.

பறவையியல், பறவை நோக்கல், சுற்றுச்சூழல் போன்ற துறைகள் தொடக்கக் காலத்தில் இருந்து படித்த மேட்டுக்குடியினருக்கானதாக (பார்ப்பனர்கள்) இருந்தது. காலப்போக்கில் தொடர்ச்சியான மாற்றங்களால் அடித்தட்டு மக்களும், இளைஞர்களும் இத்துறையில் ஆய்வு செய்ய தொடங்கினார்கள் என்பதே யதார்த்தமாக உள்ளது. அந்தவகையில், மேட்டுக்குடியினருக்கான துறையில், மேட்டுக்குடியினருக்கான சொல்லாடல் இருப்பது மிகவும் அவசியம் என்பதை உணர்ந்த பார்ப்பனர்கள், 'Brahminy Kite' என்ற உயர்வான பெயரை இன்றளவும் தக்கவைத்துக் கொண்டுள்ளனர் என்பதை புரிந்து கொள்ளமுடிகிறது.

இந்திய பறவையியல் அறிஞரான சாலிம் அலி தொட்டு பல பறவையியல் நிபுணர்களும் பறவைகளின் ஆங்கில பெயர்களில் இருந்த இத்தகைய சாதிய உயர்வு/தாழ்வு சொல்லை நீக்குவதற்கான முயற்சியோ, எதிர்ப்போ, கண்டனமோ தெரிவிக்கவில்லை. அதுகுறித்த புரிதலையாவது கொண்டிருந்தார்களா என்பதும் ஐயமாக உள்ளது. இன்றளவும் சர்வதேச அளவில், 'Brahminy Kite' தான் வழக்கத்தில் இருக்கிறது. அப்பறவையின் உடல் அமைப்பு, நிறத்திற்கேற்ப, 'Brown Kite' *(செம்பருந்து)* பொருத்தமாக இருப்பினும், இன்றளவும் எந்த பறவையியலாளரும் அதற்கான முயற்சி எடுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியளவில் வெளிவரும் ஆங்கிலப் பத்திரிகையான, 'own to Earth'-இல் (Wednesday 31 January 2007) *2007*—ஆம் ஆண்டு பேராசிரியர் கோவிந்தசாமி அகோரமூர்த்தி, 'Avoid using caste names for India's beasts' என்ற தலைப்பில் ஒரு கட்டுரையை எழுதியுள்ளார். வேறு ஏதும் பதிவுகள் வந்ததாக அறியமுடியவில்லை. சாதிய பெயரை தாங்கி நிற்கும் மேலும் சில பறவைகளின் பெயர்களை அறிந்துக் கொள்ள வேண்டியது இத்தருணத்தில் அவசியமாகிறது. பார்ப்பன வாத்து (Shelduck Ruddy), நாமத்தலை வாத்து (Wigeon), குடுமிப் பருந்து, (Crested Hawk Eagle) மற்ற பெயர்கள் குடுமி எழால், குடுமியான்), நாமக்கோழி (Common Coot), பிராமணி மைனா (Black Headed Myna or Brahmini Myna மற்ற தமிழ்ப் பெயர்கள் பாப்பாத்தி பக்கி, பாப்பாத்தி நாகணவாய்), பிராமணக் குருவி என பலப் பறவைகளின் பெயர்களில் சாதிய மேலாதிக்கத்தை தாங்கி நிற்கும் பார்ப்பனியம், வெவ்வேறு பெயர்களில் முன்னொட்டாக இருக்கிறது. இதில் பல பறவைகளின் பெயர்கள் மாற்றத்திற்குள்ளானாலும், சில பறவைகளின் பெயர்கள் மாறாமலே உள்ளது.



**இன்று நம் உணவு மேசையில் என்ன உணவு இருக்க வேண்டும் என்பதை 'பார்ப்பனியம்' தீர்மானிக்கும் சக்தியாக வளர்ந்திருக்கிறது.**

இதன் தொடர்ச்சியாக, சமீபத்தில் வெளி வந்துள்ள *'வண்ணத்துப்பூச்சிகள்'* பற்றிய அறிமுகக் கையேட்டில், Pansy என்ற வண்ணத்துப்பூச்சிகளின் குடும்பத்திற்கு *'வசீகரன்'* என்று வடமொழிப் பெயரைத் தாங்கி வந்துள்ளது. *'நாமத் தாவி'* (Common Banded Awl - Hasora chromus) *(நாமக்கோழி* (Common Coot - Fulica atra என்று ஒரு பறவையின் பெயர் உள்ளதும் இங்கு நினைவுக் கூரத்தக்கது) என்ற பெயரை எதன் அடிப்படையில் சூட்டியுள்ளனர் என்பது புரியாத புதிராகவே உள்ளது. இவ்வண்ணத்துப்பூச்சியின் கரும் பழுப்புநிற இறகுகளின் நடுவில் வெண் பட்டைக்

காணப்படுவதாலேயே, இப்பெயர் வந்திருப்பதாக கருத இடமிருக்கிறது. மேலும், நாமத்தலை வாத்து, குடுமிப் பருந்து போன்ற பறவைகளின் முன்னொட்டும் சாதிய மேலாதிக்கத்தின் குறியீடாகவே அமைந்துள்ளதை கூர்ந்து நோக்க வேண்டியுள்ளது. இங்கு நமக்கு ஒரு முதன்மையான கேள்வி எழுகிறது. பறவையின் தலையில் வெள்ளைப் பட்டை, வண்ணத்துப்பூச்சியின் இறகுகளில் வெள்ளைப் பட்டை, பறவையின் தலையில் முடிக்கற்றைகள் என்று வந்தாலே, சாதிய உச்சத்திற்கேற்ப, பெயரிட்டு கொண்டாடுவதை எந்தவகையில், இன்னும் எத்தனை ஆண்டுகளுக்கு அனுமதிப்பது...?

பறவைகள், வண்ணத்துப்பூச்சிகள் உள்ளிட்ட உயிரினங்களுக்கான தமிழ்ப் பெயர்களை சூட்டும் போது அந்தந்த துறை சார்ந்த வல்லுனர்கள் மற்றும் மொழியியல் அறிஞர்களின் கலந்தாய்வின் அடிப்படையிலும், ஒத்திசைவின் அடிப்படையில் பெயரிடுவதில் என்ன சிரமம் இருக்கப் போகிறது என்பது தெரியவில்லை. படித்த மேட்டுக்குடி மக்களுக்கானதாக பறவையியல், பறவை நோக்கல், சுற்றுச்சூழல் துறைகள் இருந்ததால், பறவைகளின் பெயர்களில் ஊடாட்டம் செலுத்திய பார்ப்பனியத்தின் நுண் அரசியலை, 'கவனமாக' கடந்த சென்ற தமிழக சூழலியல் அறிஞர்களின் அக்கறையின்மையால், இன்று நம் உணவு மேசையில் என்ன உணவு இருக்க வேண்டும் என்பதை 'பார்ப்பனியம்' தீர்மானிக்கும் சக்தியாக வளர்ந்திருக்கிறது. அந்தவிதத்தில், 'Brahminy'-யை ஒழித்து, 'Brown'—யை நிறுத்துவதோடு, எதிர்ப்பு பண்பாட்டை குறிப்பாக 'தமிழர் பண்பாட்டை' நிறுத்தவேண்டிய தேவையும் உள்ளது. பார்ப்பனியத்தை எவ்வடிவிலும் எதிர்க்க வேண்டிய அவசியத்தை உணரும் தருணமாகவும் இது அமைந்துள்ளது. அந்தவகையில், 'பறவைகளின் மீதான சாதிய மேலாதிக்கத்தின் நுண் அரசியலை' புரிந்துக் கொண்டு, அதற்கெதிரான செயல்பாடுகளை முன்னெடுப்பதும், உயிரினங்களுக்கு தொல் தமிழர்கள் சூட்டியிருந்த, அழகிய, மறக்கப்பட்ட தமிழ்ப் பெயர்களை கண்டறிவதுமே, 'Brahminy Kite' வெளிப்படுத்தும் செய்தியாகும்.

**நன்றிக்குரிய தரவுகள்**


01. அலாய்சிஸ், ஞான., (தொகுப்பாசிரியர்) — அயோத்திதாசப் பண்டிதர் சிந்தனைகள் முதல் தொகுதி — நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம் — சனவரி 2011.

02. சண்முகானந்தம், ஏ., — தமிழகத்தின் இரவாடிகள் — தடாகம் வெளியீடு — 2014.

03. சாமி, பி.எல்., — சங்க இலக்கியத்தில் புள்ளின விளக்கம் — திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற் பதிப்புக கழகம், லிமிடெட், 1976

04. பானுமதி, ஆர்., — வண்ணத்துப்பூச்சிகள் — க்ரியா பதிப்பகம் — சனவரி 2015

05. ரத்னம், க., — தென்னிந்தியப் பறவைகள் — தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்.

06. ரத்னம், க., — தமிழில் பறவைப் பெயர்கள் — உலகம் வெளியீடு — மே 1998.

07. ரத்னம், க., — தமிழ்நாட்டுப் பறவைகள் — மெய்யப்பன் தமிழாய்வகம் — அக்டோபர் 2002

08.http://www.downtoearth.org.in/blog/avoid-using-caste-names-for-indias-beasts-5480>



**கட்டுரையாளர் – 'காடு' இதழ் ஆசிரியர்,**
**சூழலியல் எழுத்தாளர் மற்றும் ஒளிப்படக் கலைஞர்**


## சங்கராச்சாரிகளின் 'குடுமிபிடி' சண்டைகள்

ஆதிசங்கரர் என்ற கேரள பார்ப்பனர், புத்தமதத்தை வீழ்த்தி அழிப்பதில் பெரும்பங்காற்றியவர். அவர் நான்கு சங்கர மடங்களை மட்டுமே உருவாக்கினார். பத்ரிநாத், சிருங்கேரி, துவாரகா, பூரி ஆகிய நான்கு மடங்களே அவை. ஆதிசங்கரரால் உருவாக்கப்பட்டவை 50க்கும் மேற்பட்ட சங்கராச் சாரிகள் வந்து விட்டனர். டேராடூன் நகரிலிருந்து செயல்படும் சமூக செயல்பாட்டாளர் அஜய்குமார் என்பவர் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் நாட்டிலுள்ள சங்கராச்சாரிகள், சங்கர மடங்கள் குறித்த தகவல்களை மனித வளத்துறை அமைச்சகம் உள்ளிட்ட பல்வேறு மத்திய அமைச்சகங்களிடம் கேட்டார். இது குறித்த எந்த தகவலும் தங்களிடம் இல்லை என்று அமைச்சகங்கள் கூறிவிட்டன. ஆக எந்த சங்கரமடமும் அரசு கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்படவில்லை என்பது தெரிகிறது. இந்த நிலையில் கடந்த மகாசிவராத்திரியன்று அரித்துவாரைச் சார்ந்த அச்சுயதானந்தா என்ற பார்ப்பன சாமியார், தன்னை துவாரகபீட சங்கராச்சாரியாக அறிவித்துக் கொண்டார். ஏற்கெனவே சுவாமி சுவரூபானந்தா என்பவர் உள்ளிட்ட இரண்டு சங்கராச்சாரிகள், இந்த மடத்தில் இருக்கிறார்கள். புதிதாக தன்னைத் தானே அறிவித்துக் கொண்ட சங்கராச்சாரியை எதிர்த்து, நீதிமன்றத்தில் கிரிமினல் வழக்கு தொடரப் போவதாக சுவரூபானந்தா அறிவித்திருக்கிறார். அதிகாரத்தைக் கைப்பற்ற, சாமியார்களுக்குள் நடக்கும் போட்டிகளால் மக்கள் மன்றத்தில் மரியாதை கெட்டுப் போய்விடும் என்றும், இந்த சங்கராச்சாரிகள் பலருக்கு இந்து சாஸ்திரங்கள், சடங்குகள், ஆச்சாரங்கள் முழுமையாக தெரியாது என்றும், 'டைம்ஸ் ஆப் இந்தியா' நாளேட்டுக்கு பல "சாது"க்கள் பேட்டி அளித்திருக் கிறார்கள். சங்கராச்சாரிகளாக இருப்பவர் அனைவருமே பார்ப்பனர்கள். இந்த நிலையில் 'காயத்ரி திரிவேணி பிரயாக்பீடம்' என்ற மடத்தின் சங்கராச்சாரியாக, ஒரு பார்ப்பன அம்மையார் இருக்கிறார். அவரது பெயர் திரிகை பகவந்த சரசுவதி. தன்னைத் தானே சங்கராச்சாரி என்று அறிவித்துக் கொண்டுள்ள இவர், சங்கராச்சாரிகள், பெண்களை இப்பதவிக்கு அனுமதிக்க மறுப்பதைக் கண்டித்துள்ளார். எனது சங்கராச்சாரி பதவியை அங்கீகரிக்கக் கோரி அலகாபாத் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளேன். தீர்ப்பு எனக்கு சாதகமாகவே இருக்கும் என்கிறார், இந்தப் பெண் சங்கராச்சாரி.

# ஜக்கி அவர்களே... பதில் சொல்லுங்கள்!

**ஜக்கி வாசுதேவ் தொலைக்காட்சிகளுக்கு பேட்டி அளித்து வருகிறார். அவரது பேட்டி தொடர்பான பல கேள்விகளை நாம் எழுப்ப வேண்டியிருக்கிறது.**

- ‘ஆதியோகி சிவன்’ சிலை — அதைப் பார்ப்பவர்கள் நினைவி லிருந்து நீங்கவே நீங்காது; அந்த வகையில் 112 அடியில் வடிவமைத்திருக்கிறோம் என்கிறார். அப்படியானால் உருவ வழிபாடே கூடாது என்று இதுவரை இவர் கூறிவந்த கருத்துக்கு விடை கொடுத்து விட்டாரா?
- ஆதியோகி சிலை கடவுள் சிலை அல்ல; அது சிவன் சிலையும் அல்ல என்கிறார் ஜக்கி. அப்படியானால் அந்த சிலையில் சிவனின் அடையாளத்தைக் குறிக்கும் — கழுத்துப் பாம்பு; தலையில் சந்திரன் உருவங்கள் இடம் பெற்றிருப்பது ஏன்?
- எனது மய்யம் அமைந்த பகுதியில் ஒரு அங்குலம்கூட வனப்பகுதி கிடையாது; இந்தப் பகுதிகளில் நடமாடும் மான்களை வேட்டையாடி மான் கறி சாப்பிட்டவர்கள், எங்கள் கட்டிடம் வந்த பிறகு, அது கிடைக்காமல் போனதால் எங்களை எதிர்க் கிறார்கள் என்கிறார். அப்படியானால் மான்கள் நடமாடக்கூடிய, அதன் மேய்ச்சல் பகுதியில்தானே இந்த மய்யம் கட்டப்பட்டிருக்கிறது. இதை அவரே ஒப்புக் கொள்கிறாரா?
- ஈஷா நிறுவன அதிகாரிகள் முறையான அனுமதியின்றி கட்டிடங்களை கட்டி வருவதால் நகர்ப்புற மற்றும் ஊரக திட்டமிடல் துறை அதிகாரி வேலைகளை நிறுத்துமாறு 2.11.2012இல் தாக்கீது அனுப்பியதோடு, 24.12.2012 அன்று, அந்த இடத்தை மூடி சீலிடு வதற்கு தாக்கீது அனுப்பப்பட்டதையும், இது நீதிமன்றத்தில் அரசு சமர்ப்பித்த மனுவில் இடம் பெற்றிருப்பதையும் அவரால் மறுக்க முடியுமா?
- இந்த மய்யத்துக்கு யார் வேண்டுமானா லும் வரலாம்; அனைவருக்கும் கதவு திறந்தே இருக்கிறது என்பதை உணர்த்தவே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதமர் மோடியை அழைத்தோம், என்கிறார் ஜக்கி. அனைவருக்கும் பொதுவானதுதான் அந்த மய்யம் என்றால் முஸ்லிம், கிறிஸ்தவர்களையும் சேர்ப்பீர்களா? அங்கே தரப்படும் யோகா, ஆன்மீகப் பயிற்சிகளுக்கு கட்டணம் வாங்குவது கிடையாதா?
- 5 இலட்சம், 7 இலட்சம் கட்டணமாக செலுத்தி, மய்யத்தில் சேர்த்த தங்கள் வீட்டுப் பிள்ளைகளை அங்கே வெளி நாட்டுக் காரர்களுக்கு சேவை செய்ய கட்டாயப்படுத்தப்படுகிறார்கள் என்று காவல்நிலையங்களிலும் நீதிமன்றங்களிலும் புகார்களும், வழக்குகளும் வந்திருக்கின்றனவே, இதற்கு அவரது பதில் என்ன?
- திருமணம் செய்து கொள்ளாமல் ‘பிரம்மச்சரிய’ வாழ்க்கையை போதிக்கும் மய்யத்தின் குரு தானும் திருமணம் செய்து கொண்டு தனது மகளுக்கும் ஆடம்பராக திருமணம் நடத்தியது ஏன்?
- 15,000 ஆண்டுகளுக்கு முன்பே தோன்றியவர், ஆதியோகி. அவர் 112 யோக கட்டளைகளை கூறியிருக்கிறார் என்கிறார் ஜக்கி. 15,000 ஆண்டுகளுக்கு முந்தைய வரலாறுகள் இருக்கிறதா? அதற்கு சான்றுகள் உண்டா?

- ஆதியோகிக்கு மதம் கிடையாது என்கிறார் ஜக்கி. அப்படியானால் இந்துமதப் பண்டிகை நாளான 'மகா சிவராத்திரி' நாளை அந்த சிலை திறப்புக்கு தேர்வு செய்தது ஏன்? மோடி 'மகாசிவராத்திரி' பெருமையைத் தானே அந்த விழாவிலும் பேசினார். ஈஷா மய்யம் மதம் கடந்தது என்றால், சிவராத்திரி முழுதும் கண் விழித்தால், 'சிவலோக பதவி' அடையலாம் என்ற இந்து மதக் கொள்கையை ஏற்று, இரவு முழுதும் கண் விழித்து, ஆண்டுதோறும் கூடி கும்மாளம் போட்டு, வன விலங்குகளை மிரட்டும் 'சிவராத்திரி' கொண்டாட் டங்களை நடத்துவது ஏன்?
- 'இந்து' என்பது மதமல்ல; அது இந்த தேசம். இந்த தேசத்தில் உள்ள மண்புழுகூட 'இந்து' மண்புழுதான் என்கிறார், ஜக்கி. இது ஆர்.எஸ்.எஸ் பேசும் இந்துராஷ்டிர கொள்கை அல்லவா? சங்பரிவாரங்களின் இந்துத்துவத்தைப் பரப்புவதற்கான புதிய தந்திரங்களே இந்த மய்யத்தின் நோக்கம் என்று கூறினால், அதை அவரால் மறுக்க முடியுமா? 'இந்து' என்பது 'தேசம்' என்றால், தேசத்துக்கு இந்த பெயரை சூட்டியது யார்? இந்த தேசம் 'உரு வாகும்' போதே பெயரையும் சேர்த்துக் கொண்டு உருவாகியதா?
- கடவுள் நம்பிக்கையில் மூழ்கி, கடவுளிடம் வேண்டுதல்களை வைக்கும்போது அவை நிறைவேறாத நிலையில் கடவுள் நம்பிக்கை குறைந்து வருவதால், இளைய தலைமுறையிடம் 'வேண்டுதல்களை' தவிர்த்து, தன்னைத் தானே உளத் தூய்மைப்படுத்திக் கொள்வதே 'ஆதியோகி சிவனின்' சிலை நிறுவியதன் நோக்கம் என்கிறார் ஜக்கி. ஆக, இளைய தலை முறையிடம் கடவுள் மத நம்பிக்கைகள் குறைந்து வருவதால், அதை உயிர்ப்பிக்க கடவுள், மதங்களுக்கான புதிய கருத்துகளை கட்டமைக்கும் முயற்சியில் ஜக்கி இறங்கியிருக்கிறாரா?
- மனிதன் தனக்குத்தானே சுயத்தைத் தேட வேண்டும் என்பதுதான். இவரின் தத்துவம் என்றால், இதைப் பரப்புவதற்கு ஒரு நிறுவனம் தேவையா? ஒரு குரு தேவையா? ஒரு நிறுவனத்தில் ஒப் படைத்துக் கொண்டு அதற்கு இலட்சக் கணக்கில் நிதி தந்து ஒரு குருவின் வழி காட்டலில்தான் ஒரு மனிதன் தனக்குள் தனது 'சுயத்தை' தேட முடியுமா?
- உடல் உழைப்பையும் ஏதோ ஒரு வேலை வாய்ப்பில் கிடைக்கும் ஊதியத்தை யும் சார்ந்து வாழும் கோடானுகோடி மக்கள் அடிப்படை வாழ்வாதாரப் பிரச்சினை களுக்கே போராடுகிறார்கள். கோடி கோடியாக பணத்தை செலவிட்டு ஆடம்பர வாழ்க்கையில் புரளுகிறது, ஒரு கூட்டம். இந்த இரண்டு பிரிவினரையும் அப்படியே தக்க வைத்துக் கொண்டு அவர்களின் வாழ்நிலையை மாற்றாமல் தங்களுக்குள் 'சுயத்தை'க் கண்டறிந்தாலே வாழ்க்கை முழுமையாகிவிடும் என்று ஜக்கி கூறுகிறாரா? ஜக்கியின் 'உபதேசம்' செல்வந்தர்களுக்கா? ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட மக்களுக்கா? அன்றாடம் காய்ச்சிகளின் வாழ்க்கைக்கான உத்தர வாதம் ஆன்மிகத்துக்குள் அடங்கியிருக் கிறது என்று ஜக்கி கூறுகிறாரா?
- யோக நிலை என்ற உச்சத்தை அடைந்துவிட்டதாகக் கூறும் 'யோக குரு' கோபப்படலாமா? தன்னை எதிர்த்து, கேள்விகள் வரும்போது சீறுவதும் சினத்தைக் காட்டுவதும், தன்னை 'ஜக்குரு' என்று அழைக்காமல் பெயர் சொல்லி அழைக்கலாமா என்று தன்னகந்தையில் மூழ்கிக் கிடப்பதும், தன்னை எதிர்ப்பவர்கள் மூளை இல்லாதவர்கள் என்று ஆத்திரத்தின் உச்சிக்குப் போய் வார்த்தைகளைக் கொட்டுவதும்தான், யோக நிலையின் அடையாளங்களா? அல்லது சராசரி மனிதர்களின் உணர்வுகளா? 'ஜக்கி' பதில் சொல்வாரா?
- 'இது நான் பணம் கொடுத்து வாங்கிய ஜமீன் (நிலம்). இங்கே எந்த சட்ட மீறலும் இல்லை' என்று பேசும் ஜக்கி அவர்களே! உங்களுக்கு அவ்வளவு பணம் எங்கிருந்து வந்தது? 112 யோகக் கலைகளின் வழியாக நீங்களே தவமிருந்து யோக நிலையை எட்டியதால் பணம் தங்கள் காலடியில் தானாக வந்து வீழ்ந்ததா? அல்லது பெரும் செல்வத்தைத் திரட்டிய பிறகு அதை முதலீடாக்கி யோக நிலைக்கு வந்து சேர்ந்தீர்களா? பதில் சொல்லுங்கள்! ●






# வாசகர்களிடமிருந்து...

**நன்னன் நேர்காணல்**

நிமிர்வோம் இதழில் பேராசிரியர் நன்னன் அவர்களின் பேட்டி — இளைஞர்களுக்கு உந்து சக்தியாக இருந்தது. பெரியார் இயக்கம் எதிர் நீச்சலில் கொள்கைகளை மக்களிடம் கொண்டு சென்ற வரலாற்றை — இளைய தலைமுறைக்கு கொண்டு செல்ல வேண்டும். பேராசிரியர் நன்னன் — மொழியியல் அறிஞர் என்ற பார்வை மட்டுமே எங்களிடம் இருந்தது. அவர் பெரியாரியச் சிந்தனையில் ஆழமானப் பற்றுகொண்டு — அந்த நெறியை வாழ்க்கையாக்கிக் கொண்டவர் என்பதை பேட்டியிலிருந்து அறிந்தோம்.

**-வே.கண்ணன், வில்லிவாக்கம்**

**மேக்நாட் சாகா**

பஞ்சாங்கமும் அறிவியலும் பஞ்சாங்கம் அறிவியலுக்கு எதிரானது என்பதை விஞ்ஞானி மேக்நாட் சாகா அறிக்கையிலிருந்து வெளி யிட்டிருந்தது மிகவும் சிறப்பு. 'நிமிர்வோம்' கட்டுரையை படித்தபிறகு தேவிகாபுரம் சிவா நூலை தேடிப்போய் வாங்கிப் படித்தேன். கல்வியில் மிகச்சிறந்த மாணவனாக இருந்தாலும் — சமூகத்தின் தீண்டாமைக் கொடுமையை அவர் அனுபவித்திருக்கிறார்.

காலில் செருப்பு அணியாமலே சொந்த ஊருக்கு நடந்தே சென்றிருக்கிறார். சொந்த கிராம மான சியாத்தாலி (இப்போது வங்கதேசம்) யில் சரசுவதி கோயிலுக்கு வழிப்படச் சென்ற அவரை பார்ப்பன அர்ச்சகர் விரட்டி அடித்த போதுதான் சாதியச் சமூகத்தின் கொடுங்கோன்மையை அவர் உணர்ந்து, அப்போது முதற்கொண்டே இந்து மதத்தையும்—கடவுள் நம்பிக்கையையும் உதறித் தள்ளி இருக்கிறார். நோபல் பரிசுக்கு நான்கு முறை அவர் பரிந்துரைக்கப் பட்டிருந்தும் கூட அவருக்கு அது மறுக்கப் பட்டிருக்கிறது. நோபல் பரிசு பெற்ற சி.வி. இராமன் தொடர்ந்து சாகாவின் புகழ் பரவ விடாமல் செய்த திரைமறைவு சூழ்ச்சிகளைப் படித்தபோது நெஞ்சம் குமுறியது .

அமெரிக்காவின் ராக்பெல்லர் அறக்கட்டளை — சாகாவின் ஆய்வுக்கு 2000 பவுன்ட் நிதி உதவி வழங்க முடிவு செய்த நிலையில், அப்போது அமெரிக்காவில் சுற்றுப்பயணத்தில் இருந்த சி.வி.இராமன் 'சாகா ஓர் அறிவியலாளரே தவிர ஆராய்ச்சியாளர் அல்ல என்று கூறி நிதி கிடைப்பதை தடுத்திருக்கிறார். இந்த உண்மையை கல்கத்தாவில் 1994 ல் நடந்த சாகா நூற்றாண்டு விழாவில் பங்கேற்று பேசிய அமெரிக்க வரலாற்று ஆய்வாளர் டி வோர் கின் தனது உரையில் வெளிப்படுத்தினார். பொதுவாக நோபல் பரிசை காலனி நாடுகளின் விஞ்ஞானிகளுக்கு மேற்கத்திய நாடுகள் வழங்குவது இல்லை. அதையும் மீறி சி.வி.இராமன், சீனிவாச இராமானுஜம் போன்ற பார்ப்பனர்களுக்கு கிடைத்தது என்றால், அந்த அளவுக்கு பார்ப்பன 'லாபி' (அழுத்தம் தரக்கூடிய செல்வாக்கு) வலிமையாக வேலை செய்தது. அதற்கு ஒரு உதாரணமாக நிகழ்வு, இந்தியாவைச் சார்ந்த விஞ்ஞானி சந்திரசேகர் ஒரு பார்ப்பனர்.

இவரை அமெரிக்காவின் "இயர்க் வானியல்" ஆய்வு கூடத்துக்கு ஆய்வாளராக அனுப்பி வைக்க பார்ப்பன லாபி முயற்சித்தது. இதற்காக உலகப் புகழ்பெற்ற விஞ்ஞானி ஆட்டோஸ்பரூவ் என்பவரிடம் பார்ப்பனர்கள் பரிந்துரை கடிதம் ஒன்றை எழுதி வாங்கினார்கள். அந்த கடிதத்தில் ஸ்ட்ரூவ் எழுதிய பரிந்துரைதான் மிகவும் முக்கியமானது ."சந்திரசேகர் உலகின் தலைசிறந்த விஞ்ஞானி. நோபல் பரிசுப்பெற்ற சி.வி.இராமனின் அண்ணன் மகன்'' என்று தகுதிகளை குறிப்பிட்டதோடு, கூடுதல் தகுதியாக "பிராமண வகுப்பில் பிறந்தவர்"என்று குறிப்பிட்டிருந்தார். சந்திரசேகர் ஒரு மேற்கத்தியர் அல்லாதவர் என்ற குறைப்பாட்டை "பிராமணனாக'' பிறந்தார் என்ற "தகுதி" சரிப்படுத்தி விடுகிறது. இப்படி ஏராளமான தகவலை இந்த நூலில் படித்ததை "நிமிர்வோம்" வாசகர்களிடம் பகிர்ந்து கொள்ளவே சற்று விரிவாக எழுத நேரிட்டது. தமிழக ஏடுகள் இருட்டடித்த மேக்நாத் சாகா என்னும் புரட்சிகர தலித் விஞ்ஞானியின் கட்டுரையை தேடிப்பிடித்து வெளியிட்ட " நிமிர்வோம் " இதழைப் பாராட்ட வேண்டும்.

**அரங்கராசன், மயிலாப்பூர்**

**"நல்ல நேரம்'' மோசடி**

குழந்தை பிறந்தநாள் நேரம், நட்சத்திரம் இந்து பண்டிகைகள் அனைத்துமே பஞ்சாங்கத்தைப்

பார்த்துதான், புரோகிதர்களும் சோதிடர்களும் கணிக்கிறார்கள். "அக்னி நட்சத்திரம்" "செவ்வாய் தோஷம்'' என்று கணிக்கப்பட்டவர்கள் திருமணத்துக்கு துணையான பொருத்தம் கிடைக்காமல், ஆண்டுக் கணக்கில் திருமணம் தள்ளிப் போடப்படுகிறது.

"ராகுகாலம்'' "எமகண்டம்'' என்று குறிப் பிடப்படும் நேரங்களில் "நல்ல'' செயல்கள் நடத்தக் கூடாது என்று நம்புகிறார்கள். இவை எல்லாமே தவறான கணக்குகளின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டவை என்ற உண்மையை "சோதிட பலன்'' வெளியிடும் ஏடுகளும், இதழ்களும் மக்களுக்கு தெரிவிக்காமலே இருப்பது எவ்வளவு பெரிய மோசடி., கி.பி 500 லிருந்தே நாள் கணக்கு பெரும் பிழையோடு பின்பற்றப்பட்டு வந்திருக்கிறது. ஓர் ஆண்டுக்கான நாள் 365 . 258756 என்று "ஆரிய சித்தாந்தம்'' என்ற நூல் போட்ட கணக்கு உண்மையான ஆண்டுக் கணக்கை விட 0.01656 நாள் நீண்டது என்றும், இந்தப் பிழையோடு கணிக்கப் பட்ட பஞ்சாங்க கணக்கு 1952 ம் ஆண்டில், ஆண்டுக்கு 365 நாட்களை விட 23 நாட்கள் கூடுதலாகவே இருந்து வருகிறது என்ற உண்மையை சாகா தலைமையில் அமைந்த விஞ்ஞானிகள் குழு நிருபித்திருக்கிறது.

இந்த பிழையை 1400 ஆண்டுகளாக பஞ்சாங்க தயாரிப்பாளர்கள் கணக்கில் கொள்ளாததால், பொங்கல் தீபாவளி உட்பட ஒவ்வொரு பண்டிகையும் 23 நாட்கள் கழித்தே கொண்டாடி வருகிறோம். நல்ல நாள் ராகுகாலம் எமகண்டம் பார்ப்பவர்கள் இதற்கெல்லாம் என்ன பதிலை வைத்திருக்கிறார்கள் ?

**மகிழினி. திருவரங்கம்**

### ''டிரம்பின் இந்துத்துவம்'' குறித்து

டிரம்பின் இந்துத்துவம் கட்டுரை சரியான நேரத்தில் வெளிவந்திருக்கும் சரியான பார்வை. பார்ப்பனிய இந்துத்துவம் அமெரிக்காவில் செயல்பட துவங்கி விட்டது. அரசியல் அனுபவமே இல்லாத தொழிலதிபர்தான் டிரம்ப். தேர்தல் களத்தில் தொடக்கக் காலத்தில் பேசியதை ஒரு கோமாளியின் பேச்சுக்களாகவே அமெரிக்கர்கள் கருதினர். பிறகு டிரம்ப் அமெரிக்க கலாச்சார தேசியம் என்ற இந்துத்துவ வடிவத்தை கட்டமைத்த போதுதான், இவ்விவாதம் உசுப்பி விடப்பட்டது வெள்ளை நிற வெறி தொழிலாளர்கள் பேராதரவு கிடைத்தது. இந்த இனவாத கருத்தியலை வடிவமைத்தவர் ஸ்டீபன் கே.பேனன் (Stephen k. bannon ) என்பவர். இவர் அமெரிக்காவிலேயே பெரிதும் விளம்பரமாகாத ஒரு இணையதளத்தின் நிர்வாகத் தலைவராக இருந்தவர். வெள்ளை நிறவெறிக் கொள்கையையும், இஸ்லாமிய வெறுப்பையும் பரப்பி வந்த இணையதளம் அது. தேர்தலின் கடைசி கால கட்டங்களில் டிரம்பின் ஆலோசகரானார். இப்போது டிரம்பின் தத்துவார்த்த குரு அவர்தான். உலகிலேயே அதிகாரமிக்க இரண்டாவது நபர் என்ற எல்லையில் நிற்கிறார் அமெரிக்காவின் தேசிய பாதுகாப்புக் குழு கூட்டத்தில் பங்கேற்கும் உரிமைகளைப் பெற்று, டிரம்பின் கொள்கை அணுகு முறைகளை அவரே தீர்மானித்து வருகிறார்.

இந்து ஆங்கில நாளேட்டில் ( மார்ச் 03, 2017) வெளிவந்த ஒரு நடுப்பக்க கட்டுரை இந்த தகவல்களை வெளியிட்டிருக்கிறது. ஆர்.எஸ். எஸ் கருத்தியலான கலாச்சார தேசியம் "இந்து தேசியவாதம்'' போன்றவற்றை இங்கே மோடி பேசுவதற்கும், டிரம்பின் கருத்தியலுக்கும் வேறுபாடு ஏதும் இல்லை. மோடியின் ஆலோசகராக செயல்படும் ஆர்.எஸ்.எஸ் செயலாளர்களில் ஒருவரான மதன்ராம் என்னும் பார்ப்பனர் மோடிக்கும் ஆர்.எஸ்.எஸ் சுக்குமிடையே உறவுப் பாலமாக செயல்படுகிறார்.

மோடியின் வெளிநாட்டு பயணத்துக்கு முன் கூட்டியே ஏற்பாடுகள் செய்வதும், அந்த நாடுகளில் இந்துத்துவ பார்ப்பன சக்திகளை ஒருங்கிணைப்பதும், இந்துத்துவ பார்வையில் கொள்கைகளை உருவாக்குவதும் இவர்களின் வேலை. இந்திய வரலாற்றிலேயே அய் நாவில் இஸ்ரேலுக்கு ஆதரவாகவும், பாலஸ்தீனத்துக்கு எதிராகவும், அண்மையில் இந்திய பிரதி— நிதி செயல்பட்டிருப்பதையும் சுட்டிக்காட்ட வேண்டும். ஜாதி அமைப்பை உருவாக்கி, ஜாதி மேலாதிக்கத்தை நிறுவனப்படுத்தி வரும் பார்ப்பனர்கள் இட ஒதுக்கீட்டில் மட்டும் ஜாதி கூடாது என்று ஜாதி எதிர்ப்பாளர்களாகி விடுகிறார்கள்.

அதே போல் உலக மயமாக்கல் என்ற கொள்கையை தூபமிட்டு உரம் போட்டு வளர்த்து பயனடைந்த அமெரிக்கா இப்போது அமெரிக்கர்களின் பாதுகாப்பு (Protectionism ) என்ற போர்வையில் உலகமயமாக்கலை எதிர்க்க தொடங்கியிருக்கிறது . "பலித்தவரை லாபம்'' என்ற பார்ப்பனீயம் குறித்த பெரியாரின் புரிதல் எவ்வளவு துல்லியமானது இப்போது புரிகிறது.

**செந்தில் குமார், நெல்லை.**

# பெண் சில கேள்விகள்...



முதன் முதலாக
பெண்ணை வருணிக்கத்
தேர்ந்தெடுத்த வார்த்தை எது?

ஆதாமின் முத்தம்
ஏவாளின்
எந்த பாகத்திற்கு
முதலில் கிடைத்திருக்கும்?

பெண்ணின் கூந்தலுக்கு
முதன் முதலில்
சூட்டப்பட்ட பூ எது?

பெண் முதன் முதலில்
எதற்காக
ஆடைக்குள் தன்னை
மறைத்துக்கொண்டாள்?

பெண்ணின் கண்ணீர்
முதன் முதலில்
எதன் பொருட்டு
சிந்தப்பட்டிருக்கும்?

வரதட்சிணையால்
வதைக்கப்பட்ட
முதல் முதிர்கன்னி
மாத விலக்கும் நின்றுபோனதை
யாரிடம் சொல்லியிருப்பாள்?

தாய்ப்பாலுக்குப் பதில்
கள்ளிப் பால் ஊட்டப்பட்ட
முதல் பெண் சிசு எது?

ஆண்களின் தேசத்தில்
கேள்விகளுக்குள் சிக்கிய
பெண்ணை மீட்க
எந்தப் பெண்
முதன் முதலில்
போராளியானாள்?

அவளின்
கடைசி வாரிசிடம் கொடுத்து
கிழித்தெறியச் சொல்லுங்கள்
இந்தக் கவிதையை

**பழநிபாரதி**

